மாதப் பத்திரிகை

ஆசிரியர் :

கா. வே. ராமசந்திரன்

மூன்றாவது வால்யூம் விக்கிரம வருஷம் வைகாசிப் பகுதி

15—5—1940.

கவிதா விமர்சம்

1.	சீதாப் பிராட்டியும் ருக்மிணிப் பிராட்டியும்	வே. திருப்பதி நாயுடு	... 307
2.	ஸ்ரீ ராமசந்திரன்	"மாயக்கூத்தன்"	... 308
3.	சங்கர நாராயணன்	"துகளன்"	... 310
4.	அவனிபவனமும் கிரிபவனமும்	"கௌசிகன்"	... 311
5:	நியாய விளக்கம் (படங்கள்)	C. சிவராமமூர்த்தி	... 312

அநுஷ்டானப் பகுதி.

1.	ஒரு ஊரில் மூன்று மஹான்கள்	"வஸிஷ்ட பாரதி"	 313

மாதக் குறிப்புக்கள் ... 317

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

1. சில்பஸ்ரீ யாத்திரை ... கா. வே. ராமசந்திரன் ... 257

சிற்பப் பகுதி

1. தென்னாட்டுச் சிற்பங்கள் ... "பார்க்கவன்" 258
2. தேவியின் புகழ் ... ஒட்டக்கூத்தர் ... 260

சிறுவர் பகுதி

1. சில பழைய விளையாடல்கள் ... காலஞ்சென்ற ஸா. வை. குருஸ்வாமி சர்மா ... 261

புதுக் கற்பனைகள்

1. கலப்பில் அழகு ... "கட்டி பூசியடிகள்" ... 265
2. ப்ரமத்வரை ... "அஜந்தா" ... 266
3. ராமனும் ஸீதையும் ... "ஸ்ரீ ராஜநாயகி" ... 272
4. என் செம்பருத்திச் செடி ... மா. கிருஷ்ணன் ... 278
5. மானஸீ (நாடகம்) ... K. வரதாச்சாரி, B.A., B.L., ... 281

மொழிபெயர்ப்புப் பகுதி

1. கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் 294

பெண்டிர் பகுதி

1. ஸ்ரீ ... "வீதஹவ்யன்" ... 299
2. புராதன அங்கராசனைகள் ... கா. வே. ராமசந்திரன் ... 300

கீதப் பகுதி

1. சுவாதித் திருநாள் மஹாராஜாவின் கிருதி விளக்கம்—சிவபெருமான் தாண்டவம் ... தமிழ் வித்துவான் R. முத்து அய்யர் ... 304

அறிவிப்பு

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்ம்யூதைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரூ. 3.

சில்பஸ்ரீ யாத்திரை.

கா. வே. ராமசந்திரன்.

தமிழ் நாட்டில் ரஸிகர்களுக்குக் குறைவில்லை; வித்துவான்களுக்குக் குறைவில்லை; சில்பஸ்ரீ அபிமானிகளுக்கும் குறைவில்லை. இவர்களைத் தேடிக் கண்டுபிடித்து இவர்களது நட்பையும் ஆதரவையும் பெறுவதற்கென்றே ஆரம்பித்த எனது யாத்திரை இரண்டு மாதங்களில் இனிது முடிந்தது. ஒவ்வொரு ஊரிலும் பிறர்க்கே யுழைத்து ஏழையான சில நண்பர், உடன் இருந்து மறக்கவொண்ணாத துணை புரிந்து, சில்பஸ்ரீக்குப் பிராணதானம் செய்தனர். இவர்கள் பேருதவிக்குக் கைம்மாறு ஏது? இம்மஹோபகாரிகளுக்கு எல்லாம் வந்தனம். இவர்களது கீர்த்தி சில்பஸ்ரீ வாயிலாக, வாடாமலரென நாடெங்கும் நறுமணம் கமழ்வதாக!

இவ்வாறன்றி விபரீத அனுபவங்களும் சிற்சில விடங்களில் கிடைத்தன. ஒரு பிரபு,

ஆரடி வீதியில் ஓரேடுகொண்டோடியே
  அவசரமதாய் வருகிறார்
ஐயையோ சில்பஸ்ரீ போல இருக்கின்றது
  யாரென்று மெள்ள எட்டிப்
பாரடி தலைமறைய நின்றுகொண்டு அவர் நெடும்
  பாதை வழி போகிறதுதான்
பரண்மேல் எனைத் தூக்கிவிட்டுவிடு தாளையடை
  பழிகாரி கதவுபோடு
கூர்மை மொழி கேட்டு அதிசீக்ரம் வந்து விடுவார்
  குதிருக்குள் ஒளித்துக் கொள்ளடி

என்று வேகமாக ஒளிந்தருளினார்.

இன்னொருவர் வருமுன்காப்போராக

தலைவாசலின் கதவை யாரடி திறந்தவர்கள்
  தமிழ்வாணர் வரில் விடுவரோ..................
அலையாதலைந்து நான் கவிவாணர் தங்களால்
  ஆநந்த வருடத்திலே
யான்பட்ட பாட்டை யாவர் அறிவர் அந்த
  ஆதிபகவன் அறிகுவார்
மலையாமல் உன்மனம் இருப்பதேன் புலவன்மார்
  வரில் சும்மா போவாரோதான்
  மனம்பதறுதே............

என்றும், இன்னொருவர்

உலகில் எதிர்பட்டவன் நான்தானோ உங்களுக்கு
  ஒருதொழில் தானுமில்லையோ
ஒட்டாரம் காட்டியே நித்தநித்தம் வந்து
  பாதிக்கிறீர்களையா?
புலவர் என்றால் தனம் கொட்டிவைத்தீர்களோ
  புதையல் யான் எடுத்ததுண்டோ?
புளுகக்கற்றது போல் ஓர் தொழில் கற்கவொண்ணாதோ
  புகழ்வதால் பயனேது காண்
கலை கற்றவர்கள் என்னில் நெஞ்சம் எரிகின்றதே
  ஆசிரியரே செல்லுவீர்
காசென்னிடத்திலே சபிக்கில் அஞ்சேன்

என்றும், உபசரித்தனர். பழந்தமிழ்ப் புலவர்களது தூதனைச் சென்ற நான், அப்புலவரது வறுமையை நன்கு உணர்ந்ததன்றியும், தனிகர்கள்பால் அவர் அடைந்த பரிபவத்தின் ஒரு பகுதியையும், அன்புடன் ஏற்றுக்கொண்டேன். ஆயினும் இத்தகைய அனுபவங்கள் மிகச் சிலவே.

ஆனால் ரஸிகரத்தினங்களான பலர் 'திருக்கைப் பங்கயம் சிறக்கத் தந்தன படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம் பதிக்கக் கங்கணம், பரிக்கக் குஞ்சரம் கடுக்கக் குண்டலம் கவிக்கச் சங்கினம் கவிக்குப் பஞ்சரம் கவிக்கத் தொங்கலே' என்றபடி அன்புடனும் ஆதரவுடனும் சில்பஸ்ரீயை ஏற்று உபசரித்தனர். இவர்களுள் கல்வியிற் சிறந்த பெண்மணிகள் பலர். கவிகள் சிலர். ஸங்கீதத்திலும், சிற்பத்திலும், தமிழிலும், வடமொழியிலும் பூர்ண பாண்டித்தியம் வாய்ந்தவர் பலர். இவர்களது சிறந்த கட்டுரைகளையும் இனி சில்பஸ்ரீயில் காணலாம். இவர்கள் எல்லோருக்கும் வந்தனம்.

சிற்பப் பகுதி

தென்னாட்டுச் சிற்பங்கள்.

"பார்க்கவன்."

மதுரை மீனாக்ஷி கோயில், அழகர் கோயில், பேரூர்க்கோயில் கும்பகோணத்துக் கும்பேச்சுவர் கோயில், கிருஷ்ணாபுரம், தாடிக் கொம்பு முதலிய ஊர்களிலுள்ள எல்லாக் கோயில்களையும் அலங்கரிக்கும் பேருருவச் சிற்பங்கள் எல்லாம் வெகுவாக நாயக்க மன்னர்கள் காலத்தில் தோன்றியவைகளே. இவற்றின் ஆகிருதி உலகவழக்கில் இல்லாத பெரிய ஆகிருதியே; இவற்றின் நிலைகளும் நாடக வழக்கை அனுசரித்த அழகு வாய்ந்த நிலைகளே. ஆனால் இவற்றை நிருமித்த சிற்பிகள் இப்பிம்பங்களில் முழங்கால், முழங்கை, நரம்பு முதலியவைகளையும் எடுத்துக் காட்டியிருப்பதால், இச் சிற்பங்கள் நாடக வழக்கன்றியும் உலகவழக்கையும் ஆதாரமாய்க் கொண்டன போலும். இவ்வகையைச் சேர்ந்த சிற்பங்களே ஸுசீந்திரத்தில் உள்ள கேரள சிற்பங்களும். ஆனால் கேரள சிற்பங்களில் ஆபரண ஆடம்பரங்கள் அதிகம். பிற்காலத்துச் சிற்பங்களுள் சிறந்தன தென்காசிச் சிற்பங்களே. இங்குள்ள தேவதா ரூபங்கள் தனி அழகு வாய்ந்தன; பெண்ணுருவங்கள் கொடிகளென நுடங்கி இயங்குவன. இச்சிற்பங்களுக்கு விஷயம் உக்கிரமூர்த்திகளான வீரபத்திரர், காளி, நரசிம்மர் முதலியவரும், ஸௌமிய மூர்த்திகளான வேணுகோபாலர், நடராஜர் முதலியவரும் மன்மதனும் ரதியும், அழகிய பெண் உருவங்களும், அக்காலத்து நாடகங்களில் ஆடிய யுத்தவீரர்களுமே. நெல்லையப்பர் ஆலயத்தில் நாயக்கர் காலத்து மரச்சிற்பங்களால் ஆன விதானமும், பெரியதொரு நடராஜ மூர்த்தியும், ராவணானுக்கிரஹ மூர்த்தியும், அதிஸுந்தரமான உற்சவ மூர்த்திகளும் முக்கியமானவை. ஸுசீந்திரத்திரத்தில் வரிசை வரிசையாயுள்ள தீபலக்ஷ்மிகளும், அழகிய திரிவிக்கிரமாவதார வர்ணனையும், ஆஞ்சநேயாது விசுவரூபத்தை எடுத்துக் காட்டும் மிகக் கம்பீரமானதொரு பேருருவமும் முக்கியமானவை.

இவையன்றியும் தென்பாண்டி நாட்டில், இவைகளினும் அழகிய பழைய சிற்பங்கள் பலவுள. இவைகளுக்கு 'பூர்வ பாண்டிய' சிற்பங்கள் எனப் பெயரிடலாம். இவைகளுள் பல, சோழ சிற்பங்களுக்குச் சமானமான அழகு வாய்ந்தன; சில ஏலோராச் சிற்பங்களுக்கு நிகரானவன. இவற்றுள் சோழ சிற்பங்களை ஒத்தவை எவையென்றால், ஸ்ரீவைகுண்டத்துத் தேவியும், சிறிய அளவில் செதுக்கப்பட்ட கிருஷ்ண சரித பிம்பங்களும், நாட்டிய பிம்பங்களும், ஆழ்வார் திருநகரியிலுள்ள ராம ஜனனம், வாலி ஸுக்ரீவ யுத்தம், ராம ராவண யுத்தம் முதலிய ராமாயணச் சிற்பங்களும்,

வேணுகோபாலரும், திரிவிக்கிரம நரசிம்ம அவதாரங்களும் பிறவுமாம். இவையெல்லாம் சிறிய அளவினவாயினும் பேரழகு வாய்ந்தன வாம். ஆழ்வார் திருநகரியிலுள்ள சிற்பங் களில் பல நம்மாழ்வாரது பாசுரங்களில் கண்ட சொற் சிற்பங்களின், கற்சிற்ப மொழிபெயர்ப் பெனவும் தோன்றுவன. இவ்வூர்ச் சிற்பங் களில், பலவிதமான படகுகளின் அனுகாரங் களையும், குடக்கூத்தின் வர்ணனையொன்றை யும், கதைகளியை ஒத்த ஒரு பழந்தமிழ் நாட கப்பாத்திரங்களின் நிலைகளையும் காணலாம். இவ்வூர்க் கோபுரத்தின் அடிப்பாகம் அலங்கார மயமாக அமைந்துள்ளது. வட்ட ஆகாரமாய் அமைந்து, விசித்திரமான கற்பனைகள் நிறை ந்து, வேறெங்கும் காணப்பெறாத அழகிய தேர்களையும் இவ்வூரில் காணலாம்.

ஆழ்வார் திருநகரியில் மூலவர் பகவா னன்று; நம்மாழ்வாரே. புத்த ஆகாரமாய் பெரிய உருவில் அமைந்த சடகோபரையும், சிறிய அளவில் உடன் அமைக்கப்பட்ட முத லாழ்வார்களையும், இக்கோயிலெங்கும் காண லாம். ஆதிகவியான நம்மாழ்வாரைப் பழந் தமிழர், தனிக்கோயிலில் எழுந்தருளச்செய்து வழிபட்டனர். தமிழன்பர் ஒவ்வொருவரும் இச்சந்நிதியை அடைந்து இவரைத் தரிசித்து வழிபடுவது முறையாகும். இவ்வாறே ஸ்ரீ வில்லிபுத்தூரில் கோயில் கொண்ட பெரியாழ் வாரையும் ஆண்டாளையும், திருச்செந்தூரில் அமர்ந்துள்ள அருணகிரிநாதரையும், தமிழன் பர்கள் தரிசிப்பார்களாக.

இவ்வூர்களில் வேறெங்கும் காணப்பெறாத அபூர்வ நர்த்தன சிற்பங்களும் காணப்படுவன. உதாரணமாக, புஜங்கத்ராஸிதம் என்ற கர ணத்தில், உலகப்பிரஸித்தமான நடராஜமூர்த் தியின் நிருத்தத்தைப்போல ஒருவகையும், மதுரையில் கால்மாறி யாடியதைப்போல ஒரு வகையும், சிதம்பரக் கோபுரத்திலுள்ள நாட் டிய சிற்பத்தை யொத்த வகையொன்றும் ஆகத் தமிழ்நாட்டில் வழங்கி வந்த மூன்று வகை களும் இங்கு காணப்படுவன. சங்கரன் கோ யிலிலுள்ள நிருத்தமூர்த்திகளின் பாதங்களின் கீழ் படமெடுத்த பாம்புகளைக் காணலாம்.

திருச்செந்தூரிலும் இவைகளை யொத்த அழகிய சிற்பங்கள் பலவுள. இவ்வூர் ஆலயம், பல்லவர்கள் காலத்து ஆலயங்களுள் ஒன்றாகும். கோயிலின் வடபுறத்திலுள்ள சிறு குகையில் அமர்ந்துள்ள திரிமூர்த்தியும், தேவியும், கரையோரமாய்க் கிடக்கும் இடிந்த ஐராவத மண்டபத்தின் சிற்பங்களும், திருக் குளத்துச் சுவற்றில் காணப்படும் ஸுப்ரஹ் மண்ய மூர்த்தியும், மலைக்குகையிலுள்ள தல சயன மூர்த்தியும் கஜலக்ஷ்மியும், ரூபத்தா லும் வேஷத்தாலும் மனதைக் கவரும் உற் சவரும் மூலவரும், சிற்பாவதாரங்களுள் சிறந் தனவாம். இங்கு பெருமானின் கோலமன்றி யும், நீலக்கடலோரத்தில் அமைந்த கோயிலின் நிலையே மனதைப் பிணிப்பது. இவ்விடத்தி லும் கன்யாகுமாரியிலும், கோயில் கொண்ட இடத்திலே தனித்த மாயம் ஒன்று உள்ளது. கடலில் உதிக்கும் சந்திர ஸூர்யர்களை அணி கலனாகவணிந்து தமிழ்நாட்டைக் காத்தருளும் குமரி, முக்கடல்களின் நாதத்தைப் பருகி இன் புறும் சில்பஸ்ரீயே யெனத் திகழ்கிறாள்.

தென்னாட்டுக் கோயில்களுள் அற்புதமா னது சங்கரநாயனார் கோயிலே. தமிழ் நாட் டுத் தெய்வங்களுள் அழகிற் சிறந்தவர் கள்ளழ கர்; அழகிற் சிறந்தவள் கொல்லிப்பாவையே யெனத்தகும் சங்கரன் கோயிலில் குடி கொண்ட கோமதியம்மையே. சங்கரநாயனா ருக்கும் சில்பஸ்ரீக்கும் ஓர் ஒற்றுமையுள்ளது. சடையும் புனலும், சங்கும் சக்கரமும் ஒருங் கே கொண்ட சங்கரநாரணற்குத் தேவாரமும் திவ்வியப்பிரபந்தமும் முக்கியமானவை; சில் பஸ்ரீக்கும் அவ்வாறே. இத்திருக்கோயிலில் எலோராவில் உள்ள மூர்த்திகளுக்குச் சமானமான ஆச்சரியகரமான தக்ஷிணா மூர்த்தி, நரசிம்மர், நடராஜர், ஸுப்ரஹ் மண்யர் முதலிய மூர்த்திகள் பலர் உளர். சங்கரன் கோயிலில் சைல ஆகாரமாக ஓர் சிறு கோவில் உள்ளது. அதன்மேற்புறத்தில் ஸர்ப்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. கோயிலினுள் நாகராஜனெனப்படும் மனிதவுரு வம் ஒன்று இருக்கிறது. கடலுக்கப்பாலுள்ள சாவகம் முதலிய தீவுகளையே பழந்தமிழர் நாக நாடென்றனர். சங்கரன்கோயிலானது நாக நாட்டரசனது திருப்பணி என்பதை அறி

வுறுத்துவதுபோலும், இச்சிறு சைலமும், நாக ராஜனது பிம்பமும். சாவக நாட்டுச் சிற்பங்களுக்கும், சங்கரன் கோயிற் சிற்பங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளும், இக்கருத்தை வலியுறுத்துவன. அம்மன் ஸன்னிதியில் விசித்திரமுறையில் ஆரம்பிக்கப்பட்டு அபூர்த்தியாக நின்ற கிருஷ்ணசரித பிம்பங்களிலும், கோபுரத்தில் உள்ள பாண்டிய அரசர்களது சரித்திரத்தை விளக்கும் சிற்பங்களிலும், ஆராய்ச்சிக்கு விஷயமான துறைகள் பலவுள. இச்சிற்பச் செல்வமெல்லாம் கெடாமல், கலைவாணர் காப்பாராக.

தேவியின் புகழ்.

அனக பூமி கோலோக மருகுநேமி பாதாள
மயனிவாச மேழ்தீவு மசலமேழு மேழ்காவு
கனக லோக மேழாழி கஞலவீதிபோதாத
கலகபூத வேதாள கடகமேய மாயோளே.

தமர நூபுராதார சரணி யாரணகாரி
தருணவாணிலாவீசு சடில மோலிமாகாளி
யமரர் வாழ்வு வாழ்வாக வவுணர்வாழ்வு பாழாக
வருளு மோகினீயாகி யமுத பான மீவாளே.

அதர சோதி மீதாடு குமுதவாச வாயார
வழிழ்தமாக நேராக வகிலலோக மீரேழு
முதர சோபிதாநாபி கமலவாயினுன்மீள
வுமிழுநீலி மேலாய வுவணவூர்தி யூர்வாளே.

போர்ப்பன தீம்புகையோ புராதனரோமப்புகையே
ஆர்ப்பன பல்லியமோ வந்தரதுந்துமியே.

வனமலரோ பூமாரி வானக்கற்பகமலரே
கனசலமோ வபிடேகங் கடவுட்கங்காசலமே.

வயங்கு குழைமதியமோ வாளிரவி மண்டலமே
தயங்கு கவுத்துவமோ பூண்டனிச் சோதிச்சக்கரமே.

சார்த்துவன கோசிகமோ தன் பேழைத்தமனியமே
ஆர்த்துவன வறுசுவையோ வந்தமிலா வமுதமுமே.

கோடும் புரிசைநேமியோ கொற்றப்போர்நேமியே
இடேந்திலக மான்மதமோ வெண்டிசைய மான்மதமே.

அடிச்சூட்டு நூபுரமோ வாரணங்களனைத்துமே
முடிச்சூட்டு முல்லையோ முதற்கற்பு முல்லையே.

ஒட்டக்கூத்தர்.

சிறுவர் பகுதி.

சில பழைய விளையாடல்கள்.

(காலஞ் சென்ற திரிசிரபுரம் ஸ்ரீ. வை. குருஸ்வாமிசர்மா எழுதிய 'பிரேமகலாவதீய'த்திலிருந்து எடுக்கப்பட்டது.)

அப்போது, "ஏபிரேமா! குக்ஷிக்கட்டான் ஆடலாம் வ்ரயா?" என்று பாகீரதி சொல்ல அவனும் அதற்கு உடன்பட இருவருமாய்த் திண்ணையை விட்டு இறங்கி, கொல்லைக் காடுகளில் சுற்றி, அவரை இலை ஊமத்தை இலைகளைப் பறித்துக்கொண்டும், தெருவில் குனிந்து குனிந்து புளியங்கொட்டைகளைப் பொறுக்கிக் கொண்டும் வந்து மறுபடி திண்ணையேறி புளியங்கொட்டையில் சிலவற்றைத் தேய்த்து அவற்றில் பெரியதாய் நான்கு எடுத்துக் கொண்டு கட்டான் கிழித்து ஆடத் தொடங்கினார்கள். ஆடும்போதே சிறுவன், "பாகீரதி! நீங்களெல்லாம் என்னென்ன வெளையாட்டு வெளையாடர வாடிக்கை சொல்லு, பாப்பம். நல்லதாய் ஏதாவது இருந்தா வெளையாடலாம்" என்றான். அவளும், "நாங்கள் குந்து பிடிப்பம். அது உஸ்திக்குந்து சப்பைக்குந்துன்னு ரெண்டு விதம். சோளம் அடிப்போம். அப்போ குதிச்சு குதிக்சுக்கிண்டு,—

சோளாச்சோளாக் காட்டிலே சோளமடிக்கிற வீட்டிலே
பந்தடியடி மீனுளே பதக்குச்சோளம் நான் தாரேன்
சின்னச்சின்ன மூக்குத்தீ சின்னப்பனிட்ட மூக்குத்தீ
அத்தையிட்ட மூக்குத்தி அரப்பணத்து மூக்குத்தீ
கண்டெடுத்த மூக்குந்தீ காப்பணத்து மூக்குத்தீ

என்னு சொல்லிக்கிண்டு ஒத்தர் மாத்தி ஒத்தராய்ப் பாடுவோம். இது மட்டுமா? மத்துப் பிடிப்போம், கும்மியடிப்போம், அம்மானையாடுவோம்,—

எப்பூ இல்லாப்பூ ஊரார்மன்னிக்கு — எங்கமன்னிக்குத் தாழம்பூ ஊமத்தம்பூ

என்னுப்பிட்டு ஒரு வெளயாட்டு உண்டு. புளியம்வெரை ஆடுவம். அது பத்துப் பதினஞ்சு

விதம் உண்டு. ஒட்டி—பழம் இதெல்லாம் நீங்களும் ஆடுவேள்; நாங்கள்ளாம் இதுவும் ஆடுவம்; ஒத்தையோ ரெட்டையோ ஆடுவம்; கொங்கு—எந்து—வாழப்பூ-. சாந்துக்கொட்டாங்கச்சி—வெத்தலத்தட்டு—தரைப்பொத்து—இன்னம் எத்தனையோ விதம், புளியம்வெரை ஆடுவமே! இன்னங்கேளு. சாந்தே—எண்டி—சந்தனக்கட்டையை எங்கேவச்சே—அசலாராத்துப் பெரேலேவச்சேன்-காணமேடி கரியாப்போவே—இருக்கடி எரிஞ்சுபோவே—என்னு ஒரு வெளயாட்டு. இந்தமட்டும் இந்தமட்டும் எங்கோடுன்னு ஒரு வெளயாட்டு. சந்தணக்கட்டை—குங்குமக்குடுக்கை யென்னு ஒரு வெளயாட்டு. இருடா! இத்தனை தானு? கழக்கோடியாடுவம், நாலுமாதிரி பாண்டியாடுவம்; வாக்காவெட்டி-வரப்புவெட்டி—வழியோடே போரவன் தலையெ வெட்டி—என்னு ஒன்னு. கரண்டாமூடி கருவேலமூடி; நெலாப்பூச்சி—நெழப்பூச்சி; தேனுபாலா தெந்தனபாலா; ஒக்காந்தவா நின்னவா—எட்டிப்பாரப்பட்டேன் தட்டுகூடை; பன்னீ பன்னீ நீச்சுக்கொட்டு; அப்பனூர்; சோழி; பல்லாங்குழி; பத்துக்கட்டான்; கட்டிலுங் கட்டிலுஞ் சேந்துதோ; ராஜா ராஜா பூஷணிக்காய்; எம்பொண்ணைப் யெம்பொண்ணைப் புடிப்பானே—இதெல்லாம் வெளையாடுவம். இன்னம் எத்தனையோ விதமெல்லாம் உண்டு'' என்று பெருமையாய்ச் சொன்னாள்.

பிரேமநாதனும் இந்த. விளையாடல்களில் அதிக ஆசை முற்றினவனாய் இரண்டொன்றின் பெயர் சொல்லி அவற்றை ஆடும்விதம் எப்படி யென்று கேட்க பாகீரதி சொல்லியதையே இதோ சுருக்கிச் சொல்லுகிறோம்.

பெரும்பாலும் எந்த விளையாட்டிலும் இரண்டு கக்ஷிகள் உண்டு. ஒவ்வொரு கக்ஷிக்கும் ஒரு பிரதானமான பெண் உண்டு. அவளுக்குப் பெரிய 'உஸ்தி' என்று பெயர். விளையாட்டெல்லாம் தொடங்குமுன் இரண்டு பேர் பெரிய உஸ்தி யென்று ஏற்படுவார்கள். மற்றவர்களெல்லாம் தத்தமக்கு இணையான இரண்டிரண்டு பேராய்ப் பிரிந்து போய் ஏதாவது தங்களுக்கு ஒரு சங்கேதமான பெயர் வைத்துக் கொண்டு திரும்பி வந்து பெரிய உஸ்தியைப் பார்த்து, ''உஸ்தி உஸ்தி ஆரோடே'' என்று கேட்பார்கள். அதற்கு அவள் ''ஒங்கக்காங்கச்சி தெருவோடே'' என்று பதில் சொல்லுவாள். அதன்மேல் ''ஒனக்கு எள்ளு வேணுமோ கொள்ளு வேணுமோ'' என்று கேட்பார்கள். ஏதாவதொன்றின் பெயரைச் சொல்லி எனக்கு அது வேண்டுமென்று ஒரு பெரிய உஸ்தி சொல்லுவாள். சொன்னதும் 'எள்ளு' என்ற ஸங்கேதம் வைத்துக் கொண்ட பெண் ஒரு கக்ஷியிலும் ''கொள்ளு'' என்ற சங்கேதம் வைத்துக்கொண்ட பெண் ஒரு கக்ஷியிலுமாய்ச் சேர்வார்கள். உடனே வேறு இரண்டு பெண்கள் பெரிய உஸ்திக்காரி ஒருத்தியிடம் வந்து இந்த மாதிரியே ''உஸ்தி உஸ்தி யாரோடே'' என்று கேட்டு விட்டு ''ஒனக்கு மண்வேணுமோ கல்வேணுமோ'' என்பார்கள். எதை அந்தப் பெரிய உஸ்தி கேட்கிறாளோ, அந்தப் பெயரை உடைய பெண் அந்தக்கக்ஷியிலும் மற்றப் பெண் அடுத்த கக்ஷியிலும் சேருவாள். இந்தப்படியே ஒவ்வொரு ஜோடியாய் வந்து கேட்டுக் கேட்டு கக்ஷி இரண்டாகப் பிரிப்பார்கள். இப்படிப் பிரிந்த உடன் எந்தக் கக்ஷி விளையாடத் தொடங்குவதென்று ஆலோசனை உண்டாகும். அதைக் கண்டுபிடிப்பது வெகு ஸுலபம். ஒரு கல்லையோ அல்லது வேறெதையோ எடுத்து 'ஒனக்கெந்தப் பக்கம் வேணும்' என்று ஒரு கக்ஷிக்காரி மற்றொரு கக்ஷிக்காரியைக் கேட்பாள். 'எனக்கு இந்தப்பரம் வேணும்' என்று ஒரு புறத்தைக் காட்டினால் அந்தக்கல்லையோ ஓட்டையோ உயரவிட்டெறிவார்கள். எந்தப்புறம் மேலாக விழுமோ அந்தப்புறத்தாரே விளையாட்டுத் தொடங்குவார்கள். இரண்டு கக்ஷிகளாயில்லாத விளையாட்டில் யார் முதல் முதல் ஆடவேண்டுமென்று கண்டுபிடிக்க இரண்டு வழி உண்டு. விளையாடும் பெண்களுக்குள் கொஞ்சம் வயதும் அறிவும் முதிர்ந்த பெண் மற்றப் பேர்களையெல்லாம் வரிசையாய் நிறுத்திவைத்து, ''அம்மத்தை கும்மத்தை அரக்கீரை செங்கீரை வெள்ளி விலாமிச்சை கிண்ணியத்தாமரை தோமா பூ மலந்தே'' என்று பாடிக்கொண்டு ஒவ்வொரு பதத்தால் ஒவ்வொரு பெண்ணைத் தொடுவாள். யார் 'மலர்ந்தே' என்று சொல்லப்படுகிறாளோ அவள் உடனே கொஞ்சம் எட்டி விலகுவாள். மறுபடியும் மீதியுள்ளவர்களுக்கு 'அம்மத்தை கும்மத்தை' வைப்

பாள். இந்தமாதிரி வைத்துக்கொண்டே வந்து கடைசியாய் மலராமல் நின்றுவிடுகிற பெண் தான் விளையாடல் தொடங்கவேண்டும். இது போலவே "விடுவிடுசங்கிலி" என்று ஒரு பாடலும் அதுவழியாய் விளையாடவேண்டிய பெண் இன்னாள்தான் என்று தீர்மானிப்பதும் உண்டு.

(1) கட்டிலுங் கட்டிலும் சேர்ந்ததோ என்னும் விளையாடலில் இரண்டு கக்ஷியுண்டு. இரண்டு கக்ஷியாகப் பிரிந்த பிற்பாடு ஒரு கக்ஷிக்காரரெல்லாம் பூப்பெயரும், ஒரு கக்ஷிக்காரரெல்லாம் நகைப்பெயருமாய் வைத்துக் கொள்ளுவார்கள். ஆடத்தொடங்குகிற கக்ஷியார் மற்றக் கக்ஷியின் பெண்களை ஒவ்வொருத்தி வீதம் கண்களைப் பொத்திக்கொள்வார்கள். அப்போது பொத்திய கக்ஷியின் பெரிய உஸ்தி "கட்டிலுங் கட்டிலுஞ் சேர்ந்ததோ" என்பாள். உடனே அந்தக் கக்ஷியைச் சேர்ந்த எல்லாரும் "சேர்ந்தது" என்பார்கள். உடனே பெரிய உஸ்தி "காணுவாழையும் பூத்ததோ" என்பாள். எல்லாரும் சேர்ந்து "பூத்தது" என்பார்கள். மறுபடியும் பெரிய உஸ்திக்காரி "வெட்டின கட்டையும் துளுத்ததோ" என்பாள். மற்றெல்லாரும் "துளுத்தது" என்பார்கள். பிறகு பெரிய உஸ்தியா யிருப்பவள், ஏதாவது ஒரு பெண்ணைப் பார்த்து அவளுடைய ஸங்கேதமான பெயரைச் சொல்லி, "மல்லிகைப்பூவே மல்லிகைப்பூவே மெள்ள வந்து தள்ளிப்போ" என்பாள். உடனே மல்லிகைப்பூ என்னும் பெயருள்ள பெண் ஓடி வந்து யாராவது ஒரு பொத்தப்பட்ட பெண்ணை ஒரு குட்டுப் போட்டுவிட்டு மறுபடிப் போய் பழையபடி தான் பொத்தியிருந்த பெண்ணைப் பொத்திக் கொள்ளுவாள். உடனே குட்டப்பட்ட பெண்ணை கண்ணைத் திறந்து விட்டு யார் குட்டினாள் என்று கேட்பதுண்டு. அவள் ஸரியாய்ச் சொல்லி விட்டால் பொத்தப்பட்டிருந்த கக்ஷிக்காரர் விளையாடத் தொடங்குவார்கள்.

(2) பன்னீ பன்னீ நீச்சுக்கோட்டு என்னும் விளையாட்டில் இரண்டு கக்ஷியுண்டு. ஒரு கக்ஷிக்காரரை வெளியே நிறுத்திவிட்டு மற்றொரு கக்ஷிக்காரரின் பெரிய உஸ்தியாயிருப்பவள் தன்னைச் சேர்ந்த ஓர் பெண்ணைப் பன்றியைப்போல் படுக்கவைத்து மேலெல்லாம் இரண்டு மூன்று துணிகளால் நன்றாய் மூடிவிடுவாள். பிறகு தன் கக்ஷியைச் சேர்ந்த மற்றப் பெண்களை யெல்லாம் உள்ளுக்குள்ளேயே எங்கேயாவது பதுக்கிவைப்பாள். உடனே வெளியில் நின்றவர்களைக் கூப்பிட்டு அவர்கள் வந்த உடன் தான் பன்றியின் பேரில் படுத்துக்கொண்ட மாதிரியாய்ச் சாய்ந்து நிற்பாள். வந்த பெண்கள் "பன்னீ பன்னீ நீச்சுக்கொட்டு" என்பார்கள். உடனே கீழே மறைந்திருக்கும் பெண் க்—க்—க் என்ற ஒரு மாதிரி சப்தம் செய்வாள். பிறகு "பாழும் பன்னீ நீச்சுக்கொட்டு" என்பார்கள். அப்போதும் மூடப்பட்டிருக்கின்ற பெண் க்—க்—க் என்பாள். மறுபடியும் "நீச்சுக்கொட்டு பன்னீ நீச்சுக்கொட்டு" என்பார்கள். அப்போதும் க்—க் என்ற ஒலி உண்டாகும். உடனே வந்த பெண்கள் பன்றி வேஷப் பெண்ணுடைய பெயரைச் சொல்லுவார்கள். ஸரியாய்ச் சொல்லி விட்டால் உடனே அவர்களெல்லாம் உள்ளே நின்று கொண்டு முன் உள்ளே இருந்தவர்களை வெளியே அனுப்பிவிட்டுத் தாங்களும் "பன்னீ" விளையாட்டுத் தொடங்குவார்கள்.

(3) எட்டிப்புறப்பட்டேன் தட்டுக்கூடையென்பதிலும் இரண்டு கக்ஷி உண்டு. இதில் இரண்டு கக்ஷிக்காரரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக உட்காருவார்கள். உட்கார்ந்து கொண்டு கால்கள் இரண்டையும் முன்னால் நீட்டி இடுப்புக்குமேலுள்ள புடவைத் தலைப்பை அவிழ்த்துக் காலின்மேல் ஒரு மடிப்பு இரண்டு மடிப்பு மூன்று மடிப்பாய் போட்டுக் காலை மூடிக்கொள்ளுவார்கள். அப்போது ஒரு கக்ஷியின் தலைவி ஒரு மூன்தாங்கியை (அதாவது, இரும்பு மோதிரத்தை)க் கொண்டு போய்த் தன் வகுப்பைச் சேர்ந்த யாராவது ஒரு பெண்ணுடைய துணிக்குள் மறைத்துவிடுவாள். உடனே மறுகக்ஷியின் பெரிய உஸ்தி, "எட்டிப்புறப்பட்டேன் தட்டுக்கூடை" என்று சொல்லிக்கொண்டே இந்தக் கக்ஷிப் பெண்களண்டை வருவாள். இந்தக் கக்ஷிப் பெரிய உஸ்தியும் உடனே "நானும் புறப்பட்டேன் பிள்ளைக்கூடை" என்று சொல்லிக் கொண்டே உடன் வருவாள். அடுத்த கக்ஷி

யின் பெரிய உஸ்தி "விட்டுதா பெண்ணே விட்டுதா" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெண்ணைப் போய்த் தொட்டு 'இவளிடமிருக்கு' என்பாள். அவளிடமே முந்தாங்கி இருந்தால் அந்தக்கக்ஷி தோற்றதென்று பெயர். அவளிடமில்லாவிட்டால் அவள் தன்னிடமிருந்து ஒரு கிளம்பு கிளம்பி உட்காருவாள். இந்தப்படியே ஒரு வகுப்பினர் முழுவதும் முன்னேக்கி கிளம்பி உட்காருவதற்கு "ஒரு மடக்குப்பாயேஸம்" என்று சொல்லுவார்கள். மூன்று தடவையும் இப்படியேயாய் விட்டால் அடுத்த கக்ஷியின் உஸ்தி மஹாமுட்டாளென்று எண்ணப்படுவாள்.

(4) என் பெண்ணை யென்பெண்ணைப் பிடிப்பானேன் என்ற விளையாட்டில் கக்ஷி கிடையாது. ஒரு பெண் திண்ணையில் உட்கார்ந்து கொள்வாள். அவளுக்கு 'தாச்சி' என்று பெயர். ஒருத்தி தன் இருகையையும் நீட்டித் திண்ணையைப் பிடித்துக்கொள்வாள். அது அவளுக்கும் திண்ணைக்கும் நடுவே பாலம் போட்டது போலிருக்கும். இந்தவேளையில் மற்ற எல்லாப் பெண்களும் ஒருவள் இடுப்பை ஒருவள் பிடித்துக்கொண்டு ஒருவள் பின் ஒருவளாய் அந்தப் பாலத்தின்கீழ் நுழைந்துபோவார்கள். அப்படிப் போமவர்களில் ஒருவளைத் தாச்சியாயிருப்பவள் பிடித்துக்கொள்ளுவாள். உடனே பாலம் போட்ட பெண் எழுந்து போய் "எம்பொண்ணை யெம்பொண்ணைப் பிடிப்பானேன்" என்று கேட்பாள். தாச்சி உடனே "பெருமாகோவில் சந்தனட்போத்தை இவளிடுப்பானேன்" என்பாள். உடனே பாலக்காரி "சந்தணப்போத்துக்குப் போத்து தாரேனே" என்பாள். தாச்சியும் "பொண்ணுக்குப் பொண்ணு தாரேனே" என்பாள். மறுபடியும் பாலக்காரி "எம்பொண்ணை யெம்பொண்ணைப் பிடிப்பானேன்" என்பாள். தாச்சி பெருமாகோவில் வேப்பமரத்தை யெடுப்பானேன்" என்பாள். இதுபோலவே கொஞ்ச நேரம் வழக்காடிவிட்டு அந்தப்பெண்ணை தாச்சி விட்டுவிடுவாள். மறுபடியும் இதே மாதிரித் தான்.

புதுக் கற்பனைகள்.

கலப்பில் அழகு.

(கட்டிபூசியடிகள்.)

கலப்பில் அழகினைக் காண்மின் கண்களால்
விண்ணினை முட்டும் தண்ணிய விலங்கல்
இடையே கருமுகில்: இன்னொரு புறத்து
வெண்முகில்: கதிரவன் வெய்யில் ஓரிடம்.
அழகின் உருவேன அம்மலை காணும்.
அங்கோ ரருவி பொங்கா ரமென
நெளிந்தும் நுழைந்தும் நின்மல நீருடன்
இழுமெனு மொலியுடன் இழிந்து பெருகும்.
மருண்ட மானினம் மாண்பிணை யோடு
பச்சைப் புல்லை நச்சிக் கறித்துத்
தெருண்டோர் மனமெனத் தெள்ளிய நீரினைப்
பருகிச் செல்லும் பத்தி படவே.
இருள்படப் பொதுளிய எண்ணில் மரங்களில்
புள்ளினங் கூடி ஒல்லெனச் சிலம்பும்.
இங்கே யின்பம், இங்கே யின்கவி
இரண்டும் எழுதற் கிதுவே தக்கிடம்.
ஒருவன் இல்லில் திருமணி நிகழ்ச்சி
அங்கே ஆடவர் அளப்பில் மகளிர்
வருவ தியற்கை, வந்தால் அவரணி
ஆடை யணிகலன் ஆதிய வற்றுள்
எத்தனை வகைகள், எண்ணிப் பார்மின்.
விருந்தினை யுண்ண விருப்புடன் வரினே
வறுவல் வடகம் வாலிய சட்டினி
அவியல் பொரியல் அலகில் பண்ணியம்
பன்னீர் ரஸமே பாற்பா யஸமே
வெண்கா யத்தினை வேண்டிய மட்டும்
இட்டுச் செய்த இனிய ஸாம்பார்.
அத்தர் அரகஜா அளவிய சந்தனப்
பூச்சு; பூக்கள்; புதுமணப் பாக்குடன்,
வெள்ளிலை புகையிலை வேண்டிய மட்டும்.
பந்தரிற் குழுமினர் பாடகர் பாட
பல்லவி சுரங்கள் பதங்கள் ராகம்
பலவகை யாகப் பாடுகின் றனரே.
ஒட்டிக் கட்டிய ஒண்செடிக் கனிகளின்
உறுசுவை யுன்னி யுறுபொருள் துணிமின்.
தமிழ்மொழிக் கான தலைவிதி விந்தை.
தனித்தமி ழாகத் தணந்து நின்றால்
அம்மொழி அழகின் அறவே நீங்கி
ஆணலன் பெற்ற ஆரணங்கினைப் போல்
கலவி பெறாமல் கலங்கி நின்று
பிரிவெனுந் துயராற் பெரும்பே துறீஇ
இன்பமி லாது துன்புறு வாளே.
இக்கதி விழையுநர் இங்கெவர்?
ஒருவரு மிலையால். ஓங்குக தமிழே.

*ப்ரமத்வரை

"அஜாந்தா"

ருரு என்னும் முனிகுமாரனது ஆச்சிரமம்; விடியற் காலம்; ருரு நந்தவனத்தில் மலர் சேகரித்துக் கொண்டிருக்கிறான்.

குமுதினி :—(தூரத்திலிருந்து) ருரு, ருரு! ...ஓ ருரு! கூப்பிடக் கூப்பிட நிற்காமல் போகிறான். ஓ ருரு!

ருரு :—யாரது; நீயா குமுதினி? ஏன் இவ்வாறு இளைக்க ஓடிவந்தாய்?

குமுதினி :—(இளைப்புடன்) அப்பா! எப்படி ஓட வைத்தாய் என்னை; எவ்வளவு அழைத்தாலும் காதில் விழவில்லையா?

ருரு :—குமுதா! மன்னிக்க வேண்டும்; உன் குரல் கேட்கவில்லை.

குமுதினி :—கேட்க வில்லையாம், பாவம். ஏன் கேட்கும்? நான் என்ன சாக்ஷாத் மேனகையின் புதல்வியா? கந்தர்வனது பிரியமான பெண்ணா? என் அழைப்பு ஏன் கேட்கும்?

ருரு :—நிஜமாகத் தான் கேட்கவில்லை, குமுதா! நான் ஏதோ நினைத்துக் கொண்டே மலர் கொய்து கொண்டிருந்தேன்.

குமுதினி :—என்ன நினைத்துக்கொண்டிருந்தாய்? இல்லை, யாரைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தாய்?

ருரு :—நீ ஏன் இவ்வளவு வேகமாக ஓடிவந்தாய்?

குமுதினி :—சொல்கிறேன். அதோ அந்த மாலதிப் புதரின் அருகில் உட்காரலாம், வா.

ருரு :—இங்கேயே சொல்லக் கூடாதா?

குமுதினி :—ஏன் அங்கே வரக்கூடாதா? அதற்குள் உன்னை யாராவது பார்த்து விடுவார்களா?

ருரு :—அதற்காக அல்ல; யார் பார்த்தாலென்ன? பூஜை வேளையாகி விட்டது. நான் போக வேண்டும்.

குமுதினி :—போகட்டும், அவ்வளவு அவசரமாயிருந்தால் மற்றொரு சமயம் பேசலாம்.

ருரு :—இதற்குள்ளேயே கோபமா? சரி சரி.

ருரு :—(சிறிது நேரம் கழித்து) சரி, இப்பொழுது சொல்.

குமுதினி :—ருரு! சொல்லட்டுமா? சொல்லட்டுமா? ப்ரமத்வரையும் நானும் அதிகாலையிலே தாமரைத் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தோம். அன்னங்கள் எங்களைச் சுற்றிச் சூழ்ந்தன. பிடிக்கப்போனால் ஒன்றும் என் கையில் அகப்படவில்லை. தாமாகவே ப்ரமத்வரை கையில் வந்து தங்கிக்கொண்டிருந்தன. ப்ரமத்வரை என்றால் அன்னங்களுக்குக்கூட அத்தகைய விருப்பமா? அப்பொழுது, 'ப்ரமத்வரா! நீ அழகா நான் அழகா?' என்று அவளைக் கேட்டேன். இன்னும் ஆழத்திற்குச் சென்று நீரில் எங்கள் வடிவங்களைப் பார்த்துக்கொண்டோம். ப்ரமத்வரை சொன்னாள்: 'குமுதினி, நீயே அழகுடையவள், என்று. 'உண்மையாகவா? மேனகையின் புதல்வியைவிட நானே அழகுள்ளவளா? கந்தர்வாது பெண்ணெங்கே, நானெங்கே?' என்று நினைத்தேன். இதற்குள் எங்கள் இருவருக்கும் பின்னே நின்று நீ நகைத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றியது, எனக்கு. திரும்பிப் பார்த்தால் உதயசூரியன் முன்னேயுங்கூட ஒளி குறையாத சந்திர பிம்பம்—நீ என்று மயங்கினேன். உடனே உன்னைச் சந்தித்துக் கேட்கவேண்டுமென்று தோன்றியது எனக்கு: 'நான் அழகா அந்த ப்ரமத்வரை அழகா' என்று. விரைவாக உடையை மாற்றிக்கொண்டு ஓடிவந்தேன்.

ருரு :—ப்ரமத்வரை?

குமுதினி :—ப்ரமத்வரையா? அவள் நீராடிக்கொண்டேயிருக்கிறாள். ஏன் அவளை யாராவது கொண்டுபோய் விடுவார்களா?

ருரு :—அதுவல்ல, குளத்துக்கு நீங்கள் இருவரும் போனீர்களே.

---

* இந்த நாடகம் சமீபத்தில் திருச்சி அகில இந்திய ரேடியோவில் பேசப்பட்டு அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

குமுதினி :—அதனால் சேர்ந்தே வரவேண்டும், உண்மைதான். ஆனால் என்னால் தாங்க முடியவில்லை. உன்னைப் பார்த்து இப்படி உன் கையில் என் கையை வைத்துக்கொண்டு, உன்னிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆத்திரத்தை என்னால் அடக்கமுடியவில்லை.

ருரு :—குமுதினி! இதற்குள் என்ன முழுகிப்போய்விட்டது. சிறிது நேரத்தில் நாம் எல்லோரும் சேர்ந்திருப்போமல்லவா?

குமுதினி :—இப்போது மாத்திரம் என்ன? சொல்லமாட்டாயா?

ருரு :—என்ன சொல்வது?

குமுதினி :—ருரு!

ருரு :—அன்னங்களோடு விளையாடிக் கொண்டிருந்தோமென்று சொன்னாயே, அவைகளில் எந்த அன்னத்தின் நடை மிகுந்த அழகு என்று உன்னால் எடுத்துச் சொல்லமுடியுமா?......இந்தப் பூம்புதரிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான மலர்களிலிருந்து ஒரு மலரை எடுத்து இது மற்ற மலர்களை விட மேலானது என்று நீ சொல்லமுடியுமா?

குமுதினி :—ஆ! இந்த வேதாந்தத்துக்கென்ன? மக்களுள் அப்படியல்ல. தேவமாதர்களுள்ளுங்கூட ஏற்றத்தாழ்வு இருக்கின்றது.

ருரு :—அந்த வேறுபாடு வெளித்தோற்றத்திலேதான்.

குமுதினி :—மீண்டும் வேதாந்தமா? உள்ளதைச் சொல்.

ருரு :—குமுதா! சொல்லட்டுமா? சாதாரணப் பார்வைக்கு உன்னழகு உயர்ந்த அழகு; உன் உடலின் ஒளி கண்களை கூசச்செய்யும்; உனது விசாலமான அழகிய நெற்றியைப் பார்த்தால், உன் மனம் புத்தம்புதிய எண்ணங்களுக்கு நிலையானது என்று தோன்றும். தீட்டிவைத்த உன் புருவங்களைப் பார்த்தால் பிரமன் ஒரு சிற்பியே என்று தோன்றும். ஜ்வலிக்கின்ற உன் கண்களில் ஊக்கமும் கிளர்ச்சியும் ததும்புகின்றன. புத்தம்புதிய அனுபவங்களை அனுபவிக்கவேண்டும் என்னும் ஆவலினால் உன் கண்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டிருக்கின்றன. உன்னைப் பார்க்கும்பொழுது மக்களுக்கு வாழ்க்கையிலேயே ஊக்கம் மேலும் மேலும் அதிகமாகிறது.

குமுதினி :—உண்மையாகவா? உண்மையாகவா, ருரு? உன் கண்களுக்கு நான் அழகுடையவள்தானா? என் அழகு உன் மனத்தைக் கவர்கின்றதா? ப்ரமத்வரையை விடவா?

ருரு :—குமுதா, என்ன சொன்னாய்? கவர்ச்சியா...ப்ரமத்வரையை விடவா? இந்தக் கேள்வி ஏன்? பார், பூஜை வேளையாகிவிட்டது, போகலாம்.

குமு :—சொல்லமாட்டாயா? சொல்லமாட்டாயா? நான் ப்ரமத்வரையைவிட அழகுள்ளவளா?

ருரு :—முன்னமே சொன்னேன், வெளித்தோற்றத்திலே என்று.

குமுதினி :—மீண்டும் வேதாந்தம்! உண்மையைச் சொல்லப்படாதா?

ருரு :—குமுதா, சொல்கிறேன், சொல்கிறேன். நீ கட்டழகி. ப்ரமத்வரையைவிட கட்டழகி. ஆனால்...

குமு :—ப்ரமத்வரையைவிட கட்டழகி. ஆனால் என்ன?

ருரு :—ஆனால், அவ்விடம் அலௌகிகமான, அசாதாரணமான பேரழகு அமைந்திருக்கிறது. அது மிகவும் சாத்வீகமான சௌந்தரியம். மனச்சாந்தியை அளிக்கும் மென்மை. அவளிடம் வெண்ணிலாவைப் பரவச்செய்யும் விலாசம் அமைந்திருக்கிறது; கரங்களையும் குவியச் செய்யும் அபூர்வமான சக்தி இருக்கிறது.

குமு :—இன்னும்......இன்னும்......

ருரு :—இன்னும் என்ன? (ஆச்சரியத்துடன்) குமுதா, ஏன் இப்படியாகி விட்டாய்?

குமு :—எப்படியாகி விட்டேன்?

ருரு :—முன்னிருந்த ஊக்கமெல்லாம் மறைந்து விட்டதே. அவளினும் நீயே அழகி என்று சொன்னேனல்லவா?

குமு :—அழகி, பாழான அழகி.

ருரு :—கோபம் எதற்கு ?

குமு :—ருரு! கரங்களையும் குவியச் செய்யும் அபூர்வமான சக்தி இருக்கின்றதா அந்தப் ப்ரமத்வரையிடம் ?......(தூரத்தில் ப்ரமத்வரையின் பாட்டு கேட்கிறது).

குமு :—அதோ, அவள் வருகிறாள். அந்த ......அந்த......ப்ரமத்வரை ! நான் போகிறேன்.

ருரு :—இரு; எல்லோரும் சேர்ந்து போகலாம். அவசரம் என்ன ?

குமு :—உனக்கு நேரமாக வில்லையா?

ருரு :—ஆன நேரம் ஆகிவிட்டது.

குமு :—பாவம்! எவ்வளவு நேரம் வீணாகி விட்டது......வீண்......வீண்....... நான் போகிறேன்......ருரு......நான் போகிறேன்.

(ப்ரமத்வரை பாடிக்கொண்டே வருகிறாள்)

ப்ரமத்வரை :—ருரு......ருரு......நீ இங்கிருக்கிறாயா ?

ருரு :—ப்ரமதா, எத்தகைய இனிமையான குரல் உன் குரல்.

காட்சி 2

ஒரு மாதத்திற்குப் பின்: பூர்ணிமை இரவு. பூம்புதரின் அருகில் ப்ரமத்வரை பாடுகிறாள்.

ருரு :—என்ன பாட்டு இது; இத்தகைய துயரம் எதற்கு?

ப்ரமத் :—(பாட்டை நிறுத்திக்கொண்டு) ருரு வந்தாயா. இப்படி வா. ஒருக்கால் நீ வரமாட்டாயோ என்று அஞ்சினேன். இந் நிலவொளி என்னைச் சொல்லமுடியாத சோகத்தில் ஆழ்த்துகிறது. முந்திய பூர்ணிமை இரவில்தானே நாம் முதல் முதலில் சந்தித்தது......இந்த ஒரு மாதத்திற்குள் என்னென்ன நேர்ந்தது. ருரு! முதல் முதல் உன்னைப் பார்க்கப் பயமாயிருந்தது. ஏதோ பரம வைதீகியாகத் தோன்றினாய். ஆனால் உன் உள்ளம் இவ்வளவு மென்மையானது என்று தெரியவேயில்லை.

ருரு :—நீயும் என் உள்ளத்தை உருக்கினை யல்லவா, ப்ரமதா. கடைந்து கடைந்து வரும் இவ்வாழ்க்கையில், சகடக்கால் போலச் சுற்றிச் சுழலும் நீ ஓர்புதிய அழகை, ஓர்புதிய ஆவலை, ஓர் புதிய ஆசயத்தை வளர்த்தாய் நீ. ப்ரமதா, எத்தகைய பிரேமா மயமாகச் செய்தாய் என்னை. அக்னிஹோத்திரங்களின் புகைக்கு ஈடுபட்ட கண்கள், கார்மேகத்தை ஒத்த உனது அடர்ந்த கூந்தலில் படிந்திருந்து உலகையே மறந்து நித்திரை புரிய விரும்புகின்றன. ப்ரமதா, ஒருகணம் நீ என் அருகில் இல்லாவிட்டால், நான் ஏதோ மதிப்புயர்ந்த பொருளை இழந்தவன்போல் ஆய்விடுவேன் ப்ரமதா, நீ என்னை எப்பொழுதும் பிரியலாகாது. சொல், நீ என்றும் என்னைப் பிரியமாட்டாய் என்று.

ப்ரமத் :—எனக்கு மாத்திரம் உன்னைப் பிரிந்திருக்க முடியுமா ? ருரு.......உன்னோடேயே இருக்கிறது எனக்கு சகலமும். உனது நிழலில் நடந்து கொண்டிருக்கும் பொழுதுதான் என் வாழ்க்கைக்கு ஒளி வருகிறது; உன் பார்வையாலேயே நான் உலகத்தைப் பார்க்கிறேன்.

ருரு :—ப்ரமதா, ப்ரமதா! ஏன் உன் கண்கள் நீர் ததும்புகின்றன? கண்மணி! அச்சம் எதற்கு ?

ப்ரம :—(அழுகுரலுடன்) ருரு! என்னமோ சொல்லமுடியவில்லை. இன்று மாலையிலிருந்து சொல்லமுடியாத சோகம் என்னைச் சூழ்கின்றது. ருரு! என்னருகில் வா; இன்னும் அருகில்; இன்னும்...நீ என்னைவிட்டுப் பிரியாதே! எனக்கு ஏதோ பயமாயிருக்கிறது. அளவில்லாத நமது அன்னியோன்யத்தைப் பார்த்து விதியே பொறாமை கொண்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது.

ருரு :—அகாரணமான அச்சம். நம்மைப் பிரிக்கும் சக்தி யாருக்கு இருக்கிறது? எனது உடலின் இரத்தப் பிரவாகத்திலேயே பாவி வரும் என் ப்ரமத்வரையை என்னைவிட்டுப் பிரிக்க யாரால் முடியும்?

ப்ரம :—ருரு! என் உயிரே! என்ன நம்பிக்கை உனக்கு! பிரேமை அத்தகைய நம்பிக்கையை அளிக்கும்போலும். ஆனால், ருரு, நான் இறந்து விட்டால்?

ருரு :—அப்பா, என்ன பேச்சு இது. இந்தப் பழுத்த நிலவில் இந்த திவ்விய சமயத்தில் பேசும் பேச்சா இது. அப்பா, இந்தக் கூற்று எதற்கு? வீணாக என்னை ஏன் அச்சுறுத்துகிறாய்?

ப்ரம :—அச்சுறுத்தவல்ல, பழுத்த நிலவு என்றாய்? ஆனால் இப் பூர்ணிமைச் சந்திரனுக்குக்கூட ஒருநாள் அமாவாசை அல்லவா?

ஒருகுரல் :—உண்மை, உண்மை; பூர்ணிமை நிலவு நிலையானதல்ல. இந்த உலக இன்பங்கள் யாவும் அநித்தியம். இத்தேகத்தை மிருத்யு தொடர்ந்துகொண்டே இருக்கும்.

ருரு :—யாரது? யாருடைய பேச்சு இது? (சிறிது நேரம் சும்மா இருந்து) ஒருவரையும் காணோமே. ப்ரமதா, நீயுங்கேட்டாயா, என்ன பிரமை இது!

ப்ரமத் :—பிரமை இல்லை...உண்மை...உண்மைதான். ருரு, என் ருரு!

ருரு :—ப்ரமத்வரா, என் உயிரே!

காட்சி 3

நாகபஞ்சமி. ஆச்சிரமத்தில் ஒரு சோலை. நாக பஞ்சமித் திருநாளை முன்னிட்டு பாம்புகளுக்குப் பாலூட்ட குமுதினியும் ப்ரமத்வரையும் செல்லுகிறார்கள்.

குமு :—(பாடுகிறாள்: ஆடுபாம்பே) ப்ரமத்வரா, ஏன் இவ்வளவு தாமதித்தாய். பாம்புகள் இரை தேடப் போய்விடுமே.

ப்ரமத் :—ருரு கூட வருவதாகச் சொன்னார். அதனால்—இதோ வந்துவிட்டார் ருரு.

ருரு :—குமுதினி, பால் பழங்கள் மலர்களோடு கூடிய பூஜாத்திரவியங்களைக் கொண்ட தட்டுடன் இருக்கும் உன்னைப் பார்த்தால் சாக்ஷாத் நாககன்னிகையாகவே தோற்றுகின்றாய்.

குமு :—ஆமாம். நான் உண்மையாகவே நாக கன்னிகைதான். கடித்தும் விடுவேன். (சிரிக்கிறாள்) இதோ இந்தப் புற்று நன்றாயிருக்கிறது. ஆனால் இங்கு யாரோ முன்னமேயே பால் ஊற்றியிருக்கிறார்கள். மற்றொரு புற்றிற்குப் போகலாம்.

ப்ரமத் :—அதோ, அந்தப் பெரிய புற்றுக்குப் போகலாம். காசரளிக் கொடியின் கீழ் என்ன அழகாயிருக்கிறது அந்தப் புற்று.

ருரு :—ப்ரமத்வரா......அந்த வழியாகப் போகாதே, புல் அதிகம். முழங்கால் அளவு புல்லாயிருக்கிறது. அவ்வழியில் நீ போகாதே. ப்ரமதா, அந்த வழியாக வேண்டாம்.

ப்ரமத் :—என்ன பயம்?

ருரு :—ப்ரமதா......வேண்டாம்.

ப்ரமத் :—பயமென்ன? போகலாம் வாருங்கள்.

(குமுதினி மீண்டும் பாடுகிறாள்)

ப்ரமத் :—ஐயோ !பாம்பு! பாம்பு! என்னைக் கடித்துவிட்டது.

குமு :—பாம்பு, பாம்பு, ஐயோ!

ப்ரமத் :—ஐயோ ! ருரு, ருரு, பாம்பு என்னைக் கடித்தோடிவிட்டது.

ருரு :—ஆ! என்ன !எங்கே ?

ப்ரமத் :—ருரு, ருரு, இந்த வலி என்னால் பொறுக்க முடியவில்லை. ஐயோ! ஐயோ! வலி, வலி, முடிந்துவிட்டது. பூர்ணிமைச் சந்திரன். அமாவாசை, ஐயோ! வலி, ருரு, அமாவாசை.

ருரு :—ப்ரமதா, ப்ரமதா!

காட்சி 4.

ஓர் ஆலமரத்தடியில் ருரு சோகத்தில் ஆழ்ந்திருக்கிறான்; அவன் மடியில் உயிரற்ற ப்ரமத்வரை; சிறிது தூரத்தில் ரிஷிகளும் ஆச்ரமவாசிகளும்.

ருரு :—ப்ரமதா! ப்ரமதா! எத்தகைய நித்திரையில் ஆழ்ந்திருக்கிறாய். என் வார்த்தை கேட்கவில்லையா? நான் ருரு; ருரு, உன் பிரியன். ப்ரமதா! என்ன மறதி இது. நினைவு இல்லையா? அன்றிரவு எது எப்படியானாலும் நீ என்னைப் பிரிந்திருக்கமாட்டாயென்று செய்த சத்தியம் எப்படி மறந்தாய்.

கௌதமர் :—குமாரா! நீ பிரமையை நீக்க வேண்டும். ப்ரமத்வரைக்கு உன் அன்பு

மொழிகள் இனி கேட்காது. நீ மனந்தேற வேண்டும், நீ மனந்தேறவேண்டும். விதி, விதி!

ருரு :—மகாத்மா கௌதமரே! என் ப்ரமத்வரையை உயிர்ப்பிக்கமாட்டீர்களா? கருணை நிறைந்த ரிஷிகள் நீங்கள் எல்லோரும். கௌசிகரே! உங்களுடைய தபோபலத்தின் அருளால் என் ப்ரமத்வரையை எனக்கு அளிக்கமாட்டீர்களா?

கௌத :—குமாரா! மனந்தேறு. மனந்தேறு; அறிந்தவன் நீ; நீயே மனந்தேறவேண்டும்.

ருரு :—சுவாமி! சகல சாஸ்திரங்களையும் அறிந்தவர்கள் நீங்கள்; மந்திர தந்திரங்களையும் பூர்ணமாகத் தெரிந்தவர்கள் நீங்கள். ஏதோ ஒருவழியாக இப்ரமத்வரையின் விஷத்தை நீக்க முயலமாட்டீர்களா? இனி எனக்கு என்ன வழி? இவளை உயிர்ப்பிக்கும் வழி தெரிந்தால் நான் என் தபோபலம் முழுவதும் கொடுத்துவிடுவேன்; என் உயிரையும் கொடுத்துவிடுவேன். (இடி இடிக்கும் சப்தம்).

(குரல்) :—காலத்தை வெல்ல யாராலும் முடியாது; ஆனால் ஒரு உபாயம் இருக்கிறது. செய்யமுடியுமானால் கேள் : உன் ஆயுளில் பாதியை இக்கன்னிகைக்கு நீ கொடுப்பாயேயானால் இவள் விஷம் நீங்கி உயிர்பெற்றெழுவாள். முன்னைவிட கட்டழகியாகத் திகழ்வாள்; நீ வயோதிகன் ஆவாய்; இது உனக்குச் சம்மதமானால் அவளை உயிர்ப்பிக்கலாம்.

கௌத :—என்ன கருணை!

கௌசிகர் :—கௌதமரே! என்ன நியமம் இது? குமாரன் ருரு கிழவனாகவேண்டுமா?

குமுதினி :—(ஓடிவந்து) ருரு கிழவனாக வேண்டுமா? ருரு! பார். நீ இந்த நியமத்திற்கு ஒப்புக்கொள்ளாதே! நீ என்ன, கிழவனாவதென்ன? இது கூடாது. இதோ பார்! நீ இங்கு இருக்கவேண்டாம்; உன் மனம் கலைந்துவிடும், என்னோடு வா! ருரு! போகலாம், என்னோடு வா.

ருரு: —ப்ரமத்வரா! ப்ரமத்வரா!

குமுதினி :—இனி, எங்கே ப்ரமத்வரை? போகலாம் வா; வா, ருரு, வா.

காட்சி 5

சோலையில் மற்றொரு பாகம். குமுதினி ருருவுக்குப் போதனை செய்து கொண்டிருக்கிறாள்.

குமு :—ருரு கேட்கமாட்டாயா? எத்தனை சொன்னாலும் கேட்க மாட்டாயா?

ருரு :—கேட்பதற்கு என்ன இருக்கிறது? ஐயோ ப்ரமத்வரை, ப்ரமத்வரை! ப்ரமத்வரை யில்லாமல் நான் வாழமுடியுமா?

குமு :—ப்ரமத்வரா...ப்ரமத்வரா...தைரியசாலியான உனக்கு இத்தகைய சஞ்சலம் உண்டாகுமென்று நான் நினைக்கவில்லை. ருரு, பார், என்னைப் பார்த்தால் வாழ்க்கையிலேயே ஓர் புதிய ஊக்கம் உண்டாகும் என்று நீ சொல்லவில்லையா? என் கண்களில் கிளர்ச்சி யிருக்கிறது. என்று சொல்லவில்லையா? நீ பார், பார். நம்முடைய பிரேமை ஒரு நாள் பிரேமையல்ல, சிறு வயதிலிருந்தே உன்னை என்னவனாகவே நினைத்துக் கொண்டுள்ளேன். ஆனது ஆகிவிட்டது. காலப்பிரவாகத்தை எதிர்த்து நீந்த யாரால் முடியும்? ப்ரமதவரை இனி உனக்குக் கிட்டமாட்டாள்.

ருரு :—கிட்டாமலென்ன? அசரீரி சொன்ன நியமம் இருக்கிறதே.

குமு :—என்ன நியமம்? ஒருக்கால் அவள் உயிர் பெற்று வந்தாலும் கிழவனாகிய ருருவை அவன் கண்ணெடுத்தும் பார்ப்பாளா? நவயுவனாக உன்னைப் பார்த்த அவள் உனது கிழத்தன்மையைச் சகிப்பாளா? ருரு, வாழ்க்கையுலுள்ள அழகு முழுவதையும் அநுபவிக்க வேண்டிய உனக்கு, வருவித்துக் கொண்ட கிழத்தனம் எதற்கு? ருரு, அவள் மாத்திரம் எப்படிச் சகிப்பாள்? பேரழகியான அவளுக்கு சுருங்கிக் கிடக்கும் உன் சரீரம் இரக்கத்தை உண்டாக்குமே தவிர, சந்தோஷத்தை அளிக்காது. கிழத்தன்மையால் நடுங்கும் உன் கரங்களைப் பார்த்தால், அவள் நெஞ்சில், 'ஐயோ! பாவம்' என்ற எண்ணம் வருமே தவிர, உன்னுடைய ஆலிங்கனத்தில் மயங்க வேண்டும் என்று எண்ணம் வராது.

ஒருக்கால், அவளுக்கு உன்மீது வெறுப்பு இல்லாவிட்டால், அவள் ஏதோ பக்தியால்

தான் உனக்குப்பணி செய்வாளே தவிர, அவள் உன்னை விரும்பாள். ஒரு நாளும் விரும்ப இயலாது.

ருரு :—குமுதினி, உன் பேச்சில் உண்மையில்லாமல் போகவில்லை. ஆமாம்! லாவண்யவதியான ப்ரமத்வரைக்கு என் கிழப்பிரேமையை எப்படி அளிப்பேன்? ஆனால் ப்ரமத்வரை இல்லாமல் எனக்கு உலகமே இல்லையே. இனி, நான் வாழ்வது எதற்காக, யாருக்காக?

குமு :—யாருக்காகவா? எனக்காக. ருரு, நான் இருக்கிறேன். உனக்காக. பார், இந்தத் தபோவனமெல்லாம் எவ்வளவு அழகா யிருக்கிறது. கிளைகளெல்லாம் வசந்த காலத்தை வரவேற்கின்றன, பார். நாம் இருவரும் கூடியிருக்கும் பிரதேசத்தில் அழகு ததும்பாதா? ருரு, உன் பாதத்தையே தாங்கிக்கொண்டு உனது பாதபீடமான எனது நெஞ்சைக் கேள். உனக்காகவே அடித்துக் கொண்டிருக்கிறது. ருரு, ருரு, உன் பெயரைச் சொன்னாலே என் உதடுகளில் எங்கு மில்லாத இனிமை ஊறுகின்றது. இந்த இனிமையெல்லாம் உனது தானே.

ருரு :—இனிமை, என்ன இனிமை? ப்ரமத்வரை இல்லாவிட்டால், இயற்கையிலேயே இனிமை ஏது, குமுதினி? அளவில்லாத உன் காதலின் அழைப்பினால் என்னை உயர்த்தினாய். ஆனால் எனக்குப் ப்ரமத்வரைதான் வேண்டும். அவள் இல்லாத இளவேனிற்காலம் எனக்கு இலையுதிர்காலமாகத் தான் ஆகும். அவள் இல்லாத வெண்ணிலா எனக்குப் பொறுக்க முடியாத இருண்ட இரவாகும்.

குமு :—உனக்காகத்தான் சொல்கிறேன். ப்ரமத்வரை இளையவனான ருருவை நேசித்திருக்கலாம். ஆனால் பல் இழந்து கீல் தளர்ந்த ருரு அவளுக்கு வேண்டியிருக்குமா?

ருரு :—நான் எப்படியிருந்தாலும் கட்டாயம் நான் அவளுக்கு வேண்டியவன்தான். அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது.

குமு :—அசடே, நீ எப்படி நினைத்துக் கொள்கிறாய். ஆனால், மற்றொரு வார்த்தை. மோந்தாலே வாடும் அனிச்ச மலர் போன்ற அவளது இளமைக்கு ஈடாக உன் கிழத்தனத்தை அளிப்பது நியாயமா? அவள் உன்னிடம் சொல்ல முடியாது இருக்கலாம். ஆனால் இப்பொழுதோ, ஓர் அரை நிமிஷ நேரம் அவள் மனதில் இந்த யோசனை வந்தால், இந்தக் கிழவனுடனா நான் இல்லறவாழ்க்கை செய்வது என்று அவள் அரை நிமிஷ நேரமாவது வருந்தினால் உன்னால் பொறுக்க முடியுமா?

ருரு :—குமுதினி! வேண்டாம். இனிச் சொல்லாதே; நான் அவளை உயிர்ப்பித்து, அவள் என் கிழத்தனத்தைப் பார்த்து வெறுப்புற்றால், உடனே அவள் பாதங்களிலேயே என் உயிரை விடுவேன். ப்ரமத்வரா! ப்ரமத்வரா! இனி உன்னைவிட்டுப் பிரிந்திருக்க இயலாது. இதோ வந்துவிட்டேன், வந்துவிட்டேன்.

குமுதினி :—வேண்டாம், வேண்டாம்; உனக்காகத் தான் சொல்லுகிறேன். நீ என்ன செய்கிறாயோ, உனக்கே தெரியவில்லை. வேண்டாம், போகாதே. ருரு! ருரு.........ருரு! ருரு.........அப்பா, என்ன பைத்தியம் இது!

காட்சி 6

அதே இடம் சற்று நேரம் சென்ற பின்.

ருரு :—ப்ரமதா! ப்ரமதா! எத்தகைய ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறாய். விதியே! உன் நியமத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். என் ஆயுளைக்கொடுத்து என் ப்ரமத்வரையை உயிர்ப்பித்தருள்வாயாக. (இடி இடிக்கும் சப்தம்).

ருரு :—ப்ரமத்வரா! ப்ரமத்வரா அசைகிறாள். ஐயோ! ஆனால் என் வயோதிகத்தைக் கண்டு பயங்கொள்வாளோ, என்னமோ? அப்பா, என்ன வேலை செய்தேன். நானே வருவித்துக்கொண்டேன் அவளுக்கும் எனக்கும்கூட இந்த தீவிர வேதனையை.

ப்ரம :—(மெதுவாக) ருரு! ருரு!

ருரு :—இவளுக்குத் தன் நினைவு வருகிறது. என் விகார ரூபத்தை இந்த உத்தரீயத்தால் மறைத்துக்கொள்வேன். உத்தரீயத்தால் முகத்தை மறைத்துக்கொள்வேன்.

ப்ரம :—ருரு! ருரு! இங்கேயே இருக்கிறு யா? நான் உன் மடிமீது எப்படி வந்தேன்? நீ ஏன் என்னைவிட்டுப் பிரிந்தாய்? ஒருகண மும் நீ என்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று சத்தியம் செய்தாயே, எப்படிப் போனுய்? அல்லது நானே போனேனே?

ஆம், நான்தான் போனேன். என்ன நீண்ட பிரயாணம்! நாகலோகத்திற்குச் சென்றிருந் தேன். ருரு! ருரு! ஏன் பேசமாட்டாய்? ருரு! இந்த முகமூடி எதற்கு? அதை நான் எடுத்துவிடுகிறேன், ருரு.

ஹா! என்ன இது! நீ என் ருருதானு? இந்த ஒளி என்ன? உன் முகத்தில் எத்தகைய காந்தி! உன் கண்கள் ஜொலிக்கின்றன; உன் னிடத்தில் நவ வசந்தம் தாண்டவமாடுகிறது. ருரு! என்னைத் தழுவிக்கொள்; இறுகத்தழு விக்கொள். உன் உதடுகள் எங்கே? இயற்கையாகவே சுந்தரவடிவன் நீ. அதிசுந்தர னுகிவிட்டாய், ருரு.

ருரு :—ப்ரமத்வரா! ப்ரமத்வரா! எல்லாம் உன் பேரின்ப வெள்ளத்தினுலே தான். ப்ரமதா! ப்ரமதா!

ராமனும் ஸீதையும்.

"ஸ்ரீ ராஜநாயகி"

தினம் 1. ஸந்தி 5.

காலம் : காலை.

இடம் : பஞ்சவடி ஆசிரமத் துவாரம்.

பிரவேசம் : ராமன், ஸீதை, லக்ஷ்மணன்.

ராமன் :—இனி நாம் முன்னிலும் அதிஜாக் கிரதையாகவே யிருக்கவேண்டும், லக்ஷ்மண!

லக்ஷ்மணன் :—இன்றைக்கோ நாளைக்கோ, இங்கு இன்னுமொரு ராக்ஷஸ ஸைந்நியம் தோன்றினுலும் ஆச்சரியமாகாதுதான்.

ஸீதை :—அதோ பாருங்கள், ஒரு விசித்தி ரமான ஜந்து! மான் மாதிரிதான் இருக்கிறது. இருந்தாலும், இந்தமாதிரி மான் யாருமே பார்த்திருக்கமாட்டார்களென்று நினைக்கி றேன். ஸ்வர்ணமயமான ரோமங்களினிடை யே வெள்ளித் திலகம்போன்ற சிறு புள்ளிகள்; தந்தத்தினுல் இழைத்ததுபோல் கீழ்க்கால்கள். அது காலைத் தூக்கும்போது, குளம்புகள் பச் சை மரகதத்தில் பட்டை செதுக்கினவைபோல் பளிச்சென்று மின்னுகிறதைப் பாருங்கள்; துள்ளி எழும்பினுலோ, வெண்பட்டு விரித்தாற் போன்ற அடிவயிறு. கண்களைத்தான் பாருங் களேன், ஸமுத்திரத்துக்குள்ளிருந்து ஒளி வீசும் சிவப்பு ரத்தினங்களோ? திருகிக்கொ ண்டு எழும் அதன் கொம்புகளின் வழியே தே வலோகத்தை எட்டிப் பிடிக்கலாம் போலல்ல வா இருக்கிறது. இந்த ஜந்துவை நாம் எப்படி யாவது அயோத்திக்குக் கொண்டுபோய் எல் லோருக்கும் காண்பிக்கவேண்டும். நமது வனவாஸச் சின்னமாக இதை நமது கிரு ஹத்திலேயே வளர்ப்போம்; நமது உத்யா னங்களில் இதை உத்ஸர்ஜனம் செய்து வைப்போம். முக்கியமாய், ஊர்மிளை தான் இம்மாதிரி ஜந்துக்களைக் கண்டவிடத்து குழந்தைபோல் விளையாட வந்துவிடுவாள். இன்றைக்கு இந்த ஜந்துவைப் பார்த்ததும் எனக்கு அவள் நினைவுதான் முன்வந்து நிற்கி றது. அடுத்த வருஷம் இந்நாளில் அவளைக் காணும்போது முதலில் அவளுக்கு இந்த மானைக் கொடுத்துவிட்டுத்தான் மற்றப் பேச் சுப் பேசுவேன். ஆரியபுத்திர! அதை மெது வாய் வளைத்துப் பாருங்களேன்! என்னயோ சிக்கிறீர்கள்? நான் சொல்லுகிறது காதில்விழ வில்லையா?

ராமன் :—லக்ஷ்மண! நான் இந்த மானைத் தான் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன். இந்த அற்ப விஷயத்தில், அதுவும் ஊருக்குத் திரும்பப் போகிற நாளில், இவளுக்குத்தான் மனக் குறை ஏன்?

லக்ஷ்மணன் :—இந்த மாதிரி மான் பூலோகத்திலேயே கிடையாதென்பது முற்றிலும் வாஸ்தவமே. ஏனெனில் இது மானே யல்ல. மாயாவி ராக்ஷஸன் யாரோ வேஷம் போட்டுக் கொண்டு நம் சத்துருக்களுடைய சாரனாய் வந்திருக்கிறான் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். நாம் முன்பு மாரீசனுடைய விசித்திரரூபங்களைப் பார்க்கவில்லையா? அநேகமாக இதுகூட அவனாகவே யிருக்கும் என்று தோன்றுகிறது. எதுவாயிருந்தாலும், மானைத் துரத்திக் கொண்டு நீங்கள் போகவேண்டாம்; அவசியமானால், நானே போய் வருகிறேன்.

ரா :—நீ சொல்வது உண்மையாகவே யிருக்கலாமென்று எனக்குந் தோன்றுகிறது. அப்படியானால், இது ராக்ஷஸனாயிருக்கும் பக்ஷத்தில், அவன் பிராணனை இப்பொழுதே பானம் செல்துவிட ஸர்ப்பம்போல் என் பாணம் காத்துக் கொண்டிருக்கிறது. யதார்த்த மிருகமா யிருந்தால் அதை மெதுவாக இந்தப் புறம் மடக்கி அனுப்புகிறேன்; நீ அதைப் பிடித்துக் கொள். நம்மிருவர் கைக்குள் அது இன்றைக்கு உயிரோடாவது உயிரை விட்டாவது அகப்படவேண்டும். நான் போய் வருகிறேன்; நீ மட்டும் ஸீதையைவிட்டு க்ஷணமும் விலகாதே!

(ராமர் நிஷ்க்ரமணம்)

லக்ஷ்:—அண்ணாவுக்கு வர வர எதிலும் சீக்கிர காரிய புத்தியே பலப்பட்டு வருகிறது?

ஸீதை :—இந்த மானைப் பிடித்து வருவது என்ன, அவ்வளவு பெரிய காரியமா?

லக்ஷ் :—அது மானா யிருந்து விட்டால், ஒன்று மில்லை; ராக்ஷஸனா யிருந்து விட்டால் சற்று நிதானிக்க இடமுண்டு என்று தான் நினைக்கிறேன்.

ஸீதை :—நீதான் 'பர்த்தாவுக்கு ராக்ஷஸ கணங்களினால் ஒருக்காலும் யாதொரு பயமுமில்லை' என்று அடிக்கடி சொல்லுகிறாயே; இந்த மான் ரூபங் கொண்ட ஒரே ஒரு ராக்ஷஸன் என்ன செய்து விட முடியும்?

லக்ஷ் :—எவ்வளவு பிரஸித்த மந்திரவாதியானாலும் வலுவிலே ஸர்ப்பத்தின் வளைக்குள் கைவிடுவதுண்டா? சத்துருக்கள் இந்த மார்க்கமாகத் தான் வருகிறோமென்று சொல்லிக் கொண்டா வருவார்கள்?

(திரைக்குள் தூரத்தில் விகாரமான உரத்த குரலில் "ஹே, ஸீதே! ஹே, லக்ஷ்மண!" என்கிற த்வனி கேட்கிறது; வரவர ஹீன ஸ்வரமாகிக் கொண்டே மூன்றுதரம் கேட்கிறது.)

ஸீதை :—(பதறிக்கொண்டு) லக்ஷ்மண, சீக்கிரம் போ! பர்த்தாவின் குரல்போல் இருக்கிறதே! காது கேட்கவில்லையா, உனக்கு? என்ன பேசாமலிருக்கிறாயே?

லக்ஷ் :—இரண்டாவது மூன்றாவது குரலைக் கேட்டீர்களா, அவை பர்த்தாவின் குரலே அல்ல; ஆகையால் முதல் தடவைமட்டும் சற்று சிரமப்பட்டு யாரோ அநுகாணம் செய்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். எதற்கும் தாங்கள் கிஞ்சித்தும் சஞ்சலப்படவேண்டாம்; சற்றுப் பொறுப்போம்.

ஸீதை:—என்ன, நிதானமாய்ப் பதில் சொல்லுகிறாயே! லக்ஷ்மண, நீ எவ்வளவு கல் நெஞ்சு படைத்தவன் என்று எனக்கு இப்பொழுது தான் தெரிகிறது! இப்பொழுது என் ஹிருதயம் துடிப்பதில் பாதியளவு உன் ஹிருதயம் துடித்தாலும், நீ இந்த க்ஷணமே ராமன் பாதத்தில் துள்ளிப் போய் விழமாட்டாயா? நீ பசுத்தோல் போர்த்த புலி என்று இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. பரதனும் நீயும் ஒத்துப் பேசிக்கொண்டு, 'நீ அடிக்கிறாற் போல் அடி, நான் அழுகிறாற்போல் அழுகிறேன்' என்று பாசாங்கு செய்து, கபடந் தெரியாத ராமனை வஞ்சித்து, சமயம் பார்த்து நடுக்காட்டில் ஆபத்தில் கைவிட்டு விட்டு, என்னையும் ராஜ்யத்தையும் ஸ்வீகரித்துக்கொள்ள ஏற்பாடு செய்துகொண்டு தான் எங்களிருவரையும் பின் தொடர்ந்து வந்திருக்கிறாய் நீ என்று இப்பொழுது நன்றாகத் தெளிவாகி விட்டது. ஆனால் உன் யோசனை சிறிதும் பலிக்காதென்று உனக்கு இத்தனை நாளாக விளங்கி

யிராவிட்டால் நான் இப்பொழுதே விளங்கச் செய்கிறேன். கோதாவரி கர்ப்பத்தில் புகுவேன், பூகர்ப்பத்திலும் புகுவேன்! சைல சிகரத்தில் ஏறிக் குதிப்பேன்; நீ இன்னும் க்ஷண நேரம் இங்கு நிற்பாயானால், நான் இப்பொழுது சொன்ன வார்த்தைகள் அத்தனையும் யதார்த்தமாகி விடும்!" (பர்ணசாலையை விட்டு வெளியேறுகிறாள்). அப்பொழுதும் என் பிரேதத்தைத் தஹனம் செய்யவாவது ராமனைத் தேடுவாயோ என்னவோ?

லக்ஷ்:—(தலைகுனிந்து, கைகளால் பூமியைத் தொட்டுக் காதுகளைப் பொத்திக்கொண்டு, தழதழத்த குரலில்) தாங்கள் நின்றுகொள்ளுங்கள், இதோ நானே நகர்ந்துவிட்டேன். ராம ராம! சாந்தம் பாபம்! தாங்கள் எனக்குப் பிரத்யக்ஷ தெய்வம் என்பதைத் தவிர வேறு பதில் சொல்லத் தெரியவில்லை. அப்படிப்பட்ட தங்களிடம் இப்பொழுது திடீரென்று காலவசமாகப் பிராகிருத ஸ்திரீ ஸ்வபாவம் தோன்றுமானால் அதற்கு நானே காரணஸ்தானமாக இங்கு நின்றுகொண்டிருக்க ஸஹியேன்; அப்படியிருக்கத் தங்கள் பிராணத் தியாகத்தைப் பார்த்துக்கொண்டு அதற்கு நானே ஹேதுவாக நிற்பேனா? இதோ புறப்பட்டு ராமனிடமே போகிறேன். ஆனால், கடைசியாக, ஒரே ஒரு வார்த்தை! பர்த்தா அவர்களின் ஆக்ஞை தாம் வரும்வரையில் நம்மில் யாரும் இவ்விடம்விட்டு நகரக்கூடாதென்பது. இப்பொழுது அந்த ஆக்ஞையை நான் மீறும்படி ஏற்பட்டுவிட்டது. இனித் தாங்களாவது அதை மீறாமல் காப்பாற்றக் கோருகிறேன். பர்த்தா அவர்கள் என்னைத் தங்களுக்குக் காவலாக வைத்துப் போயிருக்கிறார். இப்பொழுது அந்த ஸ்தானத்தில் நியமிப்பதற்கு என்னைவிட பலமானதொரு வஸ்து, தங்கள் பாதிவிரத்திய தர்மத்தைத் தவிர இங்கு வேறொன்றும் காணகிலேன்! அந்த தர்மத்தின் பலம் குறைவுறுவண்ணம் இந்த வனதேவதைகள் ரக்ஷிப்பார்களாக! (திரும்பிப் பார்த்துக்கொண்டே நிஷ்க்ரமணம்.)

ஸீதை:—இப்பொழுது இவனையும் அனுப்பி விட்டேனே, இனி நான் என்ன செய்கிறது? இனி யாரை ஏவுகிறது? நரகம் என்பது சும்மா இருக்கவும் மாட்டாமல் இன்னது செய்வதென்றுந் தோன்றாமல் தவிக்கும் லோகம் என்று பிதா அடிக்கடி சொல்லுவாரே, அது தானே இங்கு நான் நிற்பது! இனி யார் எனக்கு பர்த்தாவின் சமாச்சாரம் கொண்டு வரப் போகிறார்கள்? இவர் எந்த திக்கில் இருக்கிறார் என்றே தெரியவில்லையே! அப்புறம் யாதொரு சப்தமுங் கேட்கவே இல்லையே! அதற்கு என்ன அர்த்தம்? நான் இவ்வளவு வார்த்தை சொன்ன பிறகு தானே அவனும் புறப்பட சம்மதித்தான்! அப்படியும் பர்த்தாவை அழைத்து வருகிறேனென்று சொல்லமாட்டவில்லை, பார்த்தாயா! (உற்றுக் கேட்டு) என்ன, ஏதோ வேத மந்திரங்கள் போலக் கேட்கிறதே, ரிஷிகளோ? பர்த்தாவினிடமிருந்து தான் வருகிறார்களோ? (தூரத்தில் எட்டிப் பார்த்து) யாரோ யதீசுவரர் போலல்லவா தோற்றுகிறது. (தூரத்தில் உபநிஷத் வாக்கியபடனத்துடன் ராவண ஸந்யாஸீ பிரவேசம்).

ராவணன்:—"இதி மானுஷீஸ் ஸமாக்ஞா: அத தைவீ: திருப்திரிதிவ்ருஷ்டௌ பலமிதி-வித்யுதி யசஇதிபசுஷு ஜ்யோதிரிதிநக்ஷத்ரேஷு ப்ரஜாதிரமிருதமாநந்த இத்யுபஸ்தே" (பர்ணசாலைத் துவாரத்தில் நின்றுகொண்டு) பவதி பிக்ஷாந் தேஹி! "ஸர்வமித்யாகாசே" (ஆகாசத்தில் நிற்கும் தன் விமானத்தை அண்ணாந்து பார்க்கிறான். ஸீதை பரபரப்புடன் தர்ப்பாஸனம், அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் எல்லாம் கொண்டுவந்து வைக்கிறாள்; ஒரு தேக்கு இலையில் பழங்கள் கொண்டுவந்து வைக்கிறாள்.)

ஸீதை:—பிராம்மணோத்தம! யதீசுவர! இந்த கிருஹத்தில் கிடைக்கக்கூடிய பூஜையைக் கிரஹித்துக் கொண்டு அநுக்கிரஹிக்க வேண்டும். சீக்கிரமே பர்த்தா அவர்கள் கனிஷ்டருடன் கானகத்திலிருந்து இன்னும் மதுரமான ஆஹாரங்கள் யதேஷ்டமாய்க் கொண்டு வருவார்கள். தாங்கள் இருந்து விசிராந்தி செய்து கொண்டு போகலாம்.

ராவணன்:—என்னுடைய ஆசிரமத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற பூஜை இந்த மாதிரியல்ல. நான் இங்கே அதிக நேரம் தாமதிக்க முடியாதவனாக இருக்கிறேன். இந்தக் காட்டில் யாரோ

இருவர் தாபஸவேஷத்துடன் ஒரு ஸ்திரீயையும் கூட்டிக்கொண்டு சஞ்சரிக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அதேமாதிரியான ஆசிரமத்தில்தான் நானும் பிரவேசித்திருக்கிறேன். ஆனால் என்னுடைய சுசுரூஷைக்கு அம்மாதிரி ஒரு ஸ்திரீதான் குறைவாக இருக்கிறது. நல்ல வேளையாய் இன்று நான் உன்னைக் கண்டு கொண்டேன்; நீ என்னுடன் வருவாயானால் அந்தக் குறையும் நீங்கிற்று.

ஸீதை:—(முகம் வெளுத்துக் கைகால் துவண்டு) தங்களுடைய வேஷத்துக்கும் வார்த்தைக்குமுள்ள பொருத்தம், ஸ்வர்ண கலசத்துக்கும் அதற்குள்ளிருக்கும் சரீர விஸர்ஜிதத்துக்கும் போலல்லவா தோன்றுகிறது. தங்களுடைய கதாசேஷத்தை பர்த்தா அவர்களிடம் சொல்லிக்கொள்ளுங்கள்; அவ்வளவுக்கு சாவகாசமில்லாவிடில் இப்பொழுதே புறப்பட்டு வெளியேறலாம்.

ராவ:—ஸ்திரீரத்னமே! உன் பெயரைமட்டும் தெரிந்துகொண்டு போய்விடுகிறேன்.

ஸீதை:—என் பெயர் ஸீதை; மிதிலாதிபனான ஜனகமகாராஜனுடைய குமாரி; இக்ஷ்வாகு, காகுத்ஸ்த வம்சத்தில் பிறந்த தசரத குமாரனாகிய ஸ்ரீராமனுடைய ஏக தர்மபத்நீ.

ராவணன்:—போதும்; அவ்வளவு தான் எனக்கு வேண்டியது. எல்லாம் தெரிந்து கொண்டுவிட்டேன். ஸீதே! இங்கு வரும் போது உன் முன் ஒப்புவிப்பதற்கென்று எவ்வளவோ பொய்க் கற்பனைகளெல்லாம் பாடம் செய்து கொண்டு வந்தேன்; எல்லாம் உன்னைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல் எங்கேயே மறைந்து போய்விட்டன. நானென்ன செய்வேன்? உன்னிடம் பொய் பேச அசக்தனாகிவிட்டேன் என்று தெரிகிறது. நான் தான் லங்கேசுவரனான ராவணன், திரிலோகமும் என் பெயரைக் கேட்டால் நடுங்கும்; உன்னைத் தவிர என் தங்கை சூர்ப்பணகை (உங்களுக்கெல்லாந்தான் அவளைத் தெரிந்திருக்குமே) ஆதிசேஷனால் ஆகாத காரியத்தைச் செய்யப் பார்த்தாள். அதாவது, உன் ரூபத்தை எனக்குப் பிரத்யக்ஷமாக்க கூடிய பதங்களை சிருஷ்டி செய்து பார்த்தாள். அப்பொழுது அவள் தடுமாறுவதைப் பார்த்து அவளுக்கேற்பட்டிருக்கிற துக்கத்தையும் மறந்து சிரித்தேன்; அவள் பேரில் குற்றமில்லை யென்று இப்பொழுது உன்னை நேரில் பார்த்த பிறகு தான் தெரிகிறது. தனக்கு அங்கபங்கத்தினால் ஏற்பட்ட தாபத்தை உன்னால் எனக்கேற்பட்டிருக்கிற மன்மததாபமாக மாற்றிக் கழித்துக் கொண்டு விட்டாள், கெட்டிக்காரி. அந்தக்ஷணமே என் மனது உன்னிடம் ஸ்திரமாய்ப் பாய்ந்து திரும்பி வர மறுக்கிறது. இந்தக்ஷணம் என்னுடைய அந்தப்புரத்தில் எத்தனையோ தேவ கந்தர்வ அபஸ்ர ஸ்திரீகளெல்லாம் என்னை வரவேற்க காத்திருக்கிறார்கள்; ஆனால் உன்னைப் பார்த்த பிறகு என் மனது அவர்களிடம் சிறிதும் செல்லவேயில்லை. தனக்குரியதான ராஜ்யத்தைக் கைநழுவ விட்டு இக்காட்டில் அன்ன வஸ்திரத்துக்கில்லால் கிலேசப்பட்டுத் திரியும் ராமனை உனக்கு பர்த்தா என்று சொல்வதுகூட நாவுக்கு அஸம்பாவிதமாகப் படுகிறது. இத்தனைநாள் நீ அவனை உதறித்தள்ளாமல் இருப்பது உன் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இன்று முதல் எனக்குப்பட்டமஹிஷியாவது தான் உனக்குப் பொருத்தமான பதவி. அந்த ஸ்தானத்துக்கு ஏற்றவளும் உன்னைத் தவிர உலகில் யாருமில்லை. உன்னைப் பார்த்த பிறகு என் தங்கைக்கு உங்களால் ஏற்பட்ட அவமானத்தை மன்னித்து மறந்தும் விட்டேன். அதன் மூலமாக உன் ரூபத்தின் தரிசனம் எனக்குக் கிடைக்கிறதென்றால், அவள் தினம் தினம் அவமானப்பட்டுக் கொண்டே இருக்கட்டும். என்னுடைய மற்றப் பத்தினிகளை யெல்லாம் உனக்குச் சேடிகளாக அமர்த்தி உன்னைத் திரிலோகத்துக்கும் ராணியாக்குவேன். நான் உனக்கு அடிமையாயிருப்பதே ஜன்ம பலனாகக் கருதுவேன், அதோ ஆகாசத்தில் நிற்கிறது, பார், என் விமானம். உன்னை ஏற்றிக்கொண்டு போக வந்திருக்கிறேன். உன்னை இப்படி ஏகாந்தத்திற் காண வேண்டி இராப்பகலாய் எவ்வளவு உபாயங்கள் சிந்தித்திருப்பேன் என்பதை நீ அறிவாயா? உன்னுடைய அங்க ஸ்பர்சத்தினால் என்னுடைய பராக்கிரமம் இன்னும் நூறு மடங்காகும். தேவலோகத்தையே ஜயித்து உன் பாதத்தில் ஸமர்ப்பிப்பேன். புறப்படுவோம்.

ஸீதை :—(காதுகளைப் பொத்திக்கொண்டு பராங்முகமாய்) ஹே மஹாபாபி! ஹே ராக்ஷஸப் பதரே! போதும் நிறுத்து உன் ஆத்மப் பிரசம்ஸையை. பராக்கிரமம் என்று சொல்லிக்கொள்ள உன் நா கூசவில்லையா? நீ இப்பொழுது செய்யும் காரியம் உன் பராக்கிரமத்தைக் கண்ணாடிபோல் உனக்கே தெளிவாய்க் காட்டவில்லையா? புருஷனில்லாத வீட்டில் புகுந்து ஸ்திரீயை அழைப்பதுதான் நீ இத்தனை நாளாய்ப் பாடம் கற்றுக்கொண்ட பராக்கிரமமோ? உன் பிராணன் உனக்குப் பிரியமானால் நீ இந்த க்ஷணமே ஸிம்ஹத்தைக் கண்ட நரிபோல் ஓட்டம்பிடி. இல்லாவிடில் என் நாதனுடைய பாணம் உன் பிராணனைக் கொத்திக்கொண்டு, ஸர்ப்பத்தைக் கொத்திக் கொண்டு கிளம்பும் கருடன்போல் கிளம்பி அவருடைய தூணீரக் கூண்டில் வந்தடையும். ஸ்வய வேஷத்தோடு என் புருஷனைப் பார்க்கப் பயந்து ஸந்யாஸி வேஷங்கொண்டு ஸ்திரீயைத் தனியே காணத் திருட்டுத்தனமாய் ஒளிந்து வரும் நீதானா தேவலோகத்தை ஜயித்தவன்? உன்னை நம்பி வாழும் உன் அந்தப்புர ஸ்திரீகளுக்கு ஏன் வீணில் அகால வைதவ்யத்தைத் தேடுகிறாய்? சீக்கிரம் வீட்டுக்குப் போய் பாப சப்தம் பேசின உன் வாயை கோமயத்தை விட்டுக் கொப்பளித்து அலம்பு. இதோ ஸிம்ஹம் வரலாச்சு, சீக்கிரம் உன் புதருக்கு ஓடிப் போ, பேடித்தனமான நரியே!

ராவ :—ஸீதே! ஜாக்கிரதை! வார்த்தை நிதானமாய்ப்பேசு; நான் உனக்கு ஹிதத்தை விரும்பி நயமாகவே அதை எடுத்துச் சொன்னதினால் என்னுடைய சக்தியை நீ அறியமாட்டவில்லை போலும். ராக்ஷஸர்களுக்கு வேறு உபாயங்களும் தெரியும் என்பதை நீ அறியச் செய்கிறேன். என் ஸ்வயரூபத்தைக் கண்டு நீ பயப்படவேண்டாமென்றே ஸாது வேஷத்துடன் இங்கு வந்தேன். இப்பொழுது பார்! (பத்துத் தலைகளும் இருபது கைகளும்கூடி, சிகரங்களும் தடங்களும் பரந்து கிடக்கும் பர்வதம்போன்ற ரூபம் தோன்றுகிறது.) உன் ராமன் என்னெதிரே யுத்தத்தில் நிற்பானென்று இப்போது நீயே பார்த்துக்கொள். வீணாய் அவனை யுத்தத்திற் கொன்று உனக்கு க்ஷணகால துக்கத்தையும் கொடுக்கவேண்டாம் என்றுதான் இந்தஸமயம் பார்த்து அந்த வேஷம் போட்டுவந்தேன்; அதை நீ அறியமாட்டவில்லை.

ஸீதை :—(நடுங்கி வாய்குழற) ஹே லக்ஷ்மணா! ஆரியபுத்திர! சீக்கிரமே ஓடிவாருங்கள். இந்த துஷ்டனை சிக்ஷியுங்கள்! (உரக்கக் கூவுகிறாள்.)

ராவ: —உன்னுடன் வாதாடுவதற்காவது உன் ராமலக்ஷ்மணர்களுடன் யுத்தத்திற்காவது எனக்கு இது நேரமில்லை. (பிடிவாதம் பிடிக்கிற குழந்தையைத் தூக்குவதுபோல் ஸீதையைத் தூக்கிக்கொண்டு எழும்பி விமானத்தில் ஏறிவிடுகிறான்.)

(ஸ்தலம் மட்டும் மாறுகிறது: ஆகாசத்தில் தூரத்தில் அரைத் தூக்கத்தில் விழித்துக் கொண்ட ஜடாயுஸ் பிரவேசம்).

ஜடாயுஸ் :—யாரங்கே! யாரோ அபயக் குரலாகக் கேட்டதே! ஆகாசத்தில் ஸ்திரீயின் குரல் ஏது?

ஸீதை :—(விமானத்திலிருந்தே) ஹே வன தேவதைகளே! ஹே வனஸ்பதிகளே! நீங்கள் தான் எல்லாருமாக என் நாதருக்கு என் கதியைச் சொல்லவேண்டும். ஐயோ, கேள்வி முறையில்லையா? இந்த அநீதி தெய்வத்துக்கு ஸஹிக்கிறதா? என்னைக் காணாமல் என் நாதன் பதறிவிடுவாரே? என்னசெய்வேன்? அவருக்கு எப்படித் தெரிவிப்பேன்? அவர் பிராணன் என் வஸ்திரத்தின் தலைப்புக் காற்றில் கலந்து கொண்டு என் பின் ஓடிவந்து விடுமே! (முகத்தை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு விம்மி அழுகிறாள்).

ஜடாயுஸ் :—இதென்ன விபரீதம்! அன்று நான் பார்த்த ராம பத்நீ, தசரதனுடைய நாட்டுப் பெண் குரல் போலல்லவா இருக்கிறது! விமானத்தில் அல்லவா தெரிகிறாள். ராமன் எங்கே? விமானம் யாருடையது? தசக்ரீவனது அல்ல வைசிரவணனது புஷ்ப விமான மல்லவா இது? தண்டகாரணியத்துக்குத் தான் அடிக்கடி வருகிறதே! பார்ப்போம்! (விமானத்தை நோக்கிப் பறந்து சென்று, ராவணனைக் கண்டு வழி மறிக்கிறார்.) நில், ராக்ஷஸ, எனக்குப் பதில் சொல்லாமல் நீ போக முடியாது.

ஸீதை :—(பக்ஷி ராஜனைப் பார்த்துவிட்டு) ஹே பக்ஷிராஜ! தாங்கள்தான் எனக்குப்பிதா. இந்த தூர்த்தனை துஷ்டனை சிக்ஷித்து, என் பர்த்தா ராமனிடம் என்னை எப்படியாவது சேர்ப்பியுங்கள். உங்கள் கீர்த்தி எந்நாளும் மறக்கமுடியாதது.

ஜடா :—ராவண! பரஸ்திரீ ஹரணத்துக்கும் ஒரு வியவஸ்தை வைத்துக்கொள். ஒட்டகத்தின்மேல் ஒவ்வொரு கொட்டைப் பாக்காய்ச் சுமையேற்றிக்கொண்டேபோனாலும், அதன் முதுகை முறிக்கிறது கடைசி ஒரு கொட்டைப் பாக்குத்தான் என்பது ஞாபகமிருக்கட்டும். நீ எத்தனையோ ஸ்திரீகளை அபகரித்திருக்கலாம். இந்த தேவியின் அபஹரணம் அவைகளில் கடைசியானதாக முடிய வேண்டாம் என்று உனக்கு ஆசையிருந்தால், இப்பொழுதே அவளை இருந்த இடத்தில் கொண்டுபோய் விட்டுவிடு; அல்லது இறக்கிவிடு, நான் என் முதுகிற் கொண்டுபோகிறேன். (ரதத்தைத் தன் கால்களால் உதைத்து நிறுத்தி, தன் இறக்கைகளால் ராவணனுடைய இருபது கண்களையும் மறைக்கிறார்.)

ராவ:—இறகு உதிர்ந்த கிழமே! இன்றைக்கு வீணாய் என் கையால் சாகாதே, வழிவிடு; உன் தர்மோபதேசத்தைக் கேட்க சாவகாசமாய் இன்னொருநாள் வருகிறேன்.

ஜடா :—என்னைக் கொல்வது உனக்கு அவ்வளவு சுலபமாகத் தோன்றுகிறதா? இதோ பார்! (திடீரென்று மூக்கினால் ராவணனுடைய கண்களிலொன்றைக் கொத்தி, முகத்திற் பிடித்து மார்புவரையிற் கீறி, இறக்கைகளினால் கிரீடங்களைக் கீழே தள்ளி அவனை மொட்டைத்தலையனாக்கி ரதத்தின் கால்களை உடைத்தெறிகிறார்).

ராவ:—(ரத்தம் வடிய ரதத்தை விட்டு மேக மண்டலத்தில் தாவி, கத்தியை உருவிக் கொண்டு) ஜாக்கிரதை! இனி தாக்ஷிண்யம் பார்க்க மாட்டேன், மரியாதையாய் நின்று கொள்! (ஜடாயுஸ் ராவணனுடைய கையைப் பிடித்து உலுக்கவே, கத்தி கீழே விழுந்து விடுகிறது); உடனே வேறொரு கையிலிருந்த சூலாயுதத்தை ஜடாயுஸின் மார்பில் எறிகிறான்; ஜடாயுஸ் சற்று விலகியும் இறக்கை யறுபட்டு விலாவிலும் பலமாகக் காயப் பட்டுக் கீழே விழுகிறார்).

ஸீதை:—அடடா, ஐயோ கஷ்டமே! பக்ஷி சிரேஷ்ட! என் துரதிருஷ்ட மல்லவா உங்களுக்குப் பிராண ஹானியாக அமையும்போலிருக்கிறது! தாங்கள் பிழைத்தெழுந்து என் பர்த்தாவுக்குத் தெரிவிக்கும்படி தெய்வங்கள் அநுகிரஹிப்பார்களாக! நாத, ஆரியபுத்திர! (உரக்கக் கூவி விட்டு மூர்ச்சிக்கிறாள்).

(ஸ்தலம் மாறுதல்: விமானத்தின் கீழ் லங்காபுரியும் அசோகவனமும் தெரிகிறது ராவணன் ஸீதையை இறக்கி விட்டு ராக்ஷஸ ஸ்திரீகளைக் காவல் வைக்கிறான்).

ராவ:—(அயோமுகீ பாண்டோதரீ என்னும் இரு அரக்கியர் தலைவிகளைப் பார்த்து) இந்தப் பெண்ணை யாரும் யாதொரு ஹிம்ஸையும் செய்ததாகத் தெரிந்தால் அவர்களை ஜீவனுடன் அக்கினிக்கு இரையாக்குவேன்! இவள் விழித்துக் கொள்ளும் வரையில் காத்திருந்து இவள் கேட்கும் வஸ்துக்களையும் ஆகாரங்களையும் உடனுக்குடனே ஸம்பாதித்துக் கொடு. பட்டு பீதாம்பரங்கள் கொண்டு வந்து கொடு. தைலாஞ்சனாதிகள் கொடுத்து ஸ்நானம் செய்துவை! இவளுக்கு யாதொரு குறையும் வராமல் பார்த்துக் கொள். நீ போகலாம்! (தனக்குள்) அப்பா! ஒரு பெரிய காரியத்தை நிர்விக்கினமாய்ச் செய்து முடித்தேன்! ஆனால் மாரீசனை இழந்தேன். கரதூஷணர்களை இழந்ததை விடவா? ஆனால் இவ்வளவு பெரிய காரியத்தில் சிறிது நஷ்டமுந் தான்வரும்! இந்தப் பெண்ணை மெதுவாய்ப் பழக்க வேண்டும்; அது தான் இப்பொழுது முதல் வேலை! (நிஷ்கிரமணம்.)



என் செம்பருத்திச் செடி.

(மா. கிருஷ்ணன்.)

என் தோட்டத்தின் முன்புறத்தில் தெருவோரமாக ஒரு செம்பருத்திச் செடியிருக்கிறது. அது செழித்தோங்கி வளர்ந்து தோட்டச்சுவரைக் கடந்து, தெருப்பக்கமாக கிளைத்திருக்கிறது. வீதியில் சுவாதீனமாய்த் திரியும் ஆடுகளும் குழந்தைகளும் என் வீட்டைத் தாண்டிப் போகும் பொழுதெல்லாம் அதன் கிளைகளை ஒடித்தும் பூக்களைப் பறித்தும் என் செம்பருத்திச் செடியின் தளர்ச்சியை நாசமடிப்பார்கள். இவர்களைக் கல்லை விட்டெறிந்தும், பயங்கரமான சப்தங்களாலும், கை கால்களை முறித்துவிடுவேனென்று மிரட்டியும் நான் விரட்டிவிடுவது வழக்கம். ஆனால் காலையில் தினமும் ஒரு கிழவர் வந்து இரண்டு பூக்களைப் பறிப்பார்—இவரை ஓட்ட வழி கிடையாது. இவர் அநேக வருஷங்களாக, மாமூலாக, இப்படிச் செய்துவந்தார். பொழுதுவிடிந்ததும் எழுந்து சோம்பல் முறித்து, மாடியில் என் கட்டிலின்மேல் உட்காருவேன். அப்பொழுது ஜன்னல் வழியாக இந்தக் கிழவர் தள்ளாடித் தள்ளாடித் தன் கழியை ஊனிக்கொண்டு வருவது தெரியும். மிகச் சிரமப்பட்டு இரண்டு பூக்களைப் பறித்து, அவைகளின் இதழ்களைத் தனித்தனியாகப் பிய்த்து, தன் பொக்கை வாயினுட்படுத்தி எப்படியோ சுவைத்துச் சுவைத்துத் தின்றுவிடுவார். சில வேளைகளில், தெருப்பக்கமாகப் பூக்கள் கிடைக்காவிட்டால், என் தோட்டத்தினுட் பிரவேசித்து தனக்கிஷ்டமான மலர்களைக் கிள்ளிப் புசிப்பார். பிறகு மெல்ல மெல்லத் தள்ளாடித் தன் வழியே செல்வார். அவர் இன்ன காரணத்தினால் இப்படிச் செய்துவந்தார் என்று எனக்குத் தெரியாது. அவரைக் கண்டபொழுதெல்லாம் அவரையே கேட்கலாமா என்று யோசிப்பேன். ஆனால் நான் இரண்டு செம்பருத்திப் பூக்களுக்காக அற்பப்பட்டுக் கேட்கிறேன் என்று அவர் நினைத்துவிடுவாரோ என்று சும்மா இருந்துவிடுவேன். மேலும் கிழவர்களுடன் பேசுவதே எனக்குப் பிடிக்காது. நாம் சொல்வதை அவர்கள் லக்ஷியம் செய்வதில்லை—அவர்களுக்கோ எதைப்பற்றிப் பேசுவதற்கும் அரைமணி நேரம் வேண்டும்.

பிறகு ஒருநாள் மிகவும் துணிந்து அவரை நேரில் கண்டு பேசிவிட்டேன். அன்று அவருக்குத் தெருப்பக்கமாக பூக்கள் அகப்படவில்லை. தோட்டத்தினுள்ளும் அவருக்கு எட்டும் உயரத்தில் மலர்கள் அலரவில்லை. தன் கழியால் ஒரு பூவை எட்டிப் பறிக்கப் பயனில்லாமல் யத்தனித்துக்கொண்டிருந்தார். நான் கீழே யிறங்கிவந்து அதை உன்னிப் பறித்து அவரிடம் கொடுத்தேன்.

"இதைச் சாப்பிடுவதில் என்ன பயன்?" என்று கேட்டேன்.

அவர் பதிற் சொல்லவில்லை. செம்பருத்தி இதழ்களைப் புசிப்பதிலேயே ஆழ்ந்திருந்தார். மறுபடியும் கேட்டேன். அவர் என்னை ஏற இறங்க விழித்துப் பார்த்துவிட்டு, "நீ என்ன சொன்னாய்?" என்றார்.

"நித்தியம் இந்தப் பூவைச் சாப்பிடுகிறீர்களே, இதனால் என்ன பிரயோஜனம் என்று கேட்டேன்."

அவர் மற்றக் கிழவர்களைப்போல் தாமதித்து, யோசித்து, முடிவில் கேட்ட கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் பதிற் சொல்லவில்லை.

"பித்தத்தைத் தெளிவிக்கும்—இந்த வெய்யில் காலத்தில் மிகவும் நல்லது—உஷ்ணத்தைப் போக்கும்."

"இதெல்லாம் வெறும் நம்பிக்கை தானே—ருஜூப்படுத்தமுடியுமா?" என்று நான் கேட்டேன்.

அவர் மறுபடியும் என்னை உற்றுப் பார்த்தார்.

"நீ ராமசேஷனோட பேரன்தானே?" என்றார்.

எவ்வித மனிதனுக்கும் இரண்டு பாட்டனார்கள் உண்டு, மேலும் நான் பிறப்பதற்கு முன்பே என் பாட்டனார்கள் இறந்து விட்டதனால் அவர்களைப்பற்றிக் கேள்வி முறையாக ஏதோ சொற்பமே எனக்குத் தெரியும். இதனாலும், இப்பொழுது நினைவில்லாத மற்ற அநேக காரணங்களினாலும், நான் யாருடைய பேரன் என்று எனக்கு உடனே தெரியவில்லை.

சற்று யோசனை செய்து, "ஆமாம்" என்று சொன்னேன்.

"ஹாம், முகத்தப் பார்த்தாலே தெரியறது—ராமசேஷனும் நானும் ஒரே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படிச்சோம். அல்பாயுசாய், நாற்பத்தஞ்சு வயசிலே போயுட்டான், பாவம், பித்தம் தலைக்கேறி."

எனக்கு இன்ன சொல்வதென்று தெரியவில்லை.

"பார்த்தால் சின்ன வயசு போல இருக்கு—இதுக்குள்ளே கூனல், தலையிலே பொட்டல்—ஹாம், இதெல்லாம் பித்தத்துக்கு அறிகுறி—இந்தப் பூவைச் சாப்பிட்டாப் போயுடும்" என்று ஓதிவிட்டு, இரண்டாம் மலரைப் புசிக்காமல் கிழவர் தள்ளாடித் தள்ளாடிப் போய் விட்டார்.

அவர் போனபின் வெகு நேரம் நான் சஞ்சல ஆலோசனையில் ஆழ்ந்திருந்தேன். என் தலைமயிர் உதிர்ந்து பொட்டல் விழுவது எனக்கு அநேக நாட்களாகத் தெரியும். மயிரை நீளமாக வளர்த்து முன்பக்கமாக பொட்டலை மறைத்து வாருவதால் வேறு எவருக்கும் இது புலப்படாது என்று நினைத்திருந்தேன். இந்தக் கிழவரோ ஒரே நிமிஷத்தில் இதைக் கண்டு விட்டார். இவருடைய குன்றின சூட்சமத்திற்கே என் பொட்டல் விளங்கினால் மற்றவர்களுக்கு......தவிரவும் நான் கூனுவதாக அவர் சொன்னாரே? ஒருவன் கூனுவது அவனுக்கே தெரியாது: யாராவது தெரிந்தவர் பார்த்துச் சொன்னால் தான் அதை அறிவான். நான் கூனுவதாக இந்தக் கிழவரைத் தவிர எவரும் சொன்னதில்லை. ஆனால் அவர் எதற்காக வீணாகப் பொய் சொல்ல வேண்டும்? நான் கூனுவது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஒரு வேளை எல்லாம் பித்தத்தினால் தானோ என்னவோ. இப்படியெல்லாம் நான் நினைத்தேன். எனக்குப் பித்தம் தோஷம் முதலிய கர்நாடகப் பிணிகளில் நம்பிக்கை கிடையாது. மேல் நாட்டு வைத்தியத்திலும் நோய்களிலும் பூரண விசுவாசம். மேல் நாட்டு வைத்தியர்கள் கணக்கில்லாத விசித்திர ஔடதங்களை உபயோகிப்பது எனக்குத் தெரியும். வயிற்று வலிக்கு சீனக்களிமண்ணும் சுன்னமான கரிப்பொடியால் செய்த மாத்திரைகளும், காசநோய் கண்டவர்களுக்கு ஆப்பிரிக்கா தேசத்துப் பாலைவனங்களில் முளைக்கும் ஒரு செடியின் சத்து, இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் பித்தத்திற்கு ஏன் செம்பருத்தி இதழ்களை உட்கொள்ளக் கூடாது? அன்று நான் ஒரு செம்பருத்திப் பூவைத் தின்று பார்த்தேன். வழ வழ வென்று ஒரு வித அசட்டுக் கசப்புடனிருந்தது. இதனாலென்ன, கசக்கா மருந்துக்குக் குணமில்லை என்று அதைப் புசித்து விட்டேன்.

பின் தினமும் கிழவர் வருமுன் எழுந்து ஒரு செம்பருத்திப் பூவைத் தின்று வந்தேன். சில வேளைகளில் அது வயிற்றைக் குமட்டிய போதிலும் நாட்தவறாது இப்படிச் செய்து வந்தேன். சில வாரங்கள் கழிந்தபின் நான் முன்னிலும் நிமிர்ந்து நடப்பதாக எனக்குப் பட்டது. அன்று முதல் காலையில் நானும் இரண்டு மலர்கள் உட்கொள்ளலானேன். பின்னொரு நாள் கண்ணாடி முன் நின்று சிரத்தை

யுடன் என் பிம்பத்தை வெகு நேரம் உற்று நோக்கினேன். பொட்டலைச் சுற்றிப் புது மயிர் முளைப்பது போல் எனக்குத் தோன் றிற்று. நிச்சயமாக ஒன்றும் சொல்வதற் கில்லை. இது நமக்காகப் புலப்படாது—யாரை யேனும் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நிச்சயித்தேன். ஆனால் யாரைக் கேட்பது? என் பொட்டலின் அள வைக் கவனித்துள்ளவர் களுக்கே அது பரவு கிறதா, மறைகிறதா என்று சொல்ல முடியும். அப்படிப்பட்டவர் எவருமில்லை. மேலும் இந்த விஷயத்தைப்பற்றிக் கண்டவருடன் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை.

மறுபடியும் கிழவரை அகஸ்மாத்தாக ஒரு நாள் சந்தித்தேன். அன்று நான் கீழிறங்கி வர நேரமாய்விட்டது; அவருக்கும் தெரு வோரமாகப் புஷ்பங்கள் கிடைக்க வில்லை. அப் பொழுது கிழவரையே கேட்டு விடுவதென்று தீர்மானித்தேன். அவரிடமிருந்து எதையும், முக்கியமாய் என் பொட்டலை, மறைக்க வேண் டிய அவசியமில்லை. ஒரு வாறாக என் சங் கோசத்தைத் திருத்திக்கொண்டு இத்தனை நாட்களாக நானும் பூத்தின்று வருவதாகவும், பொட்டல் சற்றுக்குன்றுவதாக சில வேளை களில் தோன்றுவதாகவும், உள்ளத்தை உள்ள படி இதைக் குறித்துத் தன் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டு மென்றும் அவரை நான் வேண்டிக் கொண்டேன்.

கிழவர் அமிதமாகச் சிரிக்கலானார். தன் கோலின் மீது சாய்ந்து கொண்டு பொக்கை வாய் கோண ஒரு விதமாக அவர் நகைத்தார்.

"ஏனப்பா—ஏதோ கேட்டையேன்னு வாய்க்கு வந்ததைச் சொல்லிவைத்தேன்—பித் தமாவது, வாதமாவது, இதிலெல்லாம் என க்கு நம்பிக்கை கிடையாது! பால்யத்தில் எத் தனையோ வித சேஷ்டைகள் ஏற்படவில்லையா —அப்பொழுது முதல் சாப்பிட்டுச் சாப்பிட்டு இந்தப் பூவின் ருசி எனக்குப் பிடித்துப் போய் விட்டது. அதனால் தான் நித்தியம் காலையில்—ஹி ஹி ஹி—நீயுமா சாப்பிட்டாய்—ஹி ஹி ஹி—" என்று சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

போன மாதம் திடீரென்று இந்தக் கிழவர் பரமபதமடைந்து விட்டாராம். இப்பொழுது தின்பதிற்காளில்லாமல் என் செம்பருத்திச் செடி, புஷ்பங்கள் செறிந்திருக்கிறது.

மானவீ.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(228-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 2 காட்சி 1

ஆக்ராவில் ராஜா ஸகரஸிம்ஹரின் வீடு. காலை.

(ராஜா ஸகரஸிம்ஹரும் அவர் பேரப் பையன் அருணஸிம்ஹரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.)

ஸகரஸிம்ஹர்:—இருந்தாலும், ஆச்சரியம் தான்! புல்லை அறுப்பது போல் அன்றோ அறுத்து தள்ளி விட்டாராம், முகலாய ஸேனையை ராணா அமரஸிம்ஹர் இந்த தேவார் யுத்தத்தில்.

அருணஸிம்ஹர்:— அவர் தான் தன்யன்!

ஸகர:—சிறு வயதில் வெறும் விளையாட்டுப் பிள்ளையாய் தான்தோன்றியாகத் திரிந்தவன், இவ்வளவு சூரனாகி விடுவதென்றால், யார் நம்புவார்கள்?

அருண:—தாத்தா, மஹரிஷி வால்மீகி கூட முதலில் திருடனாகத்தான் இருந்தானாம்.

ஸகர:—வால்மீகியா? யார் துளஸீதாஸரின் புதல்வன் தானே?

அருண:—என்ன தாதா, இதுகூட தெரியாதா? அவர் பெரிய மஹரிஷியாயிற்றே! அவர் பெயரைக்கூட கேட்டதில்லையா?

ஸகர:—ஓஹோ, அவரா! அவரை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன். எங்கே என்று ஞாபகம் வரவில்லை.

அருண:—ஐயோ, அவரை நீர் பார்ப்பதாவது? அவர் த்ரேதா யுகத்தில் அன்றோ இருந்தார்?

ஸகர:—ஆமாம்; நான் பிறக்கு முன்பே இருந்தவர்; அவரைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன். நல்ல ரஸிகராமே!

அருண:—என்ன தாத்தா, இதுகூட தெரியாதா! அவர் தான் ராமாயணம் எழுதியவர்.

ஸகர:—ராமாயணமா? நல்ல புஸ்தகம் தானா அது?

அருண:—அட ராமா! ஆனால் நீங்கள் ராமாயணம் கூட படித்ததில்லையா? நம் பூர்வ புருஷரான பகவான் ராமசந்திரனைப் பற்றிய புஸ்தகம் அல்லவா? அதையுமா நீங்கள் படித்ததில்லை?

ஸகர:—எனக்கு படிக்க ஏது ஸாவகாசம்? பிறந்தது முதல் சண்டைதான். சண்டையிட்டே என் வாழ்நாளை யெல்லாம் கழித்து விட்டேன்.

அருண:—நீங்கள் கூடவா சண்டைக்குச் சென்றிருக்கின்றீர்கள்? அது எப்பொழுது?

ஸகர:—அதுவா? எப்பொழுது என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இருந்தாலும் பெரிய பெரிய சண்டையிலெல்லாம் நான் தான் முதல்.

அருண:—யாருடன் யுத்தம்?

ஸகர:—அது எல்லாம் யாருக்கு ஞாபகம் இருக்கிறது? நீ பிறக்கக் கூட இல்லை, அப்பொழுதெல்லாம். உன் தாயார் அப்பொழுது—

அருண:—என் தாயார் இப்பொழுது எங்கே இருக்கிறாள்?

ஸகர:—அதை யார் கண்டார்கள்? ஒரு நாள் காலையில் எழுந்திருக்கையிலேயே 'மேவார் மேவார்' என்று கத்திக் கொண்டே எழுந்தாள். அன்று ஸாயந்திரம், தேடி தேடிப் பார்த்தோம்; காணவில்லை. இன்றும், அவள் சென்ற இடம் தெரியவில்லை.

அருண:—என் தகப்பனார்?

ஸகர:—அவர் எப்பொழுதுமே பைத்தியம் தான்! ஒரு தடவை மஹாராஜா கஜஸிம்ஹருடன் சேர்ந்து கொண்டு குஜராத் யுத்தத்திற்குச் சென்றார். அங்கேயே கொல்லப்பட்டாராம்.

அருண:—ஆனால் என் தாயார் இங்கே மேவாரிலேதான் எங்கேயாவது இருப்பாள்.

ஸகர:—இருக்கலாம்.

அருண :—தாத்தா, நீங்கள் இப்படி மேவாரை விட்டுவிட்டு ஓடிவந்து விட்டீர்களே, இது நியாயமா? உங்கள் ஸஹோதரர் ராணு பிரதாப ஸிம்ஹர், தம் தேசத்திற்காக பிராணனையே விடவில்லையா?

ஸகர :—அப்படிப் பிராணனை விட்டதால் தான், அவ்வளவு சீக்கிரம் இறந்தான். வேண்டாம் வேண்டாம் என்று நான் தடுக்கத்தான் தடுத்தேன். கேட்டால் தானே! நான் என்ன செய்வது!

அருண :—அதனால் என்ன! மேவார் முழுவதும் அவரைப் புகழ்கிறது. அவர் கீர்த்தி சாசுவதமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதே!

ஸகர :—ஆமாம், அதனால் என்ன லாபம்? ஆளே போய்விட்டானும்: அவன் கீர்த்தியை அவனு கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்? அவன் எப்பொழுதுமே அப்படித்தான். நாங்கள் சிறுவர்களாக இருந்தபொழுது ஒரு பந்தயம் வைத்துக் கொண்டோம். நான், கீரிப்பிள்ளை தான் ஜயிக்கும் என்றேன். அவன் பாம்பின் கக்ஷியை எடுத்துக் கொண்டான். படம் எடுத்து சீறிக் கொண்டு வந்தபொழுது பாம்பு அழகாகத் தான் இருந்தது! ஆனல், பாம்பைக் கொல்வதுதானே, கீரியின் ஸ்வபாவம். என் கீரி பாம்பைக் கொன்றது. இப்பொழுதும் அப்படியேதான்.

அருண :—ஏன், அப்படிச் சொல்லுகிறீர்கள்? இதோ, இந்த தேவார் யுத்தத்தில் நாம் ஜயிக்கவில்லையா?

ஸகர :—ஐயோ! அது எல்லாம் நடக்காது. முசல்மான்களைக் கொல்லக் கொல்ல வளர்வார்கள். ஜனத்தொகை குறையக் குறைய, ஹிந்துக்களையே முஸல்மான்களாகச் செய்து கொண்டு சண்டையைத் தொடர்வார்கள். ஹிந்துக்களோ, நாளுக்குநாள் க்ஷீணிக்கிறார்கள். ஏன்? முஸல்மானகப் போன ஹிந்து 'மறுபடியும் ஹிந்துவாகி விடுகிறேன்' என்று மன்றாடினலும், அவனையே சேர்த்துக் கொள்ளுகிறதில்லையே. வேறு மதஸ்தர்களையா, தங்களுக்குள் சேர்த்துக் கொள்ளப் போகிறார்கள்? இதுதான் நம்முடைய பெரிய தவறு.

அருண :—அதில் தவறென்ன?

ஸகர :—ஏன் இல்லை? உன் மாமா மஹபத் எவ்வளவு சீக்கிரம், எவ்வளவு ஸுலபமாக, முஸல்மானகி விட்டான்! அப்படி, அவர்கள் அப்துல்லா ஹிந்துவாக ஆகிவிட முடியுமா?

அருண :—பின் தாங்களும் முஸல்மான் ஆகிவிடுவதுதானே?

ஸகர :—அவ்வளவு தைரியம் வரவில்லை. என் பையன் நல்ல தைரியசாலி சற்றும் தயங்காமல் முஸல்மானகி விட்டான். ஆனல் அதற்கும் நான்தான் வழியை சீர்செய்து வைத்தேன். நான் முஸல்மானியர்களின் கட்சியில் போய் சேர்த்து கொண்டேன். அவர்களுடனேயே இருந்து வந்தேன். அதனால் அவன் ஸுலபமாக முஸல்மானகவே ஆகிவிட்டான்.

அருண:—தாத்தா, நீங்களும் முஸல்மானகி இருக்கவேண்டும். ராமாயணமே படிக்காத ஹிந்து, முஸல்மான் தான்.

ஸகர :—ஆமாம், ராமாயணத்தில் என்னமோ வைத்திருக்கிறதோ? எல்லாம் கட்டுக்கதை, போடா.

(மூகலாய ஸேனதிபதி அப்துல்லா வருகிறார்)

ஸகர:—வாருங்கள், அப்துல்லா ஸாஹேப், ஸலாம்.

அப்துல் :—ஸலாம், ராணு ஸாஹேப்.

ஸகர :—ராணுவா, அது யார்?

அப் :—தாங்கள்தான்! பாதுஷா, தங்களையே மேவாருக்கு அரசனகை நியமித்து விட்டார். தாங்கள்தான் இனி ராணு. தாங்கள் சித்தூருக்குச் சென்று, அதை ராஜதானியாக வைத்துக் கொண்டு அரசு புரியவேண்டும்.

ஸகர :—ஆனல் ராணு அமரஸிம்ஹர் எங்கு அரசு புரிவார்? உதயபுரத்திலா?

அப் :—அவர் இனி அரசரே அல்லர். பாதுஷா அவரை ஸிம்மாஸனத்தை விட்டு இறக்கி விட்டார். தாங்கள் தான் இனி அரசர்.

ஸகர :—அவர் ஒப்புக் கொண்டாரா? ஸிம்ஹாஸனத்திலிருந்து இறங்க வேண்டுமே?

அப் :—இல்லாவிட்டால் கட்டாயப் படுத்துவோம்; யுத்தம் செய்வோம்.

ஸகர :—நானா அவருடன் சென்று யுத்தம் செய்ய வேண்டும்? வேண்டாம், வேண்டாம்; நான் அரசனே ஆகவேண்டாம்.

அருண :—ஏன், இப்பொழுதுகூட சொல்லிக்கொண்டிருந்தீர்களே? "எனக்கு சண்டை செய்வதே தொழில், நன்றாகச் சண்டை செய்வேன். ஆயுள் முழுவதும் சண்டையிலேயே கழிந்தது" என்றீர்களே! போய் சண்டை செய்யுங்கள், போங்கள்.

ஸகர :—சே, போடா, வாண்டு! உன்னை யார் அடா கேட்டது? வேண்டாம், ஸையத் ஸாஹேப்! இதெல்லாம் நமக்கு வேண்டாம். சண்டை கிண்டை செய்ய நம்மால் முடியாது. அதற்குப் பயந்துகொண்டு தானே, நான் முகலாயர்களிடம் அடைக்கலம் புகுந்தேன். அப்படியும் சண்டைதான் செய்ய வேண்டும் என்றால், என் தேசத்திற்காகவே சண்டை செய்து விடலாமே. அதற்கு விரோதமான கட்சியிலிருந்து அதன்மேலேயே சண்டைக்குப் போவானேன்?

அப்துல்:— அதெல்லாம் ஒன்று மில்லை. தாங்கள் சண்டை செய்ய வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். தாங்கள் கிருபை கூர்ந்து, அரசன் என்று சித்தூரில் வீற்றிருந்தால் போதும்.

ஸகர:—ஆமாம். அது ஸரி. அமரஸிம்ஹரே என்மேல் சித்தூருக்கு படையெடுத்து வந்து விட்டால்?

அப்துல்:— அதெல்லாம் செய்யமாட்டார். இத்தனை நாட்களாக வராதவரா, இப்பொழுது வந்து விடுவார்?

ஸகர:—இது என்ன தர்க்கம் ஐயா! இத்தனை நாட்களும் படையெடுத்து வரா விட்டால் இனியும் வரமாட்டார் என்று நிச்சயம்? இவ்வளவு நாளாக, உங்களைப் பாம்பு கடிக்கவில்லை யென்றால், இனியும் கடிக்காது என்று உறுதி? இவ்வளவு நாளாக ஓர் மனிதன் சாகவில்லை யென்றால், இனியும் சாகவே மாட்டான் என்று ஸித்தாந்தம்? நன்றாக இருக்கிறதே உங்கள் யுக்தி வாதம்! (அருணனை நோக்கி) சீ, ஏன் அடா சிரிக்கிறாய்?

அப்துல்:—கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் ஒன்றும் தவறுதலாகச் சொல்லவில்லையே! எதற்கும் உங்கள் உதவிக்கு நாங்கள் இருக்கிறோம். எல்லாச் சண்டையையும் நாங்களே நடத்திக் கொள்ளுகிறோம்.

ஸகர :—வேண்டாம், ஐயா. எனக்கு அரசனாக விருப்பம் இல்லை.

அப்துல்:—அது எப்படியாயினும், தாங்கள் அதை பாதுஷாவிடம் சென்று நேரில் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஸகர :—அதுவும் ஸரிதான்; போவோம். இருந்தாலும் அது எனக்கு என்னமோ ஹீனத் தொழிலாகவும் பயங் கொள்ளிச் செய்கையாகவுமே படுகிறது. என்னை பலாத்காரமாகத் தூக்கி ஸிம்ஹாஸனத்தில் வைத்து விடப் பார்க்கிறீர்கள். அது நியாய மாகாதே, நன்றியு மாகாதே! இருக்கட்டும், வா, அருண், போவோம்.

காட்சி 2.

உதயபுரத்து ராஜா மாளிகை.

கோவிந்தஸிம்ஹர்:— மறுபடியும் முகலாயர்கள் படை யெடுத்து வருகிறார்கள்.

அரசன்:— வந்து விட்டார்களா? தெரியுமே! ராஜ புத்திரர்களை வேரோடு நிர்மூலம் செய்யாமல் அல்லது விடமாட்டார்களே! 'தேவார் யுத்தத்தோடு இது முடிந்து விடாது' என்று நான் சொல்ல வில்லையா?

கோவிந்த:—நமது ஸேனை இன்னும் ஏன் சித்தமாக வில்லை? நாம் யுத்தமும் செய்யாமல், ஓர் வித ஆக்ஷேபமும் இல்லாமல் முகலாயர்களுக்கு அடிமைப்பட்டுவிட வேண்டியதா?

அரசன்:—அவைகளை யெல்லாம் நினைத்துப் பயனில்லை. யுத்தம் செய்து ஆவது ஒன்று மில்லை. இவையெல்லாம் வீண். தேவார் யுத்தத்திலேயே நமது ஸேனை பாதிக்கு மேல் அழிந்து விட்டது. இனி மேல் முகலாயர்களுடன் சண்டை செய்ய நம்மிடம் ஸேனையு மில்லை.

(ஸத்யவதி வருகிறாள்)

ஸத்யவதி:—ஏன் இல்லை? இதோ, பூமியைக் கிழித்துக் கொண்டு, ஓர் புதிய ஸேனை தோன்றும். அதற்காக தாங்கள் கவலைப்பட வேண்டிய தில்லை.

அரச:—யார்? சாரணியா?

ஸத்ய:—ஆமாம், சாரணியே. முகலாய ஸேனை இவ்வளவு நெருங்கி வந்தும் நாம் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு ஸஹிக்காமல் மஹாராஜாவினுடைய நித்திரையைக் கலைத்து எழுப்ப வந்தேன்.

அரச:—சாரணி, இந்தத் தடவை யுத்தம் செய்ய விருப்பம் இல்லை. அவர்கள் உடன்படிக்கையை ஒப்புக் கொள்ள வேண்டியது தான்.

ஸத்ய:—என்ன இது? தாங்களா இப்படிப் பேசுவது? அதிலும் தேவார் யுத்தத்தில் ஜெயித்து, கௌரவத்தின் சிகரத்தை அடைந்த தாங்களே, திடீரென்று வழுக்கி ஆழ்ந்த படுகுழியில் வீழ்வதா?

அரச:—தேவார் விஷயம் உனக்குத் தெரியவில்லை. ஜெயித்தோம், வாஸ்தவம்தான். ஆனால், என்ன பறிகொடுத்தோம். தெரியுமா? பாதி சைன்யம் அழிந்தது. நமது வீரர்களின் ரக்தத்தை இப்படி ஓடவிட்டு, ஜயம் என்ன வேண்டியிருக்கிறது, நமக்கு?

ஸத்ய:—இதற்காகவா கவலைப்படுவது? வீரர்களின் ரக்தம் தான் ஜாதியை, வலுப்படுத்துவது! வீரர்கள் இறக்கிறார்களே என்று வருத்தப் படுவது? வீரர்கள் எந்த தேசத்திற்காக இறக்க வில்லையோ, அந்த தேச மன்றோ, வருத்தப்படவேண்டும்.

அரச:—மற்றும் ஓர் முறை நாம் ஜயித்து விட்டாலும், அதனாலும் யாதொரு பயனும் இல்லை. இது ஓயாத போர். திரும்பித் திரும்பி முகலாயப் படைகள் வந்து கொண்டே இருக்கும். ஓர் பிடி சைனிகர்களை வைத்துக் கொண்டு நாம் இந்த விச்வவிஜயியான முகலாய ஸேனைகளை, எதிர்த்து நின்று போராடுவது என்பது பைத்தியக்காரத்தனம்.

ஸத்ய:—இந்தப் பைத்தியக்காரத்தனம் தானே நம் நாட்டிற்கு வேண்டியது. இந்த பைத்தியக்காரத்தனத்தின் காலில் தான், ஸமஸ்த பிரபஞ்சமும் வந்து விழுந்து புகழ் கொள்கிறது. விசாரத்திற்கும் விவேசனைக்கும் எட்டாத கௌரவத்தை அளிக்கும். இந்த பைத்தியம் இன்றி யாதொரு உயர்ந்த காரியமும் உலகில் நடந்ததே இல்லை.

அரசன்:—இந்த யுத்தத்தில், நிச்சயம், சாவுதான், தெரியுமா? ராணா பிரதாபஸிம்ஹரின் புதல்வரா, சாவுக்குப் பயந்து, அடிமை யாவார்? சாவுக்கு பயந்தா, நம்முடைய ஸர்வ சிரேஷ்டமான இந்த ரத்னத்தை, திருடனைக் கூப்பிட்டு அவன் கையில் ஒப்புவித்து விடுவது? அதிலும், எல்லாவற்றினும் மேலான, நமது பூர்வபுருஷர்கள் தேடிக் கொடுத்து நாம் ஆயிரம் வருஷங்களாக காத்து வந்த நம் ஸ்வாதீனத்தையா, பிராணனுக்கு பயந்து, முகலாயர்களிடம் கொடுத்து விடுவது? அப்படி அவர்கள் எடுத்துக் கொண்டுதான் போவோம் என்றால், நம்மை வெட்டித் துண்டு செய்து, நம் சரீரத்தைத் தாண்டிச் சென்று எடுத்துக் கொள்ளட்டும்! யார்தான் சாவதில்லை? எல்லோரும் ஓர் நாள் சாக வேண்டியதுதானே? நமது தேசத்திற்காக சாவோமே! எழுந்திருங்கள். முகலாயர்கள் இதோ வந்து விட்டார்கள். இதுவா சுவப்பனம் காண்பதற்கோ, தர்க்கவிதர்க்கம் செய்வதற்கோ, ஸமயம்? வாருங்கள் யுத்தகளத்திற்கு.

அரச:—நீ யாரம்மா? நீ வெறும் சாரணியன்று. உன் வாக்கியங்களில் கர்ஜனை, உன் கண்களில் மின்னல் ஒளி, உன் அங்க சேஷ்டைகளில் பெரும் புயல்—பொங்கு கின்றனவே! ஸூர்யனைப் போல் பிரகாசமாயும், நீர் அருவி போல் பிரபலமாயும், வஜ்ரம் போல் கடோரமாயும், விளங்கும் நீ யார்?

ஸத்ய:—இப்படி, தாங்கள் கேட்டுக் கொண்டே யிருந்தால், நான் சொல்லிவிட வேண்டியது தான். ஏன், இன்னும் என்னை மறைத்துக் கொள்ளவேண்டும்? நான், ராணா பிரதாப ஸிம்ஹரின் ஸஹோதரரான ஸகரஸிம்ஹருடைய புதல்வி, ஸத்யவதி.

அரச:—என்ன! ஸகரஸிம்ஹர் புதல்வியா? வாஸ்தவமா?

ஸத்ய:—அரசே, இப்படிச் சொல்லிக்கொள்ளக் கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது; தலை குனிகிறது. முடிந்த வரையில் அவர் பாபங்களுக்கு நான் பிராயச்சித்தம் செய்து கொண்டுதான் வருகிறேன். தங்களை ஸிம்ஹாஸனத்திலிருந்து இறக்கி விடவேண்டும் என்று அவர் போலி அரசனுக தம்மை பிரஸித்தி செய்து கொண்டு சித்தூரில் அரசு புரிகிறுர். அவர் பெண்ணுன நான் அவருக்கே விரோதமாக, இந்த தேசத்து ஜனங்களைத் தூண்டிவிட்டு உத்ஸாஹப் படுத்திக் கொண்டு, கிராமம் கிராமமாக, அலைகிறேன். அவருக்கும் மேவார் தேசத்திற்கும், யாதொரு ஸம்பந்தமும் இல்லை. 'அவர் முகலாயர்களின் அடிமை, அவர்கள் கைப்பொம்மை' என்று ஜனங்களுக்கு அறிவுறுத்தினேன். இதுவரையில் ஓர் பிராணியாவது அவரை அரசன் என்று ஒப்புக் கொண்டு கப்பம் கட்டினது இல்லை. பார்த்தீர்களா!

அரச:—ஆம், அக்கா, வாஸ்தவம்தான்.

ஸத்ய:—அரசே, இந்த தேசத்திற்காக, நான் என்னுடைய ஸுகத்தையும் ஸந்தோஷத்தையும், தகப்பனையும் தனயனையும், ஏன், எல்லாவற்றையுமே, விட்டுவிட்டுத் தெருத் தெருவாக, காடும் மலையுமாக, அலைகிறேன். இதன் மஹிமையை பாடித் திரிகிறேன். இந்த தேசத்தைத் தாங்கள் ஓர் துச்சமான உபயோகமற்ற வஸ்துவை எறிவதுபோல் எறிந்து விடத் தான் போகிறீர்களா? ஐயோ, என் அருமை மேவார்! (ஸத்யவதியின் கண்களில் ஜலம் வந்து நிரம்புகிறது. தொண்டை அடைக்கிறது).

அரச:—அழாதே, அக்கா. நீ ராஜகன்னிகை அல்லவா, என் ஸஹோதரி யல்லவா! சற்று தேற்றிக்கொள். இதோ எந்த தேசத்திற்காக நீ உன்னுடைய ஜீவனையே அர்ப்பணம் செய்து சாரணியாகத் திரிகிறுயோ, அதே தேசத்தின் அரசனுகிய நான், உன் ஸஹோதரனுன நான், என் பிராணனையும் அர்ப்பணம் செய்யத் தயங்குவேனு? கோவிந்த ஸிம்ஹரே! ஸரி, யுத்தத்திற்குச் சித்தம் தான். ஸேனையை வரவழையுங்கள், புறப்படுவோம்.

எல்லோரும்:—ஜேய்! மேவாட்கி ஜேய்!

காட்சி 3.

சித்தூர்க் கோட்டை : இரவு.

(ஒரு கட்டிலில் அருணஸிம்ஹன் படுத்து உறங்குகிறுன். மற்றொரு கட்டில் காலியாக இருக்கிறது. ராஜா ஸகாஸிம்ஹர் இங்குமங்குமாக உலவுகிறுர்.)

ஸகர :—ஆமாம், இவர்கள் என்னை இந்தக் கோட்டையிலேயே, சிறை செய்து வைத்து விட்டார்களா என்ன? இதோ இந்தப் பாறைகள் இந்த மரங்கள், ஒவ்வொன்றும் மாந்தாதா காலம் தொட்டு இருக்கின்றவைகள். ஒவ்வொன்றும் ஒரு பூதம்போல் பயமுறுத்துகிறதே! இரவில் புயல் அடிக்க ஆரம்பித்து விட்டதே, ஸந்தேஹமில்லை. இந்த பூதங்கள் ஒவ்வொன்றும் நம்மேல் வந்து பாய்ந்து விடுகின்றன. ஓரே இருட்டு, மைஇருட்டு, பெயருக்குக்கூட ஒரு நக்ஷத்திரத்தைக் காணும். ஆனுல், ஒரு உபகாரம்; இங்கு வந்ததில் ராமாயணத்தை ஒரு தடவை பூர்த்தியாகப் படித்து விட்டேன். உயர்ந்த கிரந்தம்; என் பூர்வ புருஷர்களின் சரித்திரத்தையும் ஒன்று விடாமல் சாரணிகளிடம் கேட்டு அறிந்து கொண்டு விட்டேன். அவர்கள் தான் எப்பேர்ப்பட்ட வீரர்கள்! இருந்தாலும், ஏன் எனக்கு இன்று இவ்வளவு அதைரியம்? கொஞ்சம் பயமாகவே இருக்கிறது. நிர்மானுஷ்யமான இந்த கோட்டையில், அதிலும், இப்படி புயல் அடித்துக் கொண்டே இருந்தால், ஏன் பயமாக இருக்காது. ஏ காவல், காவல்! (காவலாளி வருகிறுன்) டேய், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், தெரியுமா? ஒருவரையும் உள்ளே விடாதே, என்ன? அதோ அது என்னடா அது?

காவலாளி :—ஒன்றுமில்லையே! புயல்தான் அடிக்கிறது.

ஸகர :—உங்கள் தேசத்தில் அதுதான் இருக்கும். இருட்டும் இருக்கும்; இவைகள் கொஞ்சம் குறைவாக இருந்தால்தான் என்ன நஷ்டம் ஏற்பட்டு விடுமோ, தெரியவில்லை. போகட்டும். நீங்கள் ஜாக்கிரதையாக உருவிய கத்தியுடன் ஸஞ்சரிக்க வேண்டும். சற்று தீவட்டிகளை பிரகாசிக்கச் செய்யுங்கள். இந்த இருட்டில் தூக்கமும் வர மறுக்கிறது. ஒருவரையும் உள்ளே விடாதீர்கள். யாராவது

வந்தால், ஒரே போடு போட்டுவிடுங்கள். அதற்காக என்னையே தவறிப் போட்டுவிடாதீர்கள், தெரியுமா? ஜாக்கிரதை, போங்கள். (போகிறான்) நிச்சிந்தையாக அருண் தூங்குகிறான். அப்பா, என்ன தூக்கம்தான் தூங்குகிறான்! ஹா ஹாம் என்றாவது இரண்டு சப்தம் செய்யக் கூடாதா, அல்லது திரும்பித் திரும்பியாவது படுத்துக் கொள்ளக் கூடாதா? எப்படித்தான் தூக்கம் வருமோ? எனக்கு வரவே மாட்டேன் என்கிறதே. நம் மூதாதையோர் இந்தக் கோட்டையில் வசித்தார்களாமே; அதிலிருந்தே, அவர்கள் வீர புருஷர்கள் என்று விளங்கவில்லையா? டேய் காவல்! (காவலாளி வருகிறான்) விழித்துக் கொண்டு தான் இருக்கிறாயா? தூங்கிவிடாதே! அத்தோடு அடிக்கடி இங்கு வந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும், தெரியுமா, போ! (காவலாளி போகிறான்) அருண்! அருண்!

அருண :—ஏன், தாத்தா!

ஸகர :—தூங்குகிறாயா? தூங்கு, தூங்கு. ஜாக்கிரதையாகத் தூங்கவேண்டும். எனக்கே பயமாக இருக்கிறது.

அருண :—பயமென்ன? ஏன் நீங்கள் தூங்கவில்லை? தூங்குங்கள். (திரும்பிப் படுத்துக் கொள்கிறான்).

ஸகர :—ஆமாம்; உனக்கென்ன, சொல்லி விடுகிறாய்! டேய் டேய்! இது என்ன இங்கே? என்ன இது? ஏ காவல், காவல்! ஓ! தூங்கி விட்டானா? டேய், அருண்! அருண்!

அருண:—என்ன, தாத்தா, என்னைத் தூங்கவேவிட மாட்டீர்களா ?

ஸகர :—இதோ யாரோ பேசுகிறார்களே, கேட்கவில்லையா உனக்கு?

அருண :—ஒருவரும் பேசவில்லை. காற்று அடிக்கிறது. (திரும்பிப் படுத்துக் கொள்கிறான்.)

ஸகர :—காற்றா? காற்றுத்தான் பேசுமோ? இதோ பேசுகிறதே! ஐயய்யோ!

அருண் :—என்ன தாத்தா?

ஸகர :—இதோ பூதம்! இதோ பார். (விரலால் காட்டுகிறார்).

அருண :—எங்கே? அதெல்லாம் ஒன்றுமில்லை. தூக்கக் கலக்கம்! போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்.

ஸகர :—(சற்று தூரத்தில் பார்த்துக் கொண்டு) நான் வரமாட்டேன் என்று தான் சொன்னேன்! அவர்கள் கட்டாயப் படுத்தி அனுப்பி விட்டார்கள். இல்லை, தமபீ! நான் அரசன் இல்லை; அமரஸிம்ஹன் தான் அரசன். என்னைக் கொல்லாதே, விட்டுவிடு, விட்டுவிடு.

அருண :—தாத்தா? தாத்தா!

ஸகர :—ஐய்யய்யோ! இவர்களுமா இங்கு, பீமஸிம்ஹர், ஜயமல்லர், மஹாராஜா பிரதாப ஸிம்ஹர். இல்லை, இனிமேல் இருப்பது இல்லை. இங்கு காலையிலேயே இந்தக் கோட்டையை விட்டுச் சென்று விடுகிறேன். என்னை அப்படி முறைத்துப் பார்க்காதீர்கள். ஐயோ! இவர் யார்? இவர் யார்? கொல்லாதே, கொல்லாதே! நான் செய்தது தவறு. கொல்லாதே! (கத்திக் கொண்டு ஸகரஸிம்ஹர் விழுகிறார். அருணன் பிடித்துக் கொள்ளுகிறான். காவலாளிகளும் வருகிறார்கள்.)

அருண :—தண்ணீர்; தண்ணீர்! தாத்தா மூர்ச்சையாய் விழுந்து விட்டார்.

காட்சி 4.

உதயபுர மாளிகை : அந்தப்புரம்.

(மானஸீயும் கல்யாணியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)

மானஸீ :—கல்யாணி! நான் ஸமீபத்தில் ஒரு குஷ்டாச்ரமம் ஏற்படுத்தி இருக்கிறேன். அநேகம் ரோகிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள்.

கல்யாணி:—நீதான் பாக்கியசாலி. இப்படி உபகாரம் செய்யக் கொடுத்து வைக்க வேண்டும்!

மான :—நீயும் இப்படி உபகாரம் செய்யலாமே! என்னை நீ இப்போது எவ்வளவு புகழ்ந்தாலும் நல்லது தான். எனக்கு உத்ஸாஹம் அதிகரிக்கும்; வேலையும் நன்றாக நடக்கும்.

கல்யா :—என் தமயனும் உன்னை ஸதா புகழ்ந்து கொண்டே இருக்கிறார். உன்னைத்

தம் குருவாகக் கொண்டு பூஜை செய்வார் போல் இருக்கிறது. எப்பொழுதுமே உன் பேச்சுத் தான்; உன் ஞாபகம் தான்.

மான :—பின் ஏன் அவர் ஒரு தடவைகூட இங்கே வருவதில்லை? அவரைக் காணவேண்டும் என்று இருக்கிறது. அவரை வரச் சொல்; சொல்வாயா?

(ஒரு படம் வரைபவள் வருகிறாள்)

படம் வரைபவள் :—அம்மா, படங்கள் ஏதாவது வேண்டுமா? (மூட்டையை அவிழ்த்து ஒவ்வொன்றாக எடுக்கிறாள்.)

மான :—ஆனால் நீ ஆக்ராவிலிருந்தா இந்தப் படங்களை கொண்டு வந்து அலைகிறாய்? ரொம்பக் கஷ்டம், பாவம்!

படம் வரை:-அதுதானே எங்கள் தொழில். இது அக்பர் பாத்ஷாவின் படம்.

மான .—எங்கே பார்ப்போம். (கையில் வாங்கிக்கொண்டு) தீவிரமான திருஷ்டி; தயையும் கூடவே இருக்கிறது. இது யார்?

படம் வரை:—மஹாராஜா மான ஸிம்ஹருடைய படம் இது.

கல்யா :—நிராசையும் வருத்தமும் தான் முகத்தில் தென்படுகிறது.

மான:—ஆத்ம மரியாதையும் ஜ்வலிக்கிறது· பார். ஆமாம்; இது யார்?

படம் வரை :—முகலாய ஸேனாதிபதி கான் கானா, ஹிதாயத் அலிகான். அழகாக வில்லை?

மான :—(சிரிக்கிறாள்) பெண் பிள்ளைபோல் தலையை வாரிவிட்டுக் கொண்டு, அழகுதான்! இது யார்?

படம் வரை :—மஹாபத் கான்.

மான :—ஸேனாபதி மஹாபத் கானா? பார்ப்போம். (உற்று கவனித்து) பிறவி வீரனின் முகம்; உயர்ந்த நெற்றி, தீவிர திருஷ்டி, திட பிரதிக்ஞை, உதார குணங்கள்—இவ்வளவும் ஒருவரிடம் சேர்ந்திருப்பது அபூர்வம்; கல்யாணி! எதை இவ்வளவு கவனமாய்ப் பார்க்கின்றாய்? என்ன விசேஷம்?

கல்யா:—ஒன்றுமில்லை. (தலையைக் குனிந்து கொள்கிறாள்).

மான ,—அவை யெல்லாம் என்ன படங்கள்?

படம் வரை :—பாத்ஷாவின் ஸபையில் உள்ள பிரமுகர்களின் படங்கள்.

மான :—இவைகளே போதும். என்ன வேண்டும் உனக்கு? இந்தா. (4 மோகராக்களைக் கொடுக்கிறாள்)

படம் வரை :—தங்கள் படம் ஒன்றும் காணோமே. நான் ஒன்று வரைந்து தருகிறேனே.

மான:—என் படமா? வேண்டாம். எதற்கு என் படம்?

படம் வரை:—இவ்வளவு கருணை நிறைந்த, முகத்தை நான் கண்டதே இல்லை. ஏதோ தெரிந்த வரையில் எழுதிப் பார்க்கலாமே.

மான :—அதெல்லாம் வேண்டாம் நீ போய். வா. (படக்காரி போகிறாள்) கல்யாணி, இவ்வளவு ஊக்கமாய்ப் பார்க்கிறாயே: எந்தப் படம் அது?

கல்யா :—ஒன்றுமில்லை. (படங்கள் வரிசையை மாற்றி வைத்து, மானஸீ கையில் கொடுக்கிறாள்).

மான :—அதனால் என்ன ? நான் அந்தப் படத்தை இதோ எடுக்கிறேனே. (மஹாபத் கான் படத்தை எடுத்துக் கொடுத்து) இது தானே! இதில் வெட்கம் என்ன? இவர் உன் கணவரல்லவா?

கல்யா :—(முகத்தைக் கவிழ்த்து கொண்டு) மதம் மாறிப்போய்விட்ட பிறகுமா?

மான :—அதனால் என்ன? இந்த மதச் சண்டைகள் தானே நம் தேசத்தை அழிக்கின்றன. நீயுமா அதில் கலந்துகொள்ள வேண்டும்? எல்லா ஜனங்களும் பகவானுடைய பிரஜைகள் தான்· எல்லா மதங்களும் அந்த பகவானை அடையும் மார்க்கங்கள் தான். ஏன் ஒன்றுக்கொன்று இவ்வளவு விரோதமும் கொலையும் ரத்தக் காயமும், பகவானுடைய பெயராலேயே ஏற்பட்டு விடவேண்டும்?

கல்யாணி :—ஆனல்,' இவ்விடத்தில் அன்பு கொண்டிருப்பது பாபமல்லவா ?

மானஸி :—அன்பினுமா பாபம் ? ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கத் தக்கவனுகத் தோன்றுகிருனே, அவ்வளவுக்கவ்வளவு அவன் நம் அனுதாபத்துக்குப் பாத்திரன் என்று நிச்சயமாக வைத்துக் கொள். இந்த பிரபஞ்சத்தை முழுவதும் வியாபிக்கும் ஸௌந்தர்ய ராசியின் ஓர் கிரணமாவது அவனது ஹ்ருதயத்தையும் ஜ்வலிக்கச் செய்யாமலா இருக்கும்? ஆனல், அந்த விசாரமும் இங்கு வேண்டியதில்லை. மஹாபத்கான் மதவிரோதி யல்லரே. அவர் ப்ரஹ்மத்தை 'ஈச்வரன்' என்று சொல்வதற்கு பதிலாக 'அல்லா' என்று சொல்லுகிருர். அதனுலா அவர் பாபியாகி விடுவார்?

கல்யா :—இன்று முதல் நீ தான் எனக்கு குரு! நீ சொல்வது தான் இனி எனக்கு வேத வாக்கு.

மான :—அன்பு என்பதே ஸ்வச்சந்தமாய் ஸ்வயமாக மலர்ந்த ஓர் ஸௌந்தர்யம். அது ஓர் அனுதியான ஸங்கீதம். அது மறுத்தலையோ இடையூற்றையோ கருதாது. லக்ஷணம் அவலக்ஷணம் என்றும் நோக்காது. கெடுதல் நல்லது என்றும் மதிக்காது. ஜாதி பேதத்தையும் கடந்தது.

கல்யா :—(யோசித்து) ஸரி, நாளைக்கு வருகிறேன். (போகிருள்).

(மானஸி தனியாகப் பாடிக் கொண்டிருக்கிருள்; ராணி வருகிருள்).

ராணி :—மானஸி ! இதைக் கேட்டாயோ ?

மான :—என்ன, அம்மா ?

ராணி:—உனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்கிருர்கள். உன்னையும் கேட்கவேண்டுமாம். உன் தகப்பனர் உன்னைக் கூப்பிடுகிருர், போ.

மான :—எனக்கா கல்யாணம்?

ரபணி :—ஆமாம், ஜோதிபுர ராஜ குமாரனை யசவந்த ஸிம்ஹருக்குக் கொடுப்பதாக நிச்சயம் ஆகிறது. தூதனையும் அனுப்பப் போகிறது, போ.

(மானஸி அழுகிருள்.)

ராணி :—இது என்னடி இது! கல்யாணம் என்ருல், அழுவார்களா! நன்ருய் இருக்கிறதே!

மான :—இல்லை அம்மா, எனக்கு கல்யாணம் வேண்டாம். அந்த கட்டுக்குள் என்னை அடிமைப் படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை.

ராணி: —அதற்காகக் கன்னியாகவே இருந்துவிட முடியுமா ?

மான: —ஏன் முடியாது ? பால விதவைகள் பிரம்மசாரிணிகளாக இருக்கையில் நான் மட்டில் ஏன் இருக்க முடியாது? நான் ஆயுள் முழுவதுமே, பிரம்மசாரிணியாக இருந்துவிடப் போகிறேன், அம்மா. தகப்பனரிடமும் அப்படியே தெரிவித்து விடுகிறேன். (போகிருள்).

ராணி:—நல்ல பைத்தியம் இது: பைத்தியம் இல்லாமல் வேறு என்ன? அவர் ஒன்றுமே சொல்வதில்லை. பெண்ணை இப்படி வளர்த்து விட்டார். நான் அப்பொழுதே சொன்னேன். அதோ வருகிருரே! நன்ருய்க் கேட்டு வருகிறேன்.

(அரசன் வருகிருர்)

அரச :—மானஸி எங்கே ?

ராணி :—உங்களிடம் தானே வந்தாள். ஆமாம், இப்படித்தான் அவளைப் பைத்தியமாக வளர்ப்பதா ?

அரச :—பைத்தியமா? யார் பைத்தியம்?

ராணி :—அவள் தான். கல்யாணமே அவளுக்கு வேண்டாமாம்; அழுகிருள். நான் அப்பொழுதே சொன்னேன். கொஞ்சம் கண்டித்து அதட்டிக்கொண்டு வாருங்கள் என்று முட்டிக் கொண்டேன். நான் சொல்வதை யார் கேட்கிருர்கள்? பார்த்தீர்களா பலனை.

அரச :—அவளை உனக்குத் தெரியாது. உன்னுல் புரிந்து கொள்ள முடியாது.

ராணி :—எனக்கு நன்ருகத் தெரிகிறது. நன்ருகப் புரிந்து கொண்டு விட்டேன். அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

அரச :—ஆஹா ! அந்தப் பைத்தியம் உனக்கும் பிடிக்கக் கூடாதா !

ராணி :—கேட்டாயா? ஸரிதான். உங்கள் இருவருக்கும் பிடித்தது போதாதா?

அரச :—ராணி, இதோ பார். நான் அவளை முற்றிலும் புரிந்து கொள்ள வில்லை. தெரிந்து கொண்டவரையில் அவள் ஓர் ஸ்வர்க்க லோக வஸ்து. அவளை நீ ஒன்றும் சொல்லாதே. பேசாமல் பார்த்துக் கொண்டே இரு. ஏதாவது நீ சொல்லி, அது ஸ்வர்க்கத்துக்கே கோபித்துக் கொண்டு போய்விடப் போகிறது. ஜாக்கிரதை! (போகிறார்).

ராணி :—ஸரிதான்! மானஸியின் பைத்தியம் பரம்பரைப் பைத்தியம்! என் கதி இனி என்ன ஆகுமோ?

காட்சி 5.

கோவிந்த ஸிம்ஹரின் வீடு.

(சுவரில் ஓர் படம் மாட்டி இருக்கிறது. கல்யாணி கையில் புஷ்பக் கூடையுடன் அந்தப் படத்துக்குப் பூஜை செய்ய வருகிறாள்).

கல்யாணி :—என் அன்பே, ப்ரியதம! ஸாதாரண ஜீவனத்தை, ரஸ மயமாகச் செய்த என் ஹ்ருதயத்தின் சக்கரவர்த்தி! நிராசை நிறைந்த என் வாழ்வைத் தலை தூக்கி நிமிர்ந்து நிற்கக் கற்றுக்கொடுத்த ஆசார்யன் நீர். என் விழிப்பின் ஸ்வர்ண ஸ்வப்னம், என் ஸ்வப்னத்தின் ஸந்தோஷ விழிப்பு நீர். ஸதா மதுரமாய், ஸதா நவீனமாய், பிராதக்கால ஸூர்யனைப் போல் விளங்கும் என் ஸ்வாமி நீர். என் தேவதை நீர். என் ஜீவனத்தின் தவமும் நீர். (தன் கைப் புஷ்பத்தை படத்தில் போடுகிறாள் கோவிந்தஸிம்ஹர் அங்கு வருகிறார்; பேசாமல் பார்க்கிறார்).

கோவிந் :—(கம்பீரமாக) கல்யாணி!

கல்யா :—(திரும்பி) ஏன், அப்பா!

கோவிந் :—இது யாருடைய படம்?

கல்யா :—(தலை குனிந்து) என் பதியினுடைய படம்.

கோவிந் :—உனக்குப் பதியா? யார்? மஹபத் கானா?

கல்யா :—ஆமாம்.

கோவிந் :—இந்தப் படம் எப்படி இங்கு வந்தது?

கல்யா:—பூஜை செய்வதற்காக, இன்று நான் தான் எடுத்து வந்தேன்.

கோவிந் :—பூஜை செய்யவா?

கல்யா :—ஆம், அப்பா, பூஜை செய்யத் தான். ஏன் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்! இது ஒன்றும் தவறாக இல்லையே... தவறா? காலில் விழுகிறாள்).

கோவிந் :—மஹபத் கான் உனக்கு யார்?

கல்யா :—(எழுந்து) அவர் என்னுடைய பதி.

கோவிந் :—உனக்கு நான் எவ்வளவு தடவைகள் சொல்லி ஆகிவிட்டது. உனக்கு பதியே கிடையாது என்று தெரியாதா?

கல்யா:—நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன். இப்பொழுது ஸரியாகத் தெரிந்து கொண்டேன். அவர் தான் என் பதி.

கோவிந் :—உனக்கு பதியா, அந்த மதம் மாறின மஹாபத் கான்?

கல்யா :—அப்பா, நான் மதத்தையோ தர்மத்தையோ கண்டறிந்ததில்லை. ஆசாரமும் தெரியாது. எனக்கு தெரிந்தது இவ்வளவு தான். என்று ஈச்வரஸாக்ஷியாக எங்கள் இருவருக்கும் கல்யாணம் நடந்ததோ, அன்று முதல் நாங்கள் இருவரும் ஒருவரே. அந்த விவாஹம் என்னும் பந்தனத்தால் நாங்கள் இருவரும் கட்டுண்டு விட்டோம். அந்தக் கட்டை இனி யார் அறுக்க முடியும்?

கோவிந் :—துலுக்கனாக அவன் போன அன்றே, அந்தக் கட்டை அறுத்தெறிந்து விட்டானே! இன்னும் என்ன?

கல்யா :—இல்லையே; முஸல்மானாக ஆன பிறகும், என்னை அழைத்துக் கொள்ளத் தானே விரும்புகிறார்.

கோவிந் —உன்னை அழைத்துக் கொள்ள விரும்புகிறாரா? கோவிந்த ஸிம்ஹரின் புதல்வியை அழைத்துக் கொள்வதோ மறுப்பதோ அந்த துலுக்கனுடைய விருப்பத்தைப் பொறுத்ததாகவா போய்விட்டது? கல்யாணி!

என்று அவன் ஹிந்து தர்மத்தை விட்டு விட்டு, வேறு மதத்திற்குச் சென்று விட்டானே, அன்றே அவன் உன்னை பரித்தியாகம் செய்து விட்டான் என்று தெரிந்து கொள்.

கல்யா :—அப்படி இல்லையே, அவர் என்னைத் தள்ளவில்லையே.

கோவிந் :—என்ன சொல்லுகிறாய்? பட்ட அவமானம் போதவில்லையா? ஆனால் கேள். நீ மஹாபத்கானுக்கு கடிதம் எழுதினையா?

கல்யா :—ஆம், எழுதினேன். (விஜயஸிம்ஹர் வருகிறார்).

கோவிந் :—ஐயோ! பாக்கியமே! (நெற்றியில் அடித்துக் கொண்டு) அந்தக் கடிதத்தை அவன் திருப்பி அனுப்பிவிட்டான். "உன்னை அழைத்துக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை" என்றும் இதோ எழுதியிருக்கிறான். பார். கடிதத்தை (விட்டு எறிகிறார்). இவ்வளவு அவமானத்தை வரவழைத்துக் கொள்ளாமல், உனக்கு இருப்புக்கொள்ள வில்லையா? (கல்யாணி ஆதரவுடன் கடிதத்தை எடுத்துக் கொள்கிறாள்).

கல்யா :—முகலாய ஸேனை ஒன்று மறுபடியும் வருகிறதாமே, வாஸ்தவமா?

அஜய :—ஆம், ஒரு லக்ஷம் ஸைனிகர்கள்.

கோவிந் :—ஸரிதான், எல்லாம் போய் விடும். மிச்சம் மீதியான மேவார் இந்தத் தடவையோடு ஸர்வநாசமாகி விடும். ஏன், கல்யாணி! ஏன் தலையை தொங்க விட்டுவிட்டாய்?

கல்யா :—நான் என்ன சொல்வேன்!

கோவிந் :—இன்னும், அந்த மஹாபத்கான், உன் பதி தானே?

கல்யா :—ஆமாம், நிச்சயமாக. தன்னை ஆதரவுடன் வைத்துக் கொண்டிருக்கும் பர்த்தாவை, எந்த ஸ்திரீயும் பூஜை செய்து விடுவாள். ஆனால் தன்னை உதைத்துத் தள்ளும் திருவடிகளுக்கு எவள் பூஜை செய்கிறாளோ, அவள் தான் உண்மையான ஸாத்வியான பதிவிரதையாவாள். பிரிவுற்றும் குறைவற்றதாயும், திரஸ்கரிக்கப்பட்டும் குன்றாததாயும், கொடுமைக்குள்ளாகியும் கலங்காததாயும், நிராசை அடைந்தும் தாபமற்றதாயுமான பதி பக்திதான், ஹிந்து ஸ்திரீயின் பாதிவ்ரத்யமாகும். காரிருளில் சந்திரனைப் போல் சாந்தமாகவும், புயல் காற்றில் பர்வதத்தைப் போல திருடமாகவும், பிரகாசிக்கும் இந்த பாதிவ்ரத்தியம் எல்லா ஸமயங்களிலும், எல்லா நிலைமைகளிலுமே விச்வாஸத்தைப் போல் ஸ்வச்சமாகவும், கருணையைப் போல அயாசிதமாகவும், மாத்ரு ஸ்நேஹத்தைப் போல் நிரபேக்ஷையாகவும் விளங்கும். அவர் தான் என் ஸ்வாமி, அவர் தான் என் தேவதை, அவர் தான் என் பதி; தம் அடியாளாக என்னை அவர் கொண்டாலும் ஸரி, கொள்ளா விட்டாலும் ஸரி, எனக்கு இரண்டும் துல்யமே.

கோவிந் :—இரண்டுமே துல்யமா? கல்யாணி! நீ என் பெண்தானா?

கல்யா :—அப்பா, நான் தங்கள் பெண் தான். தங்கள் கௌரவத்தை நான் ஒரு நாளும் குறைத்துவிட மாட்டேன். நான் அவருடைய ஸாத்வியான பதிவ்ரதா ஸ்திரீ என்று காட்டக் கூடிய ஓர் அரிய ஸந்தர்ப்பம் எனக்கு இன்று கிட்டி இருக்கிறது. அந்த மஹிமையைக் கண்டு மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். தாங்கள், தங்கள் தேசத்திற்காக, எப்படித் தங்கள் பிராணனையும் அர்ப்பணம் செய்வீர்களோ, அதே போல், நான் என் பாதிவ்ரத்ய தர்மத்தின் உச்சமான லக்ஷ்யத்தின் பொருட்டு, என் ஜீவனை அர்ப்பணம் செய்து அந்தத்தியாகம் என்னும் மார்க்கத்தை கடைப் பிடித்தேன். இனி என்னை யார் தடுக்க வல்லவர்? (ஆவேசமாய்க் குரல் நடுங்குகிறது)

கோவிந் :—இதுவா தியாகம்? இந்த வேசியாசரணையையா தியாகம் என்பது?

அஜய :—அப்பா, அப்பா, வேண்டாம். சொல்வதை யோஜித்து, நிதானித்துச் சொல்லுங்கள். கோபத்தில் வாயில் வந்ததைச் சொல்லி விடாதீர்கள். இவ்வளவு உயர்ந்த அழகான பரிசுத்தமான ஸ்வபாவத்தை ஏன் நீசமாக வழங்குகிறீர்கள்?

கல்யா :—(கர்வத்துடன்) ஆம்; நீர்தான் எனக்கு ஏற்ற ஸஹோதரர்!

கோவிந் :—அஜயா! நூறு தடவை இவ ளுக்கு நான் சொல்லி விட்டேன். இவள் விதவை ஆகிவிட்டாள். இவளுக்குப் பதியே கிடையாது.

கல்யா :—நானும் நூறு தடவை சொல்லு கிறேன்; இருந்தாலும் இறந்தாலும், அவரே தான் என் பதி.

கோவிந் :—அந்த நீசன், அதமன், மஹா பத்கானா உனக்கு பதி?

கல்யா :—உங்களுக்கு அவர் அதமராகத் தோன்றலாம். எனக்கு அவர் பூஜ்யரே.

கோவிந் :—பூஜ்யரா? ஜாதித்துரோஹி, மதத் துரோஹி, மஹாபத்கானா கோவிந்தஸிம்ஹ ரின்புதல்விக்கு பூஜ்யர்? ஐயோ, விதியே!

கல்யா :—(ஸ்திரமாக) அப்பா, எனக்கு ஜாதியும் தெரியாது, மதமும் தெரியாது, தகப் பனும் தெரியாது, தர்மமும் தெரியாது, எனக்குத் தெரிந்தது என் பதிதான். இதை விட மேலான தர்மம் ஸ்திரீகளுக்கு கிடை யாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகையால் ஸ்திரீ ஒரு தடவை குதித்து விட் டாள். அது அம்ருத ஸாகரமோ விஷக் கடலோ, வாழ்வோ, சாவோ, இஹகாலமோ பரகாலமோ, எல்லாம் அவளுக்கு அந்த புருஷனே யாவான். அவர் முஸல்மானோ ஹிந்துவோ, ஆஸ்திகரோ நாஸ்திகரோ, நானும் அவரும் இனி ஒரே வழியில் செல்லும் இரு பிரயாணிகள். அவருடன் சென்று நர கமே கிடைக்குமானாலும், அந்த நரகமே எனக்கு ஸுவர்க்கம். அந்த நரகத்திற்கும் போக நான் சித்தமாய்விட்டேன்.

கோவிந் :—ரொம்ப ஸரி, ஆனால் நீ அங் கேயே போகலாம். எங்கு இஷ்டமோ அங்கு போகலாம். உன்னை நான் துறந்து விட்டேன். இன்று முதல் நீ யாரோ நான் யாரோ? போ.

அஜய :—என்ன அப்பா, தங்கள் செல்வப் புதல்வி கல்யாணியையா, இப்படி யெல்லாம் சொல்வது?

கல்யா :—இல்லை இல்லை. இவள் என் பெண்ணே அல்ல. கல்யாணி! நீ போ. உன் பதியினிடமே செல்.

கல்யா :—தங்கள் உத்தரவைச் சிரமேற் கொள்கிறேன். ஸரி, விடை அளியுங்கள். (நமஸ்கரிக்கிருள்).

அஜய :—அப்பா, கொஞ்சம் யோசித்துச் செய்யுங்கள், செய்வதை. இந்த அந்யாயமும் உண்டா? ஒரு பெண், தவறு செய்தாலும் மன்னித்து அவனைக் காப்பதா, இப்படி துரத்தி விடுவதா?

கோவிந் :—நான் என்ன செய்வது? அவள் தான் நரகத்திற்குப் போகவேண்டும் என் கிருளே, போகட்டுமே!

அஜய :—அப்பா! அது, அவளுக்கு நரகம் ஆகாது. ப்ரேமையின் புண்ணியம் கொஞ்சம் இருக்கும் இடமே ஸ்வர்க்கம். இந்த விலை யில்லாத மாணிக்கத்தை ஆத்திரப் பட்டு இழந்து விடாதீர்கள்! தாங்கள் என்ன செய் கிறீர்கள் என்று தங்களுக்கே தெரியவில்லை.

கோவிந் :—அஜயா, எனக்கு நன்ருகத் தெரி கிறது. கல்யாணி! என் தேசத்திற்கே சத்துரு வானவனை என் வீட்டில் அழைத்து வைத்துக் கொள்ள நான் உடன்பட மாட்டேன். உன் னுடைய தர்மம் பதி தான் என்ருல் என் னுடைய தர்மம் தேசம் தான். போ, வெளியே. (திரும்பிக் கொள்கிருர்).

கல்யா :—அப்படியே. (போகிருள்).

அஜய :—சற்று நில், கல்யாணி! அப்பா, அப்படியானல் எனக்கும் உத்திரவு அளியுங் கள். நானும் செல்கிறேன்.

கோவிந் :—(திரும்பி) ஏனப்படி, அஜயா?

அஜய —இந்த அபலையை தனியாகச் செல்ல விடுவதா? நானும் அவளுடனே செல்கிறேன்.

கோவிந் :—உன்னை நான் வீட்டை விட்டுப் போகச் சொல்ல வில்லையே!

அஜய :—அப்படியும் வாயால் சொல்ல வேண்டுமா? ஒரு பெண்ணை, அவள் செய்யும் உயர்ந்த கார்யத்திற்காக, வீட்டை விட்டுத் துரத்தி, துஷ்ட மிருகங்கள் நிறைந்த இந்த உலகத்தில் தனியாகச் செல்ல விடுகிறீர்கள். இச் சமயம், இவள் பதி இவ்விடம் இருந்தால்,

இவளை ரக்ஷித்துக் கொள்வார். அவர் இல்லை, நான் இருக்கிறேன். நான் இவளை ஸம்ரக்ஷிக்க வேண்டும். வா, கல்யாணி! நாம் இருவரும் செல்வோம். இந்தக் கடலில் நம் தோணியை அவிழ்த்து விடுவோம். கரை தான் சேருமோ, சேராதோ? வா. நமஸ்காரம். (தகப்பனருக்கு நமஸ்கரிக்கிறான்; இருவரும் போகிறார்கள். கோவிந்தஸிம்ஹர் திகைத்து நிற்கிறார்).

காட்சி 6

(சித்தூருக்கு அருகில் ஓர் காடு. தூரத்தில் மலையினடியில் சூரியன் அஸ்தமிக்கிறது. அருணஸிம்ஹனும் ஸகரஸிம்ஹரும் ஓர் மரத்தின் அடியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றனர்).

ஸகர :—இனி இந்த சித்தூரில் நான் இருக்க மாட்டேன். ஒரு ஜயில் அது! எவ்வளவு பயங்கரம்! நான் ஆக்ராவிற்கே போய் விடுகிறேன்.

அருண :—எனக்கு இந்தக் கோட்டை தான் பிடிக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு சிலையும் நம் பூர்வ புருஷர்களை ஞாபகப் படுத்துகிறதே! நம் பழைய கௌரவ வாழ்வு எல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது.

ஸகர :—மறுபடியும் ஆரம்பித்து விட்டாயா? போனது போய்விட்டது. அதை நினைத்து அழுவதால் ஆவது என்ன?

அருண :—பழைய ஞாபகங்கள் தான் எனக்கு ஸந்தோஷத்தை அளிக்கின்றன.

ஸகர :—ஸரி தான்! உன் தாயாரைப் போலவே நீயும் ஆகிவிடு. அவளும் இப்படியே தான் சொல்லிக் கொண்டே இருந்தாள். ஒரு நாள் "மேவார், மேவார்" என்று கத்திக் கொண்டு புறப்பட்டு விட்டாள்; போன இடம் இன்னும் தெரியவில்லை.

அருண :—நான் தேடிக் கொண்டு வருகிறேன்.

ஸகர :—இந்தக் காட்டில் தேடியா அகப்படுவாள்? சூரியன் இந்தக் காட்டில் விழுந்து விட்டால் கூட அதைத் தேடி எடுக்க முடியாதே! ஸரி, வா, போவோம்.

அருண :—நான் ஆக்ராவிற்கு வரமாட்டேன். நீங்கள் போக வேண்டுமானால் போய்க் கொள்ளுங்கள். எனக்கு இந்தப் பிரதேசம் தான் பிடித்திருக்கிறது. என் தாயார் இருக்கும் ஊர்தான் என் ஊர். நான் இங்கேயே இருந்து விடப்போகிறேன்.

ஸகர :—நான் பயந்த படியே ஆகிவிட்டதா! டேய், நீ ஆக்ராவில் பாதுஷா கட்டிய வெள்ளைக்கல் மஹாலைப் பார்த்ததேயில்லையே. என்னுடன் வா, நன்றாகப் பார்க்கலாம்.

அருண :—எனக்கு வேண்டாம். அதை விட இந்த நிர்ஜன வனமே எனக்கு உயர்ந்ததாகக் காண்கின்றது.

ஸகர :—ஆக்ராவில் 78 மசூதிகள் இருக்கின்றனவே உனக்குத் தெரியுமோ? ஆஹா!

அருண :—தாத்தா! நீங்கள் சொல்லும் உயர்ந்த ஆயிரம் தங்க மசூதிகளைக் காட்டிலும் என் தேசத்து இடிந்து விழுந்த ஓர் கோவிலே என் கண்ணிற்கு அழகாகத் தோன்றுகிறது. முகலாயர்கள் காலில் விழுந்து, அவர்கள் பிச்சையாக அளிக்கும் ராஜ போகம் அனுபவிப்பதைக் காட்டிலும், என்னுடைய எளிய தாயின் மடியில் அமர்ந்து அதுவாகக் கிடைத்த ஸத்து மாவைப் புசிப்பதே மேலாகப் படுகிறது. இந்த பிச்சைக்காகவா, நீங்கள் உங்கள் ஸொந்த தேசத்தைவிட்டு, ஸஹோதரனைவிட்டு, புண்ணிய கதைகள் நிறைந்த உங்கள் வீட்டையும் விட்டு பிறர் வாசலில் பழி கிடக்கிறீர்கள்? உங்களுக்கு அவர்கள் தினம் ஒரு கைநிறைய தங்கத்தைக் கொடுத்துக் கொண்டு வந்தபோதிலும், அதில் அவர்கள் பாததூளியும் சேர்ந்ததுதானே! உங்களை நோக்கி அவர்கள் சிரிக்கும்போது, அந்த சிரிப்பில் உங்களிடத்திலுள்ள அவமதிப்பும் வெறுப்பும் கூடவே துலங்குகின்றவே. தாத்தா பிறர் கொடுக்கும் தங்க பொக்கிஷத்தைக் காட்டிலும் நம் ஸஹோதரனுடைய வெற்றுச்சிரிப்பே ஸந்தோஷத்தை அளிக்கிறது எனக்கு. (ஸத்யவதி வருகிறாள்.)

ஸத்யவதி :—அப்பா! சிரஞ்சீவியாக இரு.

ஸகர :—யார் அது? ஸத்யவதியா? ஸ்வப்னமா? இல்லையே! வாஸ்தவம்தான். ஸத்யவதியேதான்! அம்மா! வந்தாயா கடைசியில்?

வாடி, அம்மா. இவ்வளவு நாள் எங்கே போய் விட்டாய்? என்னை மறந்தேவிட்டாயே!

ஸத்ய :—பையா! என் தேசத்திற்காக ஸன்யாஸினி ஆகி வெளிக்கிளம்பிய அன்று, எனக்கு எல்லாவற்றைக் காட்டிலும், இனியது உன்னுடைய சிறு கைகளின் ஆலிங்கனமே. மலைகளிலும் காடுகளிலுமாக நான் திரியும்பொழுதெல்லாம், உன்னுடைய அழகிய சிரிப்புத்தான் என்னை எப்பொழுதும் ஞாபகமூட்டி வாட்டிற்று. இங்கு நீயும் வந்திருக்கிறாய் என்று கேட்டவுடன் எனக்கு இருப்புக் கொள்ளவே இல்லை. ஓடி ஓடியும் வந்தேன்,உன்னைக்காண. உன்னைக் கண்டு மகிழ்ந்தேன். இவ்வளவு நேரமும் இந்த மரத்தின் மறைவில் நின்றுகொண்டு, உன் அமுத வசனத்தைக் கேட்டுப் பரவசமடைந்தேன். தாங்க முடியாத ஆனந்தம்! அடக்கிவைத்துக் கொள்ள இயலவில்லை! என் கண்ணே! என் செல்வ அருண்! (கையைப் பிடித்துக்கொண்டு கட்டிக் கொள்கிறாள்.) .

. ஸகர :—ஸத்யவதி, ஸத்யவதி! என் பக்கம் கண் எடுத்துக்கூட பார்க்கமாட்டாயா? நான் என்ன அப்படிப்பட்ட அபராதம் செய்துவிட்டேன்?

ஸத்ய:—என்ன அபராதமா? என்ன செய்யவில்லை? ஆம், அதைப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தி உங்களிடம் ஏது? துன்பத்தால் வாடிய இந்த ஜன்ம பூமியை விட்டுவிட்டு, முகலாயர்களின் காலில் விழுந்து, ஸந்தோஷ போகங்களை அனுபவிக்கும் தங்களுக்கு, எப்படி இதெல்லாம் புரியும்? இந்த தேசத்து ஸ்த்ரீகளின் ஸதிக்வத்தைக் கெடுத்து, புருஷர்களின் ஆண்மையைக் குலைத்து, மிச்சமாக மீந்துநிற்கும் மேவாரையும் த்வம்ஸம் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் முசல்மான்களுக்கு அடிமையாகி, உங்கள் ஸஹோதரனுடைய பிள்ளையான அமரஸிம்ஹரையும், தன் தர்ம ஆஸனத்திலிருந்து இறக்கி விடுவதற்காக உங்களையே அரசராகக் கல்பித்துக்கொண்டு, சித்தூரிலும் அரசாட்சி தொடங்கி விட்டீர்களே? இவ்வளவும் செய்துவிட்டு கேட்கின்றீர்கள்: 'நான் என்ன அப்படி அபராதம் செய்துவிட்டேன்' என்று! போங்கள், போங்கள். உங்கள் வழியே வேறு. அப்பா, பையா! நீ வாடா. இந்த இருண்ட ஸம்ஸாரத்தில், இந்த துர்த்தினத்தில் நீதான் எனக்குத் துணை. இன்று என் ஹ்ருதயமும் இரட்டிப்புப் பலத்தைப் பெற்றது; வா, போவோம். (அருணை அழைத்துக்கொண்டு போகிறாள்.)

ஸகர :—ஸத்யவதீ! ஸத்யவதீ! சற்று நில். அருண்! நீயாவது நில். நானும் உங்களுடனே வந்துவிடுகிறேன். ஆமாம், நீ சொல்வது அவ்வளவும் வாஸ்தவம்தான்! இன்றுதான் என் தாய் நாட்டைக் கண்டுகொண்டேன்; பிறர் கிருபையில் வாழும் வாழ்வை இன்று முதல் ஒழித்தேன்; இன்றுமுதல் என் ஜன்ம பூமியின் வாழ்விலே என் வாழ்வு; அதன் துக்கமும் தரித்திரமும் என் துக்கமும் தரித்திரமும் ஆகும். வாடி அம்மா! என்னையும் உன்னுடன் வைத்துக்கொள்.

ஸத்ய :—இதெல்லாம் வாஸ்தவம் தானா? எனக்கும் இவ்வளவு பாக்கியம் கிடைத்துவிட்டதா? ஒரே ஸமயத்தில், ஒருவரோடு ஒருவராக எனக்கு பிள்ளையும் கிடைத்து, தகப்பனாரும் கிடைத்துவிட்டதே! நீங்கள் சொல்வதெல்லாம் ஸத்தியம் தானா, முழுவதும் ஸத்தியமா?

ஸகர :—ஆமாம், ஆமாம்; முற்றிலும் உண்மையே. முன்பு இவைகளெல்லாம் என் அறிவுக்கு எட்டவில்லை. இப்பொழுதுதான் விஷயங்களை அவைகளின் உண்மையான ஸ்வரூபத்தில் கண்டறிந்தேன். என் தவறுகளை மன்னித்து என்னை ஏற்றுக்கொள்.

ஸத்ய :—அப்பா, அப்பா! (ஸகரஸிம்ஹரின் திருவடிகளில் பணிகிறாள்.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

(தொடரும்)



மொழிபெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்.

மதனமஞ்ஜூகா என்ற ஆறுவது லம்பகம்.

இரண்டாம் அலே.

(டாக்டர் வே. ராகவன்.)

(243-ம் பக்கத் தொடர்ச்சி)

உபகதை 5

புஷ்கராவதி யென்ற நகரில் கூடஸேனன்* என்ற அரசன் இருந்தான். அவனுக்கு ஒரே வொருபிள்ளே தான் பிறந்திருந்தான். தான் ஒற்றைப் பிள்ளேயாதலால் கர்வங் கொண்டிருந்த அந்த ராஜ குமாரன், நல்லதோ பொல்லாததோ எதைச் செய்தாலும், அவன் தந்தை அதைப் பொறுத்து வந்தான். தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது ஒரு ஸமயம், அந்த ராஜகுமாரன், தன்னேப்போலவே ஐசுவரியமும் உருவும் கொண்டவனுய், பிரம்ம தத்தன் என்ற வணிகனுக்கு ஏற்பட்ட ஒற்றைப் பிள்ளே யொருவனேக் கண்டான். கண்டதும் உடனே தானே அவனே வரித்துத் தன் நண்பனுய்ச் செய்து கொண்டான். அப்பொழுதே அந்த அரச குமாரனும் அவ் வணிக குமாரனும் ஒரே தோற்ற முடையவராய் ஆனுர்கள். சில நாட்களுக்குள், ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளாமல் அவ் விருவருக்கும் இருக்க முடியவில்லே. முன் பிறப்பின் பழக்கம் அன்பை வெகு சீக்கிரமல்லவா உண்டாக்குகிறது? வணிக குமாரனுக்கு முதலில் அளிக்கப்படாதவொரு போகத்தை அரசகுமாரன் ஒரு போதும் தான் அனுபவிப்பதில்லே.

ஒரு ஸமயம், தன் நண்பனுக்கு முதலில் ஒரு விவாஹத்தைத் தீர்மானஞ் செய்துவிட்டு, தானும் மணப்பதற்காக அந்த ராஜகுமாரன் அஹிச்சத்ரம் என்ற ஊருக்குப் புறப்பட்டான். புடைசூழ, நண்பன் வணிக குமாரனேடு யானேயேறி, அஹிச்சத்ரம் செல்லும் அவ்வரச குமாரன் இக்ஷுமதீ நதியை யடைந்து அந்திப் போதில் அவ்விடம் தங்கினுன். சந்திரன் உதயமாக, அந்த நதீதீரத்தில் குடித்துவிட்டுப் படுத்துக் கொண்டவன், தன் தாதியின் வேண்டுகோளின்மேல் ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தான். கதையை

* மறைந்திருக்கும் ஸேனேயோடு கூடியவன்.

ஆரம்பித்தவன் குடி மயக்கத்தாலும் களைப்பாலும் தூங்கிப் போனான்; தாதியும் தூங்கிப் போனாள். ஆனால் சிநேகத்தால் அந்த வணிக குமாரன் மட்டும் விழித்துக் கொண்டிருந்தான். அவர்கள் உறங்கியதும் விழித்துக் கொண்டிருக்கும் வணிக குமாரனால் ஸ்த்ரீகள் தமக்குள் பேசிக்கொள்வதுபோல் வானில் பேச்சு கேட்கப்பட்டது. "கதையைச் சொல்லும் இந்த ராஜகுமாரன் உறங்கி விட்டான்; இவன் பாபி; இவனை இதோ நான் சபிக்கிறேன்; காலையில் இவன் ஒரு ஹாரத்தைக் காண்பான்; அதை எடுத்துக்கொள்வானானால், அது இவனுடைய கழுத்தில் போட்டுக் கொள்ளப்படுமானால், அக்கணமே இவன் மரிப்பான்." முதல் ஸ்த்ரீ இப்படி மொழிந்து முடித்தாள்; மற்றொருத்தி அதன் பிறகு பேசினாள்: "இங்கிருந்து உயிர்தப்பி இவன் போனால், ஒரு மாமரத்தைக் காண்பான்; அதிலிருந்து பழங்களைப் பறிப்பானானால், அதனால் இறப்பான்." இரண்டாவது ஸ்த்ரீ இப்படிச் சொல்லி முடிந்ததும், மூன்றாவது மங்கை சொன்னாள்: "மாமரத்தையும் தாண்டி உயிருடன் இவன் போவானானால், தன் மணத்தின் பொருட்டு இவன் வீடு நுழைந்ததும், இவனைக் கொன்றுவிட அவ் வீடே இவனுடைய முதுகுப் பக்கமாய் இடிந்து விழும்." இப்படி மூன்றாவது ஸ்த்ரீ முடித்ததும், நான்காவது ஸ்த்ரீ பேசினாள்: "வீட்டிலிருந்தும் இவன் தப்பினால், இவன் தங்கியிருக்கும் வீட்டில் அன்றிரவே இவன் நூறு தரம் தும்முவான்; அந்த நூறு தரமும் ஒருவன் "தீர்க்காயுஸா யிருக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு வராவிட்டால் இவன் செத்துப்போவான். மேலும், (நம்முடைய) இம்மொழிகளை (இப்பொழுது) கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவன் இந்த ராஜகுமாரனை காப்பாற்றவேண்டி, அவனிடம் இவற்றையெல்லாம் சொல்வானானால், அவனுக்குச் சாவு ஏற்படும்." இப்படிச் சொல்லி, நான்காவது ஸ்த்ரீயும் விலகினாள். இடிவிழுந்தாற்போல் பயங்கரமாயிருக்கும் இவற்றை யெல்லாம் செவியுற்ற வணிக குமாரன் அரசகுமாரனிடம் இருந்த நட்பினால் நடுங்கிப் போனவனாய் யோஜித்தான்:

"இந்தப் பாழுங்கதை! ஆரம்பிக்கப்பட்டும் சொல்லப்படாமற் போயிற்றே! இதைக் கேட்பதற்காகத் தெரியாமல் வந்திருந்த தேவதைகள் தமக்கிருந்த குதூஹலம் நிறைவேறாததால் சபித்துவிட்டனரே! இவ்வரசகுமாரன் இறந்துவிட்டால் நான் உயிருடனிருந்து என்ன பயன்? ஆகையால் என் உயிருக்கு ஒப்பாயிருக்கும் இவ்வன்பனை நான் என் யுக்தியைக்கொண்டு காப்பாற்றவேண்டும். இந்தச் சாப வரலாற்றையும் நான் அவனுக்குத் தெரிவிக்கக்கூடாது; தெரிவித்தால் எனக்கும் தீங்கு நேரிடும்." இவ்வாறு யோஜித்துக் கொண்டு அவ்வணிக குமாரன் இரவை சிரமத்துடன் கழித்தான்.

காலையில் அவனுடைய நண்பன் அரசகுமாரன் எழுந்து, பிரயாணத்திற்குப் புறப்பட்டவன், வழியில் தனக்கெதிரில் ஹாரமொன்றைக் கண்டான்; அதை எடுத்துக் கொள்ள விரும்பினான். அதன்மேல் வணிக குமாரன் சொன்னான்: "நண்பா! இந்த ஹாரத்தை எடுக்காதே; இது மாயை; மாயையாயில்லாமலிருந்தால் இந்த சைனிகருக்கு மட்டும் அது எப்படித் தென்படாமலிருக்கும்?" அதைக் கேட்டு, ஹாரத்தை விட்டு விட்டுச் சென்ற ராஜகுமாரன் தன்முன் மாமரமொன்றைக் கண்டான்; அதன் பழங்களை உண்ண விருப்பங்கொண்டான். முன்போலவே வணிககுமாரனால் அப்பழங்களிலிருந்தும் திருப்பப்பட்டு, மனதிற்குள் நொந்துகொண்டு மெள்ள மெள்ள நடந்து மாமன் மனையையடைந்தான். அங்கு தன் மணத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் கட்டிடத்திற்குள் நுழைந்தவன் தன் தோழனால் வாசற்படிக்கு வெளியிலேயே தடுக்கப்பட்டான்; அதற்குள் அவ்விடுதியும் இடிந்து விழுந்துவிட்டது. அவ்வாபத்திலிருந்து எப்படியோ தப்பி, தன் தோழனிடமும் நம்பிக்கை யடைந்தவனாய், ராஜகுமாரன் இரவில் வஸிப்பதற்காக மற்றொரு விடுதிக்குள் தன் மனைவியுடன் புகுந்தான். அவ் விடுதியினுள் வணிககுமாரனும் நுழைந்து தெரியாதபடி நின்றுகொண்டிருக்கையில், படுக்கையை யடைந்த ராஜகுமாரன் நூறுதரம் தும்மினான். நூறுதரமும் வணிககுமாரன் "தீர்க்காயுஸாயிருக்கவேண்டும் நீ" என்று மெள்ளச்

சொல்லி, தான்செய்யவேண்டியதைச் செய்து முடித்தவனும் மிகவும் ஸந்தோஷத்தோடு ராஜ புத்திரன் பார்க்கும்படியே வெளியே போக, அவ்வாறு போகும் வணிககுமாரனை தன் மனை யோடு கூடியிருக்கும் அரசகுமாரன் கண்டு, பொறுமையாமல், தம் நட்பையும் மறந்து, கோபத்தோடு வாசற்காவலரிடம் சொன்னான்: "இந்தத் தீயன், ஏகாந்தத்தில் இருக்கும் என்னுடைய அந்தப்புரத்தில் நுழைந்துவிட்டான்; இவனைக் கட்டிவையுங்கள்; காலையில் இவனை தண்டிக்கலாம்." இதைக் கேட்ட காவலரால் கட்டப்பட்ட வணிககுமாரன் இரவைக் கழித்தான்; காலையில் கொலைக்கோட்டத்திற்கு அக்காவலர் அவனைக் கொண்டுபோகையில், அவர்களிடம் சொன்னான்: "முதலில் என்னை அரசகுமாரனிடம் கொண்டு போம்; அவனிடம் நான் செய்ததற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்; பிறகு என்னைக் கொல்லுங்கள்" என்று. இப்படிச் சொல்லப்பட்ட காவலர், அரசகுமாரனிடம் தெரிவிக்க, அரசகுமாரனுக்கு மந்திரிகளும் மற்றவரும் புத்தி சொல்ல, வணிககுமாரனை அழைத்துவரும்படி கட்டளையிட்டான். கொண்டு வரப்பட்ட வணிககுமாரன் ராஜகுமாரனுக்கு நடந்த வரலாற்றையுரைக்க, வீடு இடிந்து விழுந்த நிகழ்ச்சியால் நம்பிக்கைகொண்டு மற்றதையும் உண்மையென்று நம்பினான். அதன் மேல் கொலையிலிருந்து விடுபட்ட தன் தோழனோடு, மிகவும் திருப்தி கொண்டவனாய் ராஜ குமாரன் விவாஹத்தைச் செய்துகொண்டு தன் நகருக்குத் திரும்பி வந்தான். அங்கு, தோழன் வணிககுமாரனும் மணந்துகொண்டான்; பலரும் அவனுடைய குணங்களைப் புகழச் சுகமாயிருந்து வந்தான்.

இப்படிக் கட்டுப்பாடின்றி, தன்னை அடக்குபவரையும் அழித்துக்கொண்டு மதம் பிடித்த யானைபோல் தம் நலத்தை யறியார் ராஜகுமாரர். தம் ஹாஸ்யத்திற்காக பிறருயிரை யபஹரிக்கும் ராஜகுமாரர் என்ற வேதாளங்களோடு என்ன நட்பு வேண்டியிருக்கிறது? ஆகையால், ராஜகுமாரி! நீ என்னுடைய நட்பை எப்பொழுதும் பாராட்டி வா."

இப்படி ஸோமப்பிரபையிடம் மேன்மாடியில் இக்கதையைக் கேட்டு, களிங்கஸேனை அன்புடன் தன் ஸகி ஸோமப்பிரபையிடம் சொன்னாள் :

ஸகி! இவர்கள் உண்மையில் பிசாசங்களே; ராஜகுமாரரல்ல; நான் பிசாசத்தின் துராக்ரஹத்தைப் பற்றிய கதையொன்றைச் சொல்லுகிறேன் கேள் :

உபகதை 6

யக்ஞஸ்தலம் என்ற அக்ரஹாரம்; அங்கு முன் பிராம்மணனொருவனிருந்தான்; வறுமையுற்று ஒருசமயம் விறகு கொண்டுவர காட்டிற்குச் சென்றான். அங்கு இவன் மரத்தைக் கோடரியால் பிளந்து கொண்டிருக்கும்போது மரத்துண்டொன்று விதிவசத்தால் இவனுடைய காலின்மேல் விழுந்து, காலைத் துளைத்துக்கொண்டு சென்றுவிட்டது. அதன்மேல் ரத்தம் பெருக, மூர்ச்சையடைந்தான்; அப்பிராம்மணனைக் கண்ட ஒருவன் அவனை யாரென்று தெரிந்துகொண்டு, அவனுடைய வீட்டிற்குத் தூக்கிச்சென்றான். வீட்டில் பிராம்மணனுடைய மனைவி நடுக்கங் கொண்டவளாய், தன் கணவனுடைய ரத்தத்தை அலம்பி, தேர்தல் கூறி, காலில் புண்பட்ட விடத்தைத் துணியால் கட்டினாள். நாளுக்கு நாள் சிகித்ஸை செய்து வரப்பட்டும் அப்புண் ஆறுமலிருந்தது மல்லாமல், புரையும் ஓடிவிட்டது. அப்புரையோடிய புண்ணினால் துன்புற்று, தரித்திரனாகி, சாகும் தறுவாயிலிருந்த அந்த பிராம்மணனிடம் நண்பனொருவன் வந்து ரஹஸ்யமாய்த் தெரிவித்தான்: "எனக்கு யக்ஞதத்தன் என்ற ஸகாவொருவனிருந்தான்; அவன் வெகுகாலம் ஹீனஸ்திதியிலிருந்து கடைசியில் ஒரு பிசாசத்தை வசம் செய்து, அதன் மூலம் செல்வத்தையடைந்து சுகித்திருந்தான். அந்த பிசாச வசீகரணத்தை அவன் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான்; தோழா! நீயும் அந்த பிசாசத்தை வசப்படுத்து; பிசாசம் உன் காயத்தை ஆற்றி விடும்". இப்படித் தெரிவித்து விட்டு, மந்திரத்தையும் சொல்லி, பிசாசத்தை வசப்படுத்த வேண்டி அவன் அனுஷ்டிக்க வேண்டிய முறையையும் பின்வருமாறு சொல்லிக் கொடுத்தான்: "கடைசி யாமத்தில் எழுந்திருந்து, தலை மயிரை அவிழ்த்து விட்டுக் கொண்டு,

உடையின்றி, வாயைக் கொப்பளிக்காமலேயே, இரண்டு கைகளிலும் அடங்கிய வரையில் அரிசியை எடுத்துக் கொண்டு மந்திரத்தை ஜபித்துக் கொண்டு, நாற்சந்திக்குப் போ; அங்கு அவ்விரண்டு பிடி அரிசியையும் வைத்து விட்டு வாய் பேசாமல் திரும்பி வந்து விடு; திரும்பி மட்டும் பார்த்து விடாதே. இப்படிப் பிசாசம் தானாய் உனக்குத் தென்படும்வரையில் செய்து வா. 'உன் நோயை நான் தீர்த்து வைக்கிறேன்' என்று பிசாசம் தானாய்ச்சொல்லும். அப்படி அது சொன்னதும் 'ஸரி' என்று அப்பிசாசத்தை ஏற்றுக்கொள்; அது உன் நோயைத் தீர்த்து விடும்.'' நண்பனால் இப்படிச் சொல்லப்பட்ட பிராம்மணன் அப்படியே செய்தான். பிசாசம் வசமாயிற்று. ஹிமயமலையிலிருந்து சிறந்த பச்சிலைகளைக் கொண்டுவந்து பிசாசம் பிராம்மணனுடைய புண்ணை ஆற்றிற்று. பிராம்மணனுக்கு மிகவும் ஸந்தோஷம். ஆனால் அவனைப்பிடித்திருந்த அப்பிசாசம் ''மேலும் ஒரு புண்ணை எனக்குக் கொடு, அதையும் தான் ஆற்றிவைக்கிறேன்! இல்லையானால் உனக்கு ஏதாவது தீங்கை விளைவிப்பேன், உன்னைக் கொன்றாலும் கொல்லுவேன்'' என்று சொல்லிற்று. இதைக் கேட்டு பயந்து போன பிராம்மணன் தற்போது தப்பிப்பதற்காக ''ஏழு நாட்களில் மற்றொரு புண்ணைக் கொடுக்கிறேன்'' என்று சொல்லி விட்டான். பிசாசம் அவனை விட்டது. பிராம்மணன் தான் உயிர் தப்புவதில் நம்பிக்கை யற்றுப் போனான்.''

இப்படிச் சொல்லிக் கொண்டு வந்த களிங்கஸேனை விகாரமானதைச் சொல்ல லஜ்ஜைப்பட்டவளாய் கதையை மத்தியில் நிறுத்தி, மறுபடியும் ஸோமப்பிரபையிடம் பின் வருமாறு சொன்னாள்:

''பிராம்மணனுக்கு மறுபுண் ஏற்படவில்லை; மிகவும் துன்புற்றிருந்தான்; அந்நிலையில் அவனைப் பார்த்து, அவனுடைய மகள், ஸாமர்த்ய சாலி, கணவனை யிழந்தவள், விஷயமென்னவென்று கேட்டுக்கொண்டு ''நான் அப்பிசாசத்தை ஏமாற்றிவிடுகிறேன்; நீ அதனிடம் போய் 'என் பெண்ணிற்கு புறைப்புண் ஏற்பட்டிருக்கிறது; அதை நீ ஸ்வஸ்தப்படுத்து' என்று சொல்லு'' என்று தெரிவித்தாள். ஸந்தோஷப்பட்டவனாய் பிராம்மணன், பிசாசத்திடம் சொல்லி தன் மகளிடம் அப்பிசாசத்தை அழைத்துவந்தான்.

* * * *

புத்திகெட்ட பிசாசம் அவ்விடம் விட்டு ஓடி மறைந்துபோயிற்று. இப்படி பிசாசத்தை ஏமாற்றி தன் தகப்பனை மகள் காப்பாற்ற, பிராம்மணனும் நோயிலிருந்து கரையேறி சுகமாயிருந்தான்.

பிசாசங்கள் இப்படித்தானிருக்கும்; இது போலவேதான் இளம் ராஜகுமாரரும். அவர் நமக்குக் கிடைத்தாலும் அநர்த்தமே; நம் புத்தியைக் கொண்டுதான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நற்குலத்தில் தோன்றிய ராஜகுமாரிகள் இப்படி இருந்ததாக ஓரிடத்திலும் கேள்வியில்லை. ஆகையால் நீ என்னுடன் அடைந்த சேர்க்கையைத் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது.''

இப்படி களிங்கஸேனையிடமிருந்து கதையின் போக்கைக்கேட்ட ஸோமப்பிரபை வினோதத்தையும் விந்தையும், களிப்பையும், திருப்தியையும் அடைந்தாள். ''இதோ, இங்கிருந்து அறுபது யோஜனை இருக்கிறது என் இருப்பிடம்; பகலும் கழிந்து விட்டது; வெகு நேரம் நான் தங்கிவிட்டேன்; போய் வருகிறேன்'' என்றாள் ஸோமப்பிரபை. அதன்மேல், சூரியன் மெள்ள அஸ்தகிரியின் உச்சியை யடைய, 'மறுபடியும் தான் வரவேண்டும்' என்ற ஆசை கொண்டிருக்கும் களிங்கஸேனையிடம் விடைபெற்றுக் கொண்டு, (பார்ப்பவருக்கு) ஒரு க்ஷணம் வியப்பளிக்குமாறு வானிலே பாய்ந்து, வேகமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள் ஸோமப்பிரபை. அவள் வானவழியாய் சென்ற விந்தையைக் கண்டு விட்டு, பற்பல எண்ணங்களுடன், தன் அரண்மனைக்குள் நுழைந்து களிங்கஸேனை யோஜிக்கலானாள்:

''எனக்குயிர்த் தோழியாய் வந்த இவள் ஸித்தஸ்த்ரீயோ, அப்ஸரஸோ, வித்யாதரஸ்த்ரீயோ நான் அறியேன்; ஏதோ தேவஸ்த்ரீ தான் என்பது மட்டும் உண்மை; ஏனெனில் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறாள். தேவஸ்த்ரீகள்

பெரும் ஸ்நேகத்தினால் இழுக்கப்பட்டு மானிடரோடு சேருவதுண்டு. அருந்ததி பிருதுமஹாராஜனின் பெண்ணுடன் நட்புக் கொள்ளவில்லையா? அவ்வருந்ததியின் அன்பைக்கொண்டு பிருது ஸ்வர்கத்திலிருந்து பூலோகத்திற்குக் காமதேனுவைக் கொண்டுவரவில்லையா? அச்சுரபியின் பாலைப் பருகி, ப்ரஷ்டனாய் போயிருந்தும் பிருது மறுபடியும் தேவலோகத்தையடையவில்லையா? அது முதற்கொண்டு பூலோகத்தில் பசுக்கள் நேர்மையுடன் உண்டாகவில்லையா? ஆகையால் நான் பாக்கியசாலிதான்; ஏதோ நன்மையேற்படவே இந்த தேவஸ்த்ரீ எனக்குத் தோழியாய் வாய்த்திருக்கிறாள். நாளைக்காலை அவள் வந்ததும் அவளுடைய குலம் பெயர் முதலியவற்றை நன்றாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

இப்படிப் பலவற்றை மனதில் யோஜித்துக் கொண்டு பூலோகத்தில், களிங்கஸேனை தன் அரண்மனையில், இரவைக் கழித்தாள். தேவலோகத்தில் தன் இருப்பிடத்தில் ஸோமப்பிரபை மறுபடியும் களிங்கஸேனையைக் காண ஏங்கினவளாய் இரவைக் கழித்தனள்.

இரண்டாம் அலை முற்றிற்று.

பெண்டிர் பகுதி.

ஸ்ரீ

"வீதஹவ்யன்."

சிருஷ்டிக்குப் பிறகு பிரம்மதேவர் உலகத்திலுள்ள அழகையெல்லாம் ஒரு புதுக்கற்பனையில் காண ஆசைகொண்டவராய், பூவின் மென்மையையும், மயிலின் சாயலையும் மானின் நோக்கையும், பிடியின் நடையையும் ஒருங்கே திரட்டிப் பெண் என்ற விசித்திர சிருஷ்டியைச் செய்தார். அவள் பிதாமகரை வலம் வர, நாற்புறமும் நான்முகங்கள் தோன்றியவாம் பிதாமகருக்கு. பின் விஷ்ணு மார்பிலும், சிவன் அங்கத்திலும் இவளைக் கொண்டனர். இவளது நிழலிலிருந்தும், பிம்பத்திலிருந்தும் தோன்றினர் அப்ஸரஸுகளும், நாககன்னிகைகளும்.

தூய்மையை இவளுக்குத் தந்த ஸோம தேவன் 'குதிரையின் முகமும், பசுவின் புறமும், விப்ரர்களது பாதங்களும் தூயனவாம்; ஸர்வாங்க ஸுந்தரி! ஸர்வ அங்கங்களிலும் நீ தூயவளே' என்றான்.

கந்தர்வன் தனது திவ்யசாரீரத்தை இவளுக்குத் தந்தான். அக்கினிதேவன் கற்பை ஈந்தான்; இந்திரன் நான்கு யௌவனங்களை வழங்கினான். இவளது பாதம் பட்டதால் குதூஹலித்த விருக்ஷங்கள் புஷ்பங்களை இவள் மேல் சொரிந்தன. இவளது பற்களைக் கண்ட முத்தும், இதழைக் கண்ட பவளமும் நாணிக் கடலில் ஒளித்தன. மாணிக்கமும், மரகதமும், இவளைச் சேர்ந்து அழகு பெற்றன; தாமரை இவள் தாளைத் தாங்கியது.

இவளே வால்மீகி பகவானது ஸீதையானாள். இவளே வியாஸ பகவானது தமயந்தியும், ஸாவித்ரியும், பாஞ்சாலியும் ஆனாள். காளிதாஸரது சகுந்தலையும், மாளவிகையும் இவளே. இவள் காவிய இதிஹாஸங்களுக்கு ஜீவன் ஆனதன்றியும், மஹாசைத்திரிகர்கள் இவளது உருவத்தின் ரேகைகளை அனுகாரம் செய்தனர்; மஹாசிற்பிகள் இவள் உருவத்தை அனுகரித்தனர். மஹாமர்த்தகரான பரதமுனிவரும் இவளது பாவ ஹாவ விலாஸங்களையும், அழகிய உடற் சரிவுகளையும் கதிகளையும் கொண்டு, நாட்டியம் என்ற விசித்திர கலையைத் தோற்றுவித்தார்.

ஸ்த்ரீயே ஸ்ரீ.

இவள் எங்கு பூஜிக்கப்படுகிறாளோ, அங்கே தான் வித்தை மலர்ந்து பரிமளிப்பது; ஐசுவரியம் பெருகுவது. எங்கு இவள் அவமதிக்கப்படுகிறாளோ அங்கு நோயும் நல்குரவும் என்றும் உறைவன.

*புராதன அங்கரசனைகள்.

கா. வே. ராமசந்திரன்.

‘நரையால் வெளுத்த மயிரையுடைய ஒருவனுக்கு மாலை ஆபரணங்களாலும் சந்தனப் பூச்சாலும் ஸுகமென்ன? ஆகையால் நரைத்த மயிரைக் கருப்பாக்கிக் கொள்ளவேண்டும்’ என்று சொல்லித் தற்காலத்தில் hair dye எனப்படும் மயிர்ச் சாயத்தைப் போல் பயன்படும் களிம்பு ஒன்றின் முறையை விவரிக்கிறார். 1500 வருஷங்களுக்கு முன் இருந்த வராஹமிஹிரர். புருஷர்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் பிரயத்தனங்களில், பல கலைகளுக்கும் காரணமாயிருப்பது மயிர் ஒன்றே, இந்த காரணத்தால் புருஷர்களது அலங்காரக் கிரியைகளுக்குள் முக்யமானது க்ஷௌரக்கிரியையே. வென்னீர் ஸஹிதமான க்ஷௌரத்தின் ஸௌக்யம், வேதகாலத்திலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது ; ஒரு மஹா புருஷன் யானையையும் குதிரையையும் கொடுத்துப் பிரதியாக தாடியையும் மீசையையும் வாங்கினானாம். தாடியில் எத்தனை வகைகள்! ஆட்டுத் தாடி, இரண்டாக வகிர்ந்து வாரப்பட்ட உதயபூர் தாடி, பின்னி முடியப்பட்ட கோணங்கி தாடி, தீக்ஷாகாலத்தில் வளரும் சிறு தாடி, நரையும் சாயமும் சேர்ந்து விசித்திர வர்ணங்கள் படைத்த தாடி முதலியன. மீசையில் எவ்வளவு வகைகள்! நறுக்கு மீசை, ஊர்த்வகதியாகவுள்ள ஸாண்டோ மீசை, பிசினால் ஆணியைப்போல நீட்டப்பட்ட கம்பி மீசை, எவ்வளவு முறுக்கினாலும் கீழேயே படரும் பயில்வான் மீசை, பெருச்சாளி மீசை முதலியன. ஆனால் நரை தோன்ற ஆரம்பித்தால், இந்த விசித்திர மீசைகளை எல்லாம், வெகு வேகமாய்ப் புருஷர்கள் (தமது பாரியைகளுக்கும் தமது அடையாளம் தெரியாதபடி) எடுத்து விடுகின்றனர். இப்படியே கிருதாக்களிலும் பல வகைகளுண்டு. குடுமி வகைகளான உச்சிக் குடுமி அப்பளக் குடுமி, கன்றுக் குடுமி, முதலியவைகளும், காக்கை இறகு போலவும், ப போலவும், ஜோடுதவலை போலவும், ஈயச்சொம்பு போலவும் உள்ள அலங்காரங்களும், இவைகளின் மிச்ரத்தால் ஏற்படும் அப்பள ஸஹிதமான உச்சிக் குடுமி, கன்றுக் குடுமி ஸஹிதமான ஜோடுதவலை உச்சிக் குடுமி, முதலியவைகளும், க்ஷௌரம் செய்பவர்களது கற்பனா சித்திரங்களே. மல் வந்ததற்குப் பிறகு சாய வேஷ்டியும், அதை விட நாகரீகமான பால் சாய வேஷ்டியும் மறைந்தது போல, ‘கிராப்’ ஏற்பட்ட பிறகு, இப்புராதன தலையலங்காரங்களெல்லாம் மறைந்து விட்டன.

* இது 25-12-39 அன்று சென்னை அகில இந்திய ரேடியோவில் பேசப்பட்டு அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

பெண்மணிகளது கேசரசனை:—பெண்மணிகள் கூந்தலை எவ்வளவு விதமாக அலங்கரித்தார்கள் என்பது அஜந்தா முதலிய புராதனச் சித்திரங்களிலிருந்தும், அமராவதி முதலிய புராதனச் சிற்பங்களிலிருந்தும் அறியத்தக்கது. இவ்வகைகளுள் இப்போது மிஞ்சியுள்ளன மலையாளத்திலும், பர்மாவிலும், இலங்கையிலும் காணப்படும் கொண்டையும், தமிழ் நாட்டுச் சொருக்கும், பின்னல், எடுத்துக்கட்டு முதலியவைகளுமே. 'பிச்சோடா' என்பது தற்காலத்தில் புதிதாய்ப் பிரசாரத்துக்குக் கொண்டுவரப்பட்டதொரு புராதன ரசனையே. கூந்தலைப் புஷ்பசரங்களாலும், விடுபூக்களாலும், கத்தரித்த பூக்களாலும், அரும்புகளாலும் அலங்கரிப்பதும் உண்டு. பெண்மணிகள் கூந்தலைக் காப்பதற்காக, யானை தந்தம், அரக்கு முதலிய பொருள்களைக் கொண்டும், பல மூலிகைகளைக் கொண்டும் செய்யப்பட்ட தைலபாகங்களைத் தேய்த்து வந்தனர். பெண்மணிகள் சம்பககந்தி போன்ற ஸுகந்த தைலங்கள் அன்றியும், கேசபடவாஸம் என்ற மயிர்ச்சாந்து ஒன்றை ஸ்னானசமயத்தில் உபயோகித்துப் பிறகு கூந்தலைக் கேசதூபத்தால் உலர்த்தி, கடைசியாகக் கஸ்தூரிக் கூட்டைத் தலைக்கிட்டு வந்தனர். இதுவே சிலப்பதிகாரத்தில்,

> பத்துத்துவரினும் ஐந்து விரையினும்
> முப்பத்திருவகை ஓமாலிகையினும்
> ஊறிய நன்னீர் உரைத்த நெய்வாசம்
> நாறிருங்கூந்தல் நலம்பெற வாட்டி
> புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
> வகைதொறு மான்மதக் கொழுஞ்சேறூட்டி

என்று மாதவி செய்த கேசஸம்ஸ்காரம் வர்ணிக்கப்பட்டுள்ளது.

கேசபூஷணங்கள் (தலைக்கோலம்) ஆன சுட்டி, பட்டம், சூரியப்பிரபை சந்திரப்பிரபை, ராகொடி, நாகர், திருகுபில்லை, உச்சிப்பூ, ஜடைநாகம், சௌரிக்கொட்டை, ஜடைகுச்சு மாட்டல் முதலிய நகைகளெல்லாம் புராதன நகைகளே. இன்னும் சிகாபாசம் என்றும், சிகாஜாலம் என்றும், சிகாகண்டபத்ரம் என்றும் சூடாமணி என்றும், மகரிகை என்றும் பல பல கேச ஆபரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஆபரணங்கள் எல்லாம் சிற்பத்துள் அடங்குவன ஆகையால், அவைகளை இங்கு விவரிப்பது உசிதமன்று.

அங்கராகங்கள்:—தேகத்துக்கு நிறமும் சோபையும் தந்து, சர்மத்தைக் காப்பாற்றும் ஔஷதங்களே அங்கராகங்களாம். இவைகளுள் தற்காலத்தில் உபயோகப்படும் ஸோப்புக்குப் பிரதிநிதி ஸ்நானீய சூர்ணவாஸம் எனப்பட்ட ஸுகந்தப் பொடிவகைகள். தற்காலத்தில் சுருக்கங்களைத் தடுப்பதற்கும், மினுமினுப்பையும் யௌவனத்தையும் பெறுவதற்கும் உபயோகிக்கப்படும் massage oils என்ற தைலங்களுக்குப்பிரதியாக கஸ்தூரி முதலிய பொருள்கள் சேர்ந்த தைலங்கள் உபயோகிக்கப்பட்டன. தைலஸ்நானத்தை முதலில் கண்டுபிடித்தவர் புராதன இந்தியர்களே. தற்காலத்தில் முகத்துக்கு மாத்திரம் உபயோகிக்கப்படும், cream, Snow வுக்குப் பிரதியாக வதனவாஸம் எனப்பட்ட லேபவகைகள் (பூச்சுகள்) உபயோகிக்கப்பட்டன. இவற்றுள் குங்குமாதி லேபம் என்பது cold cream-க்குச் சமானமானது. தற்காலத்தில் வேர்வை நாற்றத்தைப் பரிஹரிக்கும் perspiration deodorants என்ற மருந்துகளின் ஸ்தானத்தில் கக்ஷவாஸம் என்ற ஸுகந்தக்கூட்டு உபயோகிக்கப்பட்டது. வாய் நாற்றத்தைப் போக்குவது தாம்பூலமும், பூகவாஸங்களும். குடிக்கும் ஜலத்துக்கு பூவிதழ்கள், ஏலம்,இலாமிச்சை வேர் முதலியவற்றால் வாசனையூட்டியே பூர்வீகர்கள் பருகி வந்தார்கள். இந்த ஸுகந்த நீரிலே பல் தேய்க்கும் குச்சிகளை ஊற வைத்து உபயோகித்து வந்தனர். Bath salt என்பதற்குப் பிரதி, பரிமளத்திரவியங்களை ஜலத்தோடு சேர்த்துக் காய்ச்சி உபயோகித்தனர். இத்திரவியங்களுக்குப் பெயர் ஜலவாஸம். புகையினால் வீட்டைச் சுத்தப்படுத்தும் தூபம் கிருஹவாஸம். தேவ ஆராதனைக்குத் தீபவர்த்தியும், தூபவர்த்தியும். அக்காலத்து அரசர்களும், பிரபுக்களும், பரிமளத்திரவியங்களால் தயாராக்கப்பட்ட, சுருட்டை போஜனத்துக்குப் பிறகு பிடித்து வந்ததாகப் பழைய நூல்களிலிருந்து தெரியவருகிறது.

அங்க அலங்காரங்களாவன: நெற்றிக்கு ஜவ்வாது அல்லது கஸ்தூரி திலகம், சாந்து, குங்குமம் முதலியன. புருவத்துக்கு அரகஜா; கண்ணுக்கு மை; விரல்களுக்கு மருதாணி; வாய்க்கு வெற்றிலை; உதட்டுக்கு மதூச்சிஷ்டம் என்ற தேன் மெழுகு; பாதத்துக்கு அலக்தகம் எனப்பட்ட

செம்பஞ்சக்குழம்பு. இவ்வலங்காரங்களெல்லாம், ஆண் பெண் இருவருக்கும் சமானமே.

ஆபரணங்கள்: ஓலை, குண்டலம், பூவின் அனுகாரமாகச் செய்யப்பட்ட ஜிமிக்கி முதலிய கர்ண பூஷணங்களும், முத்து மாலை, ரத்ன மாலை சங்கிலி, சரப்பளி முதலிய கண்ட பூஷணங்களும், மேகலை, ஒட்டியாணம், அரைஞாண் முதலிய கடிபூஷணங்களும், புஜங்களை அலங்கரித்த கேயூரம், அங்கதம் முதலியவைகளும், கடகம், நாகஒற்று, வங்கி, பாஜிபந்து, முதலியவைகளும், சங்கு, தந்தம், பவளம், முத்து, ரத்தினம், இவற்றால் ஆன வளைகளும் வடிகா முதலிய மோதிரங்களும், நூபுரம், பாடகம் முதலிய பாதசர கொலுசு வகைகளும், புராதன ஆபரணங்களாம். இப்புராதன ஆபரணங்களில், மூக்குத்தி, புல்லாக்கு நத்து முதலிய மூக்காபரணங்களைக் காணோம், இந்த நகைகள், முகமதியரிடமிருந்து பிற்காலங்களில் ஸ்வீகரிக்கப்பட்டன போலும்.

புருஷர் ஆபரணங்களும் இவைகளைப் போன்றனவே. புருஷனும் ஸ்த்ரீயும் ஒரே மூர்த்தியாக எண்ணப்பட்டதால், மை முதல், நலங்குவரை எல்லாச் சிங்காரங்களும் புருஷர்களுக்கும் உண்டு. இந்நாள்வரை பூணூல் போடும் சமயத்தில், ஆண் பிள்ளைகளுக்கு தலைவாரிப்பின்னி, கழுத்தில் காசுமாலை, காரை முதலிய அணிகளைப் பூட்டுவதைக் காணலாம். இப்படி அலங்கரித்துக் கொள்ளாமல் யக்ஞோபவீதம் தரித்தவர் ஒருவருமில்லை என்று சொல்லிவிடலாம். புருஷர் நகைகளுள் கடுக்கன், அரைஞாண் இரண்டு மட்டுமே இப்போது காணப்படுவன. கடுக்கன், அரைஞாண் காரணமாக மாமனார்களுக்கும் மாப்பிள்ளைகளுக்கும் நடந்த மஹாயுத்தங்கள் எத்தனை!

வஸ்திரம்: பஞ்சகச்சம் எனப்பட்ட புருஷாது உடை வகையும், விதவிதமாகப் பெண் மணிகள் புடைவை அணியும் வகைகளும், புராதனகாலத்துச் சிற்பிகளது கற்பனைகளே. இக்கற்பனைகளினாலேயே வெண்பட்டுடுத்த பெண் ஹம்ஸத்தை ஒத்தும், நீலப்புடைவைக் காரி மயிலை ஒத்தும், பச்சைப் புடைவைக் காரி கிளியை ஒத்தும் விளங்கினர். நமது பெண்மணிகளது புடைவைகளைப் புகழாத ஐரோப்பியர் இல்லை. ஸூர்ய வெளிச்சம் அபரிமிதமாயுள்ள நமது தேசத்தில், புடைவைகளுக்கு முக்கிய லக்ஷணம் வர்ண வைசித்திரியமே. இருளடைந்த ஐரோப்பிய தேசங்களில் விளங்கும் சாம்பல் வர்ணத்துக்கு இங்கு பிராதான்யம் கிடையாது. புடைவைகளின் உடலில் அழகிய கோடுகளும் சொக்கட்டான்களும், சரிகைபால் சித்திரித்த ஓரங்களும் தலைப்புகளும், வெகுவாய் மாறுமலே இன்றளவும் உள்ளன, இதுபோலவே புருஷர் வேஷ்டி ஓரங்களிலும், மாங்காய், ருத்திராக்ஷம் முதலியன செய்யப்பட்டன. காதம்பரியில் 'பாம்பின் சட்டை போல வெளுப்பாயும் மெல்லியதாயும், மூலைகளில் இரண்டு ஹம்ஸங்கள் கோரோசனையால் சித்திரிக்கப்பட்டிருந்த பட்டு வஸ்திரத்தை அரசன் உடுத்தான்' என்று காணப்படுகிறது.

ஸுகந்தங்கள்:—கந்த சாஸ்திரம் முதல் உற்பத்தியானது பாரத பூமியிலே. ஐரோப்பியரது கந்தயுக்திக்கு மூலமும் நமது கந்தயுக்தியே. 'சிப்ரா' என்ற புராதன இந்திய கந்தமே 'Chypre' என்று இப்போது ஐரோப்பாவில் பிரஸித்தமாயுள்ளது. Violet என்ற புஷ்ப கந்தத்துக்கு மூலம், நமது கிச்சிலிக் கிழங்கு. கஸ்தூரியைப் போன்ற மணமுள்ளதொரு ஐரோப்பியப் புனுகுக்கு 'Castor' என்று பெயர். ஜீவ கந்தங்கள் எவை, உப கந்தங்கள் எவை கந்தத்தைப் பெருக்கும் பொருள்கள் எவை, மனோஹரமாகப் பரிமளத்தை மாற்றும் பொருள்கள் எவை என்ற ரஹஸ்யங்களையும், கந்த வஸ்துக்களின் ஸாரமான தைலங்களை குழிப்புடம் முதலிய முறைகளால் இறக்குவதையும் முதலில் கண்டுபிடித்தவர் புராதன இந்தியரே. கந்த வித்தையானது கான வித்தையை நிகர்த்தது. ஒவ்வொரு கந்தமும் ஒரு ஸ்வரமாகும். ஸ்வரங்களைச் சேர்ப்பதால் ராகம் ஸித்திப்பது போல, கந்த ஸ்வரங்களைச் சேர்ப்பதால், ராகத்தை ஒத்த ஒரு கந்த விசேஷத்தைப் பெறலாம். இதற்கு ஸ்வரஞானம் ராகஞானம் போல, மோப்பத்தாலே அறியும் கந்த ஞானம் அவசியம். இந்த அறிவால் கூட்டாயுள்ள கந்தத்தைப் பிரிக்கவும், பிரிந்துள்ளதைச் சேர்க்கவும் முடியும். இந்த ஞானத்தைக் கொண்டே, புராதனர்கள்,

சம்பகத்தின் மணத்தை, கிருத்திரிமமாக அனுகரித்து, பிறகு அதை மகிழின் மணமாக்கி, பிறகு அதை உத்பலகந்தமாக்கி, மறுபடி சம்பகமாக்கியுள்ளார்கள். இத்தகைய அனுகாரத்தை ஐரோப்பியர் ரஸாயன சாஸ்திரப் பயிற்சியால் தற்காலத்தில் சாதித்துள்ளார்கள்.

முன் கூறிய அங்கராசனைகளை எல்லாம், மஹாகவி காளிதாஸர் வர்ணித்துள்ள பார்வதீ பரிணயத்தில் பூர்ணமாய்க் காணலாம். அது பின்வருவாறு :—"அச்சுப முகூர்த்தம் ஆரம்பித்தவுடன், பதியுடையவரும் புத்திரவதிகளுமான பந்து ஜனங்கள், தங்களை விசித்திரமாக அலங்கரித்துக்கொண்டு வந்தார்கள். பார்வதியும் தைலஸ்நானத்துக்காக கஸ்தூரி மணம் கமழும் பட்டை அரைக்கணிந்த காரணத்தால், அப்பட்டுக்கு அழகளித்தாள். பின் அப்பெண்கள் லோத்திர சூர்ணத்தினால், அங்கதைலத்தை நீக்கிச் சிறிது உலர்ந்த காலேயம் என்ற அங்கராகத்தைப் பூசி, ஸ்நானத்துக்கேற்ற ஆடையைச் சாத்தி, ஸ்நான மண்டபத்துக்கு அவளை அழைத்துச் சென்றனர். முத்துக்கள் பதித்த வைடூரிய சிலாதலத்தில் அவளை அமர்த்தி, மங்கள வாத்தியங்கள் முழங்க, பொற்குடங்களிலுள்ள ஜலத்தினால் அவளை நீராட்டினார்கள். பதிகாரணமான மங்கள ஸ்நானத்தால் நிர்மலமான அங்கங்களுடையவளான பார்வதி வெண்பட்டாடை அணிந்து, ஜலாபிஷேகத்தால் சுத்தமாய், மலர்ந்த காசபுஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்ட பூமியை ஒத்தாள். அங்கிருந்து, அவளை விதானத்தோடு கூடியதும், மணிக்கால்கள் நான்குடையதும், ஆஸனத்தோடு கூடியதும், மங்களகரமானதுமான வேதிமத்யத்துக்கு அழைத்துச் சென்றார்கள். கிழக்கு நோக்கி அவளை அமர்த்தி அப்பெண்டிர் அவளது ஸ்வபாவமான அழகால் கவரப்பட்டவர்களாய், அலங்கார ஸாமக்ரிகள் அருகிலிருந்தும், அவளை அலங்கரிக்காமல் சிறிது தயங்கினார்கள். பிறகு கேசதூபத்தின் உஷ்ணத்தால் உலர்ந்த அவள் கூந்தலை புஷ்பங்களுடனும், குடமல்லி சரத்துடனும் சேர்த்து அழகாகக் கொண்டையிட்டனர். பிறகு சுக்கிலாகுரு சேர்ந்த சந்தனப்பூச்சைப் பூசி, கோரோசனை கொண்டு சக்ரவாகங்களை அங்கங்களில் சித்திரித்ததால், அவள் சக்ரவாகங்களாலும் மணற்பாங்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட கங்கையையும் அழகினால் வென்றாள். மெல்லிய ரேகையால் பிரிக்கப்பட்டு, மதூச்சிஷ்டத்தால், சிவந்திருந்த அவளது கீழுதடு, தன் லாவண்யத்தின் பலப்ராப்தி சமீபித்துவிட்டதால், அழகாகத் துடித்தது. பிறகு அவள் காலுக்கு நலங்கிட்ட ஒரு பெண்மணி 'இக்காலினால், உன் பதியின் சிரத்திலுள்ள சந்திரகலையை உதைத்திடுவாய்' என்று பரிஹாஸமாக ஆசி கூற, பார்வதி புஷ்பசரத்தால், பதில் சொல்லாமல் அவளை மெல்ல அடித்தாள். அலங்காரம் செய்த பெண்கள், தாமரை இதழை ஒத்த பார்வதியின் கண்களுக்கு அழகூட்டுவதற்காக மை இடவில்லை; மை இடுவது மங்களகரமானது என்றே இட்டார்கள். கண்ணாடியில் தன் அழகைக்கண்ட பார்வதி, சிவனைக்காண ஆசை கொண்டாள். பெண்கள் வேஷத்துக்குப் பயன், புருஷன் பார்ப்பதல்லவா? பிறகு அவள் தாய், ஹரிதாரம், மனோசிலை முதலிய மங்கள திரவியங்களாலான திலகத்தை, தன் கண்ணீர் பார்வையை மறைக்க வெகு சிரமத்துடன் அவள் நெற்றியில் இட்டாள்.

(இவள் இப்படி இருக்க பகவான் எப்படித் தன்னை அலங்கரித்துக்கொண்டார்?) அவரது பஸ்மமே அங்கராகமாய்விட்டது; கபாலமே சிரோபூஷணமாய்விட்டது; யானைத்தோல், கோரோசனையால் சித்திரிக்கப்பட்ட பட்டு வஸ்திரமாய்விட்டது; நெற்றிக்கண்ணே திலகமாய்விட்டது; ஸர்ப்ப ராஜாக்கள் கங்கணங்களாயினர்; ஆனால் அவர்கள் தலையிலிருந்த ரத்தினங்கள் மட்டும் மாறவில்லை. பகலிலும் ஒளிவீசுவதும், நிஷ்களங்கமாயுள்ளதுமான சந்திரகலையை தரித்த இறைவனுக்குச் சூடாமணி ஏன்? இப்படி அணிகளைத் தானே சிருஷ்டித்து அணிந்த இறைவன், தன் பிம்பத்தை அருகிலிருந்த கணம் ஒன்று கொணர்ந்த கத்தியில் பார்த்துக் கொண்டார்."

பிறகு ஜகன்மாதாபிதாக்களான பார்வதீ, பரமேச்வரர்களின் திருமணம் நடந்தேறியது.

கீதப் பகுதி

சுவாதி திருநாள் மஹாராஜாவின் கிருதி விளக்கம்.

சிவபெருமான் தாண்டவம்.

(தமிழ் வித்துவான் R. முத்து அய்யர்.)

> " அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி
> எடுத்த கருமங்களாகா-தொடுத்த
> உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம்
> பருவத்தால், அன்றிப் பழா."

என்பது பெரியோர்கள் தம் அநுபவத்திற் கண்ட உண்மை எக்காரியத்திற்கும் தோற்றம், வளர்ச்சி, உயர் நிலை என்று இவற்றுக்குரிய காலமும் குறிப்பிட்ட பொழுதும் உண்டு. அவ்வக் காலங்களில் தக்க பெரியோர்கள் கடவுளருளால் தோன்றுவார்கள். அவ்வாறு தோன்றிய பெரியோர்களையே நாம் மகான்கள் என்று வணங்குகிறோம். அவர்களும் இளமை முதலேயே கல்வி கேள்விகளில் தேர்ந்து விடாமுயற்சியோடும் ஊக்கத்தோடும்

> "மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்
> துஞ்சார்,
> எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார் செவ்வி,
> அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்,
> கருமமே கண்ணாயினர்."

என்ற முறைப்படி அல்லும் பகலும் அதே நினைவாய் உழைத்துத் தாம் மேற்கொண்ட காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அக்காரியத்தை நன்கு நிறைவேற்றித் தமக்கும் பிறர்க்கும் பயன் படுமாறு ஈசுவரார்ப்பணம் செய்து விடுகிறார்கள். தமது முன்னோர்கள் கைம்மாறு கருதாமற் செய்து வந்த ஒவ்வொரு காரியமும் மேற் கூறிய முறைப்படியே உண்டான தென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அதற்குப் பதிலுபகாரஞ் செய்வதென்பது அவர்களை எப்பொழுதும் நினைத்துக் கொண்டு அவர்களுக்கு நமது அந்தரங்க அன்பைச் செலுத்தி வணங்குவதைத் தவிர வேறில்லை.

மேல் விவரித்த முறைப்படியே நம் நாட்டில் கலைகள் எல்லாம் தோன்றிப் பரந்து செழித்தன என்பது ஆராய்ந்து பார்ப்போர் அனைவரும் நன்கறிவார்கள். ஆகவே ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவருடைய அரும் பெரு முயற்சியால் ஒவ்வொரு கலையும்

தக்க காரணம் பற்றித் தோன்றிச் செழித்தது என்பது சரித்திர வாயிலாக நன்கறியலாம்.

அதுபோல் எங்கும் பரந்து விளங்கும் நாதஸ்வரூபமான ஸங்கீதக் கற்பக விருக்ஷமானது வேத காலத்தில் முளைத்து வேரூன்றி இதிகாச புராண காலங்களில் பல முனிவர்களாலும் பயிர் செய்து வளர்க்கப்பெற்று வந்தது. பிறகு சற்றேறக்குறைய கி. பி. 12வது நூற்றாண்டு வரையும் பல பெரியோர்கள் தாம் கண்ட இலக்கியங்களுக்கு இலக்கணங்கள் ஏற்படுத்தி அதை மரமாக்கினர். கி. பி- 17வது நூற்றாண்டில் நன்றாகப் பூத்துக் காய்க்கத் தொடங்கிற்று. அப்பால் 18வது நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 19வது நூற்றாண்டின் முற்பகுதி வரையுள்ள காலத்தில் அக்காய்கள் நன்றாக விளைந்து சுவையுடன் பழுத்துச் சிறந்த கனிகளாயின. அக்கனிகளையே இப்பொழுது நாம் அனைவரும் உட்கொண்டு சுவைத்து அநுபவித்து வருகிறோம்.

இக்காலத்தில் தான் சோழநாட்டில் தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் என்ற மூவரும், சேரநாடான திருவாங்கூரில் கர்ப்பஸ்ரீமான் சுவாதித் திருநாள் மகாராஜா அவர்களும் வாழ்ந்து ஸங்கீதக்கலையை உயர்நிலை பெறச் செய்தனர். அன்றித் தஞ்சையில் மஹாராஷ்டிர மன்னரான ஸரபோஜி மஹாராஜாவின் சமஸ்தானத்திலும் சுவாதித் திருநாள் மஹாராஜா அவர்களின் சமஸ்தானத்திலும் ஸங்கீத வித்வான்கள் பலர் ராஜ சபையை அலங்கரித்திருந்தனர். மஹாராஜாக்களும் ஸங்கீத வித்துவான்களுக்குத் தக்கவாறு பரிசளித்து பகுமானித்தனர்.

ஸங்கீதாபிவிருத்திக்கென்றே அவதாரம் செய்த இந்நான்கு மகா புருஷர்களும் பிறரும் தெய்வீக சக்தியாற் செய்த ஒப்புயர்வற்ற முயற்சியின் பயனாகத் தோன்றியதும் நாள் தோறும் புதுமணமும் புதுச்சுவையும் புத்துணர்ச்சியும் கொண்ட கிருதிகளின் மாட்சி நன்கறிந்ததே. இவை, கானஞ் செய்வோர் கேட்போர் என்றவர்க்கு நாதாமுத ஸாகரமாகவும், ஆராய்ந்து புதியன இயற்றுவார்க்கு நாதச்சுரங்கங்களாகவும் இருக்கின்றன என்று சொன்னால் அது ஒரு சிறிதும் உயர்வு நவிற்சி இல்லை.

சுவாதித் திருநாள் மஹாராஜா அவர்கள் ஸங்கீத லோகத்திற்கு உதவியிருக்கும் கிருதிகளைப் பற்றிய விவரங்களை அனைவரும் அறிந்து ஆனந்திக்க வேண்டுமென்ற விருப்பமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மஹாராஜா அவர்கள் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், ஹிந்துஸ்தானி, மஹாராஷ்டிரம், மலையாளமும் ஸமஸ்க்ருதமும் கலந்த மணிப்பிரவாளம் என்னும் பாஷைகளில் ஸாஹித்யங்கள் இயற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு பாஷையிலும் ராக தாள பாவங்கள் பல முறைகளில் சீர் பெற அமைத்துச் சிவபரமாகவும் விஷ்ணுபரமாகவும் பல ஸ்தல தெய்வங்களைக் குறித்தும் பாடிப் புகழ்ந்திருக்கிறார்கள். தவிரப் பொதுவான விஷயங்களைக் குறித்தும் பல ஸாஹித்தியங்களும் பிரபந்தங்களும் சரித்திரங்களும் அமைத்திருக்கின்றனர்; ஒவ்வொரு ஸாஹித்தியத்திலும் தனது வழிபடு கடவுளும் குல தெய்வமுமாகிய பத்மநாப முத்திரை அமைந்திருக்கும் சாதுரியம் சாதாரணமல்ல. சுருங்கக் கூறுமிடத்து, மஹாராஜா அவர்கள் தமது ஸாஹித்யங்களை ஸ்ரீபத்மநாப சுவாமிக்கு ஸமர்ப்பணம் செய்தனர் என்றே சொல்ல வேண்டும்.

சிவபரமான கிருதிகள் பலவற்றுள் "ந்ருத்யதி ந்ருத்யதி ஸாம்பசிவோ, த்ருக்தோம், த்ருக்தோம், த்ருக்தோம், த்ருக்தோம் இதி" என்று தொடங்கும் பல்லவியுடைய சங்கராபரண ராகம் ஆதி தாள கீர்த்தனம் ஒன்றாகும். இக் கீர்த்தனத்தில் சிவ பெருமான் ஆனந்த நர்த்தனஞ் செய்யும் வரலாறு விவரிக்கப் பெற்றிருக்கிறது.

இக் கீர்த்தனத்தின் ராக தாள பாவம்' ஸாஹித்யப் பொருட் செறிவு, நடை, பத கர்ப்பம், ரசனை முதலியவை ஒன்றோடொன்று போட்டியிடுவது போல் ஆரோஹணக் கிரமத்திலேயே உயர்ந்தோங்குகின்றன என்பதை ஒரு தடவை பாடக் கேட்ட

பொழுதே அறிஞர்கள் நன்குணர்வார்கள் என்பது உண்மை. ஆனால் ஸாஹித்யம் ஸரளமான திராக்ஷா பாகமான ஸம்ஸ்க்ருத நடையில் அமைந்திருக்கிறது. பொருள் தெரியாதவருங்கூட ராக தாள அமைப்புடன் இக் கீர்த்தனம் பாடக் கேட்பார்களானால் நர்த்தனம் செய்வதில் தாங்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள் என்பதைப் பிரத்யக்ஷப் பிரமாணத்தில் தெரிந்து கொள்வார்கள். இந்த நர்த்தனக் கீர்த்தனத்தின் பொருளை ஒன்று சேர்த்துத் தொகுத்தால் அடியில் வருமாறு பொருள்படுவதாகும், அதாவது:

"எப்பொழுதும் தூய சரீரமுடையவரும் திருவடி பணியும் அடியார்க்குக் கருத்துடன் நலஞ் செய்பவரும், பாபமற்ற முனிவர்கள் வணங்கும் பாதங்களுடையவரும், பத்மனை சகோதரியின் பர்த்தாவும் திக்கற்றவர்களின் தீமைகளைப் போக்குவதில் விருப்பமுடையவரும், இகழ்தலற்ற மகா பாக்கியத்தைக் கொடுக்கும் குணம் கொண்டவருமான கிரீசனாகிய சிவபெருமான் தினந்தோறும் மாலைக் காலத்தில் (பிரதோஷவேளையில்) "த்ருக் தோம், த்ருக்தோம், த்ருக்தோம், த்ருக் தோம்" என்று அழகாக நர்த்தனம் செய்கிறார்."

"அவரது பாதங்களில் விளங்கும் ரத்தினச்சிலம்புகளிலிருந்து கணகண என்ற சப்தம் உண்டாகிறது. அந்த மங்களகரமான நாதத்தைக்கேட்டுத் தானே பிரம்மானந்தப்படுகிறார். தேவேந்திரன் வெகு ஆதரவாகப் புல்லாங்குழல் வாசிக்கிறான். அச்சிறந்த மனோகரமான வேணுநாதத்தைக் கேட்டுச் சிறிது சிரக்கம்பம் செய்கிறார் பிரபு. நந்திகேசுவரர் டுமு, டுமு என்ற ஸுநாதத்துடன் நன்றாக டமருகம் வாசிக்கிறார். அந்த மெச்சத்தகுந்த வாசிப்பில் ஈடுபட்ட தேவரம்பையரும் அழகாக வெண்சாமரம் வீசுகின்றனர். இவ்வித நாதங்களைக் காதாரக் கேட்டும் அழகைக் கண்ணாரக் கண்டும் தானே ஆனந்தித்த சந்திரகலாதரனான சிவபெருமான்! 'என்ன அற்புதம்!' என்று மேன்மேலும் களித்து நர்த்தனம் செய்கிறார்" என்பதாகும்.

இக்கிருதியில் மஹாராஜா அவர்கள் சிவபெருமானது வெண்ணீறு பூசிய திருமேனித் தோற்றத்திலும் அடியார்களை ஆதரித்துக் காப்பாற்றும் அருமையான குணாதிசயத்திலும் ஈடுபட்டு ஆனந்திக்கிறார். தவிர, பகவானுடைய நர்த்தனத்திற்கு இந்திரன் பக்கவாத்தியம் வாசிப்பதாகவும் நந்திகேசுவரர் மிருதங்கம் வாசிப்பதாகவும் கூறியிருக்கிறாரேயன்றிக் கானம் செய்பவரைக் குறிப்பிடவில்லை. ஆதலால் ப்ரதோஷவேளையில் தினந்தோறும் நர்த்தனம் செய்வதை வாத்திய நர்த்தனமென்றே சொல்லலாம். ஏனைய பெரியோர்கள் பரமசிவனுடைய நர்த்தனத்திற்கு பிரம்மதேவன் தாளம் போடுவதாகவும் விஷ்ணு மத்தளம் வாசிப்பதாகவும் தும்புரு நாரதாதி முனிவர்கள் வீணை வாசித்துப் பாடுவதாகவும் வர்ணித்திருக்கிறார்கள். சிறப்பாக மஹாராஜா அவர்கள் இக் கீர்த்தனத்தை சங்கரனுக்கு ஆபரணமான சங்கராபரண ராகத்தில் அமைத்த மேன்மை நன்று போற்றத்தகுந்ததாகும்.

இது போலவே தீக்ஷிதர் அவர்கள் செய்த பஞ்சலிங்கக் கீர்த்தனத்தில் ஆகாச லிங்கத்தைப்பற்றியதாக 'ஆனந்த நடனப்ரகாசம்' என்ற பல்லவியுடைய கேதாரராகம் மிச்ர ஏக தாளத்தோடு கூடிய ஒரு கீர்த்தனம் உண்டு. அதில், பதஞ்சலி வியாக்கிரபாதர்களின் தரிசனத்திற்காகப் பகவான் தாண்டவமாடியதாகவும் அத்தாண்டவமானது பல விதக் கலைகள் உண்டாகக் காரணமாயிருந்ததென்றும் விவரித்திருக்கிறார். தவிர, முத்துத் தாண்டவரென்ற தமிழ் கீர்த்தனாசிரியர் சிவபெருமானுடைய தாண்டவத்தைக் குறித்துப் பலவாறு புகழ்ந்திருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அன்றி, ஸங்கீதக் கல்வி கேள்வியறிவு அநுபவம் முதலியவற்றில் தேர்ந்த வித்துவான் ஒருவர் கைதேர்ந்த பக்கமேளங்களுடன் கச்சேரி செய்யும்பொழுது பக்க மேளங்களின் ஆதாவையும் திறமையையும் கண்டு களித்துத் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தவும், பக்கமேளம் வாசிப்பவரை உற்சாகப் படுத்துவர் போல 'என்ன அதிசயம்!" என்று சிவபெருமான் சொல்வதாகக் கூறியிருக்கும் ஸ்வபாவோக்தி மஹாராஜா அவர்களின் கீர்த்தனத்தில் நிறைந்திருப்பதையும் அன்பர்கள் கவனிப்பார்களாக.



கவிதா விமர்சம்.

சீதாப் பிராட்டியும் ருக்மிணிப் பிராட்டியும்.

(வே. திருப்பதி நாயுடு, இடிகரை.)

பக்தி என்னும் பதத்திற்கு காதல், அன்பு வாஞ்சை, சிநேகம், நட்பு, கருணை, கிருபை முதலிய பல பொருள்கள். அவை இடத்துக்குத் தக்கபடி உபயோகப்படுத்தப்படுகின்றன. இங்கு விவரிக்கப்படுவது காதல் பக்தி. சீதாப் பிராட்டியானவர் தனது நாயகனை பிரிந்து அப் பிரிவாற்றாமையால் இரவும் பகலும் மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களாலும் ஐம்புலன்களாலும் வீரம் தேஜஸ் கிருபை முதலிய நற்குணங்களாலான ராமாமிர்தத்தை நுகருகிறாள். சிறிய திருவடியிடத்துத் தன்னைப்பற்றி ராகவனிடத்தில் தெரிவிக்குமாறு சொல்லும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சேதன அசேதனங்களும் உருகும் தன்மை வாய்ந்தது. சுருங்கச் சொல்லுமிடத்து, 'அறத்தின் நாயகனாகிய என் பதியானவர் என்மேல் கருணையில்லாமல் இருக்கலாம். ஆனாலும் நான் செய்யும் தவமானது இன்னும் ஒரு மாதத்தில் முடிந்துவிடும். அதற்குள் அவர் வந்து என்னை மீட்காவிடில் நான் இறந்துபோவது நிச்சயம். எனது ஈமக்கிரிகைகளை அவரது திருக்கரங்களால் கங்கைக் கரையில் செய்யும்படி திருச்செவி சாற்றுவாய். அப்படி நான் இறந்துபோனாலும், அடுத்த ஜன்மத்திலாவது பிறந்து மறுபடியும் அவரது திருமேனியைத் தீண்டும் பாக்கியம் பெறுமாறு ஒரு வரம் அருளவேண்டு'மென்று ஆஞ்சநேயரிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறாள். இதனைச் சுந்தர காண்டம் சூடாமணிப் படலத்தில்,

> திங்க ளொன்றிலென் செய்தவம் தீர்ந்ததால்
> இங்கு வந்திலனே யெனின் யாணர்நீர்க்
> கங்கை யாற்றங் கரையடி யேற்குந்தன்
> செங்கையாற் கடன் செய்கென்று செப்புவாய்.
>
> ஈண்டுநாளிருந் தின்னுயிர்மாயினும்
> மீண்டு வந்து பிறந்து தன்மேனியைத்
> தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
> வேண்டினா டொழுதா ளென்று விளம்புவாய்.

சீதாப் பிராட்டியார் ஸ்ரீராகவனோடு அனுபவித்து பிரிந்த வருத்தத்தை இங்ஙனம் தெரிவிக்கிறார்.

ருக்மிணிப் பிராட்டியானவர் கண்ணபிரானின் கலியாண குண வைபவங்களை நாரத மகரிஷியினிடம் கேள்விப்பட்டு கண்

ணனது உருவெளித்தோற்றமாகிய கிருஷ்ணாமிர்தத்தை ஐம்புலன்களாலும் உண்டு "கண்ணானை, மனத்தானை, காண்கிலேனானை, யெண்ணாமுன் வருகுதியருளு மீகலாய்" என்றபடி மனத்தால் அனுபவித்து அவரை அடைவான் வேண்டி ஒரு பிராமண தூதுவனிடத்து தன் அபிப்பிராயத்தை லிகிதமூலமாய் வரைந்து அனுப்புகிறார். ஸ்ரீபாகவதம் தூதேவு படலத்தில் லிகிதவாசகம் மட்டும் காதல் பக்தி மயமான முப்பது கவிகளால் வெளியிடப்படுகின்றது. சூடாமணிப் படலத்தில் சொன்ன பாசுரங்களும் கீழ்வரும் ஸ்ரீபாகவதப் பாசுரங்களும் ஒரே தன்மையும் அர்த்தபுஷ்டியும் வாய்ந்தவை.

உடலிடையென் னுயிரொருவுமுன்னொவி
கடலிடை யமருவாய் கடிதினெய்தியே
யிடமுடை யுனது மார்பணைந்திடாயெனிற்
கொடியனேனுயிர்நமன் குறுகுங் காண்டியால்.

நாளைவந் தெனை மணம் நண்ணிலாயெனின்
மாளுவ னெறிதனில் விழுந்து மாண்டபின்
மீளுமோர் பிறவியின் வினையினேனை நீ
ஆளுநல் வரமருள் அமலவச்சுத.

ஸ்ரீ ராமசந்திரன்.

"மாயக்கூத்தன்"

ஆதிகவி தமது காவியத்திலே பல இடங்களிலும் ஸ்ரீராமனைச் சந்திரனுக்கு ஒப்பாகக் கூறுவர். இது பற்றியே ராமசந்திரன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. சந்திரன் ஜனங்களுக்கு ஆனந்தத்தைத் தருகிறான். அந்தண்மை பூண்டு ஒழுகுவோரைச் சந்திரன் பெயரால் ஸௌம்யன் என்று கூறுவது இக்காரணம் பற்றியேயாம். இவ்வாறு மனதை ரமிப்பிக்கும் ஸௌம்ய குணம் வாய்ந்தவருள் தலை சிறந்தவன் ஸ்ரீராமபிரான். ராமன் என்றாலே ரமிப்பிப்பவன் என்று பொருள். தாசரதியின் இக்குணத்தைக் கண்டறிந்தே வசிஷ்டர் ராமன் என்று பெயரிட்டார். "இக்குணமுடையவனாக இருத்தல் வேண்டும் தம்முடைய கதாநாயகன்" என்ற எண்ணங்கொண்டே, வால்மீகி முனிவர் நாரதரை நோக்கி "இணையற்ற பிரிய தரிசனன் யார்?" என்று வினவி அவரிடமிருந்து, 'ராமனே இணையற்ற பிரிய தரிசனனாக சதா விளங்குவோன்' என்றும் 'அவனே ஸோமன் போன்று பிரிய தரிசனன்' என்றும் விடையளிக்கப் பெற்றார்.

சந்திரன் எப்பொழுதும் பிரிய தரிசனனாக இருப்பதில்லை. ஸ்ரீராமன் அயோத்தி நகரை விட்டு நீங்கியபோது, "வாயு சீதளமாக வீசவில்லை; சந்திரன் ஸௌம்ய தரிசனமுடையவனாக இல்லை. சூரியன் வெயிலடிக்கவில்லை. உலகெல்லாம் நிலைகுலைந்திருந்தது" என்று வால்மீகி வருணித்துள்ளார். எந்நிலையிலும் ஸ்ரீராமனுடைய ஸௌம்ய குணம் மாறுபடவில்லை என்பதைக் குறிக்கவே 'சதைகப்ரியதர்சன:' என்றார் நாரத பகவான். சுற்றும் ஒளி வட்டம் சூழ்ந்து சோதிபரந்து எங்கும் எத்தனை செய்யினும். சந்திரன் இராமன் முகம் நேரொவ்வுமோ? அவன் முகம் அவனை எதிர்த்த மாரீசனையும் வசீகரித்தது. மாரீசன் இராவணனிடத்திலே தான் பாலராமனைத் தண்டகாரணியத்திலே கண்ட வரலாற்றை விளக்கிக் கூறுகிறான், "அப்பொழுது இராமன் இளஞ்சந்திரன் எழுந்தாற்போல தண்டகாரணியத்தைச் சோதிமிக்க தன் தேசினாலே சோபிக்கச் செய்தான்" என்று. ரிபுக்களுக்கும் வத்ஸலனான இராமபிரான் பகைவனுக்கு இவ்வாறு தோன்றினால், தவமிருந்து பெற்ற தந்

ணதையின் கண்களில் இராமனது முகம் எவ்வாறு தோன்றும்.! இராமனைப் பிரிந்து தன் ஆற்றாமை சொல்லி அழுகின்ற தசரதன், "சரத்காலச் சந்திரனையும் கமலப் பூவையும் ஒத்ததாய் என் நாதனுடைய சுகந்தம் வீசும் அம் முகத்தைக் கொடுத்து வைத்தவர்களே காண்பார்கள்" என்றும் "பதுமதளம் போன்ற கண்களையும் அழகிய புருவங்களையும் அழகிய பற்களையும் அழகிய மூக்கையும் கொண்டு சந்திரனை யொத்த என் இராமன் முகத்தை தன்யர்களே காண்பார்கள்" என்றும் வருந்துகிறார். இச் சுலோகங்களினால் ராமனுடைய சந்திர வதனத்திற்கும் சந்திரனுக்கும் உள்ள தாரதம்மியத்தை அறியலாம். எக்காலத்திலும் நிலைத்த அழகைச் சந்திரன் பெற்றிருப்பதில்லை. சரத்காலச் சந்திரனே உவமைக்குரியவன். மேலும், ராமசந்திர வதனம் தாமரைப் பூ நாறும்; அப்பொழுதலர்ந்த செந்தாமரையின் இதழ் போன்ற கண்களால் சிறந்து விளங்கும்; இணைநீலவிற் போன்ற நீண்ட புருவங்களையும் 'சுடர் வெண் மின்னுக் கொலோ, அணிமுத்தங்கொலோ' என்னும்படியான வெண்பல்வரிசைகளையும் 'கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ அறியேன்' என்னும்படியான திருமூக்கையும் சந்திரபிம்பத்திலே காண இயலுமோ? இவ்வாறு சிறந்து என்றும் மாறாத ஸௌம்ய குணமுடையதாய் விளங்கும் ராமசந்திரனுடைய முகமும் ஒளி குன்றுமோ என்ற பீதியே தசரதருக்குப் பெரிதும் துன்பம் விளைத்தது. "காட்டுக்குப்போ" என்ற சொற் கேட்டதும் ராமனது முகவர்ணம் கிரகணத்தாற் பீடிக்கப் பட்ட சந்திரனைப் போன்று ஒளி மாறுமே. அதை எப்படிக் காண்பேன்" என்று பிரலாபிக்கிறார் தசரதர். ஆனால், அவர் பயந்தபடி, அப்பொழுது ராமனது முகச்சோதி குன்றவில்லை. பிராட்டியைப் பிரிந்த பின் தேடித் திரிந்து அவனைக் காணாதபோது மட்டுமே க்ஷண காலம் ராமனது ஸௌம்ய குணம் மாறுபட்டது. அதுவும் "நிலவு பொழியு முகத்தை மாற்றி கொடுங்கதிரவன் உதயமானாற்போல நான் என் சர்வகுணங்களையும் ஒடுக்கிக் கொள்வதால் என் தேஜஸ் மட்டுமே பிரகாசிக்கும்" என்று அவன் ஸங்கல்பித்ததாலேயே.

ராமசந்திரனுடைய முகத்திற்கு உவமையாக பூர்ணசந்திரனைச் சொல்லவேண்டுமானால் அச்சந்திரனையும் ஒப்பித்தே சொல்ல வேண்டுமென்றறிந்தே அனுமானும் பிராட்டியை 'ராமசந்திரனிடம் சேர்ப்பேன்' என்றபோது.

யதால[illegible]யனம் வல்கு
பிம்போஷ்டம் சாரு குண்டலம்
முகம் த்ரக்ஷ்யஸி ராமஸ்ய
பூர்ணசந்த்ரம் இவோதிதம்.

என்று வருணிக்கிறார். பிராட்டியைப் பிரிந்த தசையிலே மட்டுமே ராமனைக் கண்ட அனுமான் பேச்சு இது என்றால் பிராட்டியை எய்தி புஷ்பக விமானத்திலே அயோத்திக்கு செல்லும்போது, ஸ்ரீராமபிரானின் திருமுக மண்டலம் எப்படி இருந்தது என்று வருணிப்பது எப்படி? வேறு உவமானப் பொருள் இன்மையால், "பிராட்டியோடு புஷ்பக விமானத்தில் விளங்கிய ராமனை ஆகாயத்திலே சந்திரனைக் காண்பார்போலக் கண்டனர் கோசல நாட்டு மக்கள்" என்று தானே உவமித்துக் காட்டக் கூடும்.

சங்கர நாராயணன்.

"துகளன்"

பேயார் பாடிய அற்புதத் திருவந்தாதியிலே

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஒருருவாய் நின்னோ டொழிதருவான்-நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு.

என்ற வினா எழுகின்றது. சங்கரனுடைய ஒரு பாகத்திலே நாராயணன் உள்ளான் எனில், அவனும் காணாதபடி தன்னுருவை எங்கே ஒளித்துவைத்தான் என்று அதிசயிக்கிறார் பேயார். மேலும், "ஒரு பால் உலகளந்த மாலவனாம்; மற்றை ஒரு பால் உமையவளாம் என்றால், இருபாலும் நின்னுருவமாக நிறந் தெரிய மாட்டோம்" என்கிறார். இவ்வாறு ஈருருவமும் தாங்கி நின்றபோதும் எவ்வுருவம் பரதத்துவம் என்ற வாதம் ஓய்வதில்லை. பேயாழ்வாரும் 'தாழ்சடையும் நீள்முடியும், ஒள்மழுவும் சக்கரமும், சூழரவும் பொன் நாணும்' தோன்றும் திருமலையப்பனை இரண்டு உருவும் ஒன்றாக இசைந்த திருமாலே என்பர். ஆயினும், ரூபபேதங்களால் வரும் சச்சரவுகளைத் தீர்க்க எழுந்தன இவ்வொற்றுமை யுருலங்கள். இவ்வித சமரசக் கொள்கை பொய்கையாரின் வாக்குகளால் திடப்படுகின்றது. "அரன் நாரணன் நாமம்; ஆன்விடை புள் ஊர்தி; உரைநூல் மறை; உறையுங் கோயில் வரை நீர்; கருமம் அழிப்பு அளிப்பு; கையது வேல் நேமி; உருவம் எரி கார்; மேனி ஒன்று" என்றும், 'ஏற்றானும் புள்ளூர்ந்தானுமாகவும் நீற்றானும் மணிவண்ணத்தானுமாகவும் சடையானும் நீள் முடியானுமாகவும் உள்ளவன் காப்பு' என்றும் இப்பெரியார் பாடுவதும் இன்புறுதற்கேற்றது.

'இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்' என்று திருமழிசைப் பிரான் நாவீறு கொண்டு பாடுவதும் 'அரியலாற்றேவியல்லை' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுவதும் தாம் கொண்ட தெய்வவுருவிலே தமக்குள்ள திட நம்பிக்கையைக் காட்டுவன என்றாலும் இவை சமரசபாவத்திற்குப் புறம்பாகி வீண் வாதங்களுக்கு ஆஸ்பதமாகின்றன. நாமரூபம் கடந்த ஒரு தனிக் கடவுளே வேண்டுவார் வேண்டும் உருக்கொள்ளும் இயல்பினன் ஆதலின் சுத்த சைவர்களுக்குப் பரமசிவனாகவும் வைஷ்ணவர்களுக்குத் திருமாலாகவும் காட்சியளிக்கிறான். அவ்வக் காட்சியிலே தங்களுக்குள்ள ஊற்றத்தால் வேறு தெய்வ மூர்த்தங்களை இவ்விருவகையாரும் கண்ணெடுத்துப் பார்ப்பதும் பிழையென்று கருதி மறந்தும் புறந்தொழாதவர் என்று தம்மைத்தாமே சம்மதிக்கின்றனர். ஆயினும் ஆதி பகவான் மதிவிகற்பம் கொண்ட மானிடர் பலரும் தன்னையே வணங்க வேண்டுமென்ற தயையால் வணங்கும் துறைகளைப் பல பலவாக்கி, சமயம் பல பல வாக்கி, அவை யவை தோறும் தன் மூர்த்திகளைப் பரப்பி வைத்தான் என்று கொள்ளுவார்கள் மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களும் சிவனடியார்களும். பூவை காயா நீலம் காவிமலர் இவற்றைக் கண்டாலும் அவ்வகையெல்லாம் பிரானுருவே என்று பூரிக்கும் மனப் பான்மை கொண்டால் இந்திரனையும் அயனையும் பிரானுரு என்று கொள்வதற்குத் தடை யுண்டோ? "அவனே அவனும் அவனும் அவனும்; அவனே மற்றெல்லாமும்; அறிந்தனமே" என்றும் 'என் திருமார்பன், என்மலைமகள் கூறன், என் நாமகளை அகம்பால் கொண்ட நான்முகன்" என்றும் பெருமை கொள்வர் நம்மாழ்வார். இவ்வகைச் சமரசபாவனைச் சிவனடியார்க்கும் உண்டு என்பதற்கு சங்கர நாராயண மூர்த்தங்கள் பலவும் சிவ மூர்த்தங்களாகவே பூசிக்கப்படுவதே சான்று. இப் பெரியார் தங்கள் வாக்சில்பங்களால் நீருமித்த வடிவங்களைக் கோயில்களில் அமைத்து சமரசபாவனையை வளர்த்தனர் சங்கரன் கோயில் முதலிய ஸ்தலங்களிலே கோயில்களை எடுப்பித்த பரம பக்தர்கள்.

இவ்வாறான சமரச பாவனையால் பக்தியின் பலம் குன்றும் என்று தீவிரவாதிகள் சொல்வதுண்டு. பக்தி திடப்படும் வரையிலே, ஒரு மூர்த்தியிலே மனத்தை நிலை நிறுத்த வேண்டும் என்பது வாஸ்தவமே. ஆயினும் அந்நிலையிலும் பிற மூர்த்தங்களிடத்தே துவேஷபுத்தி செலுத்தி வேண்டியதில்லை. 'திருமால் எனக்கே உளன்' என்று நாவீறு பெற்ற நம்மாழ்வாரும், பிறர் தங்கள் இஷ்ட தெய்வங்களைத் தொழுவதையே ஆதரித்துப் பேசி, "மானிடம் தொழாது, உங்கள் இஷ்ட தெய்வங்களைப் போற்றினால் அது பரம்பரனைப் போற்றியதாகிப் பயன் அளிக்கும்" என்று சமரச நிலையினின்றும் பிறழாது உபதேசிப்பர். அவ்வாறு உபதேசித்ததால் அவருக்கு பரம்பொருளின் ஸ்வரூபத்தில் யாதொரு ஐயப்பாடும் இருந்ததாகக் கொள்ளக் கூடுமோ? அதுவே போல இருபெருஞ் சமயத்தாரும் பிற மூர்த்திகளைத் துவேஷியாமல், அவற்றுள்ளும் ஊடுருவி நிற்பது தன் தெய்வமே என்று நம்பி இருவகை மூர்த்தங்களையும் சங்கரநாராயண மூர்த்தங்களையுமே ஒக்கத் தொழுதால் அன்று அப்பொழுதே சமயச் சச்சரவுகள் ஒழிந்து போமல்லவா?

அவனிபவனமும் கிரிபவனமும்.

"கௌசிகன்"

காஞ்சிபுரம் 'கைலாஸ நாதர் கோயில் என்று வழங்கப்பெறும் புராதனக்கோயிலைச் சரித்திர ஆராய்ச்சியாளர் ராஜஸிம்ஹேச்வரம் என்றும் அதனை எடுப்பித்தவனை ராஜஸிம்ஹ பல்லவன் என்றும் கூறுவர். இக்கோயிலிலே ஒரு கல்வெட்டுச் சுலோகம் உள்ளது. அது வருமாறு:

துஷ்யந்தப்ரமுகை: ச்ருதாம்பரகதா வாணீ சரீரம் விநா
க்ஷ்மாநாதை: ஸுரத்ருச்வபிர் யதிக்ருதே கண்வாதிபிஸ் ஸ்வீக்ருதை:
தக்நாச்சர்ய மிதம்புந: கலியுகே ஸ்ரீபவத்ஸத்குணே
ஸோச்ரௌஷீதிதிதாம் கிரம் மஹதஹோ விஸ்மாபனம் ஸ்ரீபர:

கிருதயுகத்திலே கண்வரிஷி முதலானவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களாயும் தேவர்களைக் காண்பவர்களாயுமுள்ள துஷ்யந்தன் முதலான மன்னவர்களாலே ஆகாயத்திலே அசரீரி வாக்கு கேட்கப்பட்டது என்பது ஆச்சரியமன்று. மற்று, நற்குணம் விலகிச்சென்ற இந்தக் கலியுகத்திலே அந்த வாக்கை ஸ்ரீபரன் கேட்டான் என்பதன்றோ பெருவியப்பாவது.

மஹாபாரதத்திலேயுள்ள துஷ்யந்தன் கதையிலேதான் அசரீரியின் வாக்கு கேட்கப்படுகிறது. அதனால் அந்த வரலாற்றை மேற்கொண்டு அதைக் காட்டிலும் அதிசயிக்கத்தக்கது இந்த ஸ்ரீபரன் செவியுற்ற அசரீரி. இவ்வசரீரி என்னசொல்லிற்று என்னும் வினாவிற்கு விடையளிப்பது போலத் திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிலிலே செதுக்கப் பெற்ற சுலோகம் ஒன்று அமைந்துள்ளது; அது வருமாறு:

விபூதிஞ் சோளானாம் கதமஹமவேக்ஷய விபுலாம்
நதீம்வாகாவேரீம் அவனிபவனஸ்தித இதி
ஹரேணோக்த: ப்ரீத்யா விபுரதிசதப்ரம்லிஹமிதம்
மனுப்ரக்யோ ராஜ்யே கிரிபவனமஸ்மை குணபர:

"சோழர்களுடைய விஸ்தாரமான விபூதியையும் காவேரி நதியையும் நிலக்கோயிலில் நின்று நான் எவ்வாறு காணக்கூடும்" என்று ஹரனால் வினவப்பெற்ற மனுவைப் போன்ற குணபரன் என்னும் பிரபு பிரீதியால் தன் ராஜ்யத்திலே மேகத்தைத் தொடுகின்ற இந்த மலைக்கோயிலை அமைத்தான்"

நிலக் கோயில் கட்டி அதிலே கைலாசநாதனை ஸ்தாபித்த மன்னனை நோக்கி 'உன் சோழநாட்டின் வளத்தையும் காவேரியையும் காண விரும்புகிறேன்' என்று அசரீரி வாயிலாகச் சொல்ல அம் மன்னவனே சிராப்பள்ளிக்கோயிலையும், எடுப்பித்தான் என்று கொள்வதால் ஸ்ரீபரனும் குணபரனும் ஒருவனே என்பதும் நிர்ணயமாகின்றது.

नृपनापितपुत्रन्याय:।

நிருப நாபித புத்திர நியாயம்:—'அழகில் சிறந்தவன் யார்?' என்று கேட்ட அரசன் முன்னிலையில், நாவிதன், விகாரரூபம் படைத்தவனும் சித்திரக் குள்ளனுமான தன் மகனை அழைத்துச் சென்று 'கட்டழகன் இவனே' என்றானாம்.

घट्टकुटीप्रभातन्याय:।

கட்ட குடீ பிரபாத நியாயம்:—சுங்கம் கட்டாமல் சாவடிக்காரனை ஏமாற்றும் எண்ணங் கொண்ட வண்டிக்காரன், இரவெல்லாம் காட்டு வழியில் வண்டியைச் செலுத்தியும், பொழுது விடிந்தவுடன், எந்த சுங்கச்சாவடியை ஏமாற்ற எண்ணினானோ, அதனருகேயே தான் வந்திருப்பதைக் கண்டானாம்.

அனுஷ்டானப் பகுதி

ஒரு ஊரில் மூன்று மஹான்கள்.

'வஸிஷ்ட பாரதி.'

இதில் ஒருவர் *ஸதாசிவப் பிரும்மேந்திராள். இரண்டாவது போதேந்திராள். மூன்றாவது ஸ்ரீவெங்கடேச தீக்ஷிதர் என்ற ஐயாவாள். இவர்களின் மஹிமைகள் விளங்கிய இடம் திருவிசநல்லூர். இம்மூவர்களும் உலகப்பிரஸித்தி பெற்ற மஹான்கள். திருவிசநல்லூர் என்பது தேவாரத்தில் விளங்கிய 274 திருப்பதிகளில் ஒன்று. இது காவிரியின் வடகரையில் உள்ள 63 ஸ்தலங்களின் ஒன்று. திருவிடமருதூர் என்ற ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி நேரே ஒரு மைல் தூரம் உள்ள காவிரியை அடைந்து அதைக் கடந்து, மேற்கே இரண்டு மைல் தூரம் செல்ல இத் தலத்தைக் காணலாம். இது பெரும்பாலும் வைதீகப் பிராமணர்கட்கு வாசஸ்தலமாயுள்ளது. 250 வருஷங்கட்குமுன் தஞ்சைமா நகரத்தை ஆண்ட துளஜாஜி, சரபோஜி மஹாராஜா இவர்களின் அபிமானம் பெற்ற தலம். நல்ல வேதசாஸ்திர ஆசார ஸம்பன்னர்களாகிய வித்வத் சிரோன்மணிகட்கு சர்வமான்யம் செய்யப்பட்டுள்ளது. அந்த அக்ரஹாரத்தின் மேற்கு எல்லையில் திருந்துதேவன்குடி என்ற சிறிய சிவஸ்தலம் உளது. இங்கே ஸ்வாமிக்கு கர்க்கடேசுரர் என்று பெயர். இது நண்டு பஜித்த ஸ்தலம் என்று கூறப்பட்டு வருகிறது. இவ்வூரில் ஸ்ரீராமபத்ர தீக்ஷிதர் என்ற மஹான் இருந்ததாயும் அவர்கள் ஸ்ரீராமபக்தியில் தேர்ந்து அநேக காவியங்கள் எழுதியதாயும் ஜானகீபரிணயம் என்ற ஸ்ரீராமகதையை நாடக காவியமாய் இயற்றியதாயும் கூறப்படுவது. இவ்வூரிலேதான் ஸ்ரீவேங்கடேச தீக்ஷிதர் என்ற மஹான் ருத்ராம்ச பூதராய் அவதாரம் செய்தார். அப்பெரியார் பிறவியிலிருந்து பூர்வபக்ஷ சந்திரனைப்போல் தாமும் கலைகள் வளரப்பெற்று விளங்கினர். பொன்மலரில் வாஸனை புகுந்தாற்போல் இவருடைய சிவபக்தியும் சீலமும் வளரலாயின. அதனுல் இவரை யாரும் நாமத்தை சொல்லத் துணியாதவர்களாய் 'ஐயாவாள்' என்று அழைப்பது வழக்கமாயிற்று. அவர்கள் மைசூர் ராஜ சமூகத்தில் சென்று பேராதரவு பெற்று இருந்தார். செல்வமும் புகழும் சேரப் பெற்றுர்; அவைகளுடன் ஸ்வபூமிக்குத் திரும்பி வந்தார். அவைகள் யாவும் நித்யம் அல்ல என்று அறிந்து, அவற்றை சிவகைங்கர்யங்கட்கும் எளியோர்கட்கும் வினியோகம் செய்தார்.

தான் எப்போதும் சிவசிந்தனையைச் செய்துக்கொண்டிருப்பதால் சைவ உத்கர்ஷங்க

* இவர் வரலாறு முன்னமே எழுதப்பட்டுள்ளது.

னான அநேக மேன்மைப்பாடு அமைந்த பல காவியங்களை எழுதினார். அவர் செய்த அற்புதச் செயல்களும் அநேகம். அவைகள் யாவும் பற்பலர்களால் விளக்கப்பட்டும் இருக்கிறது; அவைகட்கெல்லாம் மேலான செயல் ஒன்றைத்தான் இங்கு எழுதத் துணிந்தோம்.

இம்மஹான், "யாவர்க்கும் எளிதில் அனுபவிக்கவும் அதனால் உயர்ந்த பலனைப் பெறவும் தக்கது யாது" என்று சிந்திக்கலானார். அதுதான் பரம ரஹஸ்யமாயும் ஸர்வவேத ஸாரமாயும் ஜீவர்கள் ஸம்ஸாரக்கடலை கடப்பதற்கு ஓடமாயும் உள்ள சிவதாரகம் எனத் தெளிந்தார். இதையேதான் ஸதா ஜபிப்பதுபோலும் அந்த ஜபசக்தியினால் தனக்கு சிவஸ்வரூபம் தியானத்தில் தோன்றுவதுபோலும் யாவர்க்கும் தோன்றுமென்று நம்பினார். இதுவே தக்க உபாயம் என்று யாவர்க்கும் உபதேசித்தார். அன்பான ஜீவன் ஒருவன் சிவசின்னங்களான விபூதி ருத்ராக்ஷ தாரணம் செய்துகொண்டு சிவசிந்தனை செய்தால் அவன் ததாகாரம் அடைந்துவிடுவான் என்பதில் ஸந்தேஹம் இல்லை என்று பரமகிருபையால் கூறி ஒவ்வொருவரையும் தினமும் குறையாமல் 5000 நாமமாவது உச்சரிக்கவேண்டுமென்று உபதேசித்தார். மெய்யன்பும் புண்ணியமும் உள்ள அநேகர்கள் வந்து அடிபணிந்து ஸத்குருவின் நியமப்படி சிவஸ்தோத்திரமும் சிவதாரக மந்திர உபதேசமும் பெற்று அதை அனுஷ்டிக்கலானார்கள். அநேக அன்பர்கள் நாளுக்குநாள் கூடி எங்கு பார்த்தாலும் சிவசப்தமும் சிவநாம ஸங்கீர்த்தனமும் செய்ய, இதன் அனுபவத்தால் அன்பர்கள் மேன்மேலும் ஊக்கம்கொண்டார்கள். கைம்பெண்களாகிய பலரும் இது கைகண்ட ஔடதம் எனக் கருதி தாமும் இடைவிடாது ஜபிக்கவும், ஸ்தோத்திர தாரணம் செய்துக்கொண்டு சிவமந்திரங்களை உருவேற்றி தாங்கள் பிறப்பதற்கு காரணமான கரும மல சேஷங்களை விசேஷமாய் ஒழித்து சிவபெருமானுடைய சிவசிந்தனையில் செழித்தார்கள்.

இத்தகைய பரோபகாரத்தை செய்த நமது ஐயாவாள் அவர்கட்கு நாம் என்ன கைம்மாறு செய்வோம்? என்றும் அவரே நம் சிவரூபம், அவரே நம் குருமூர்த்தி, ஸ்ரீமேதா தக்ஷிணாமூர்த்தி என்று உள்ளம் கொண்டு அனைவரும் அவரை அடிபணியலானார்கள்.

போதேந்திராள்

இம்மஹானின் பூர்வ நாமமும் ஸ்ரீவேங்கடேசர் தான். இவ்விருவர்களும் ஆந்திர வகுப்பினர்களாய் இருப்பதுபோல் நாமமும் ஒன்றாய் இருப்பது அதிசயிக்கத்தக்கது. ஆயினும் சிலர் நம்பிக்கை கொள்ளாது "இருவருக்கும் ஊர் ஒன்றாம்; பேரும் ஒன்றாம்; ஜாதியும் ஒன்றாம், ஸாமர்த்தியமும் ஒன்றாம்" என்று சொல்லியிருக்கிறதே என்று எண்ணக்கூடும். கொஞ்சம் மனதை நிறுத்தி உண்மையை பொறுமையாய் ஆராய உண்மை நன்கு புலப்படும். ஐயாவாள் செய்த 'சிவ நித்ய' உத்ஸவ ஸம்பிரதாய கீர்த்தனை பத்ததி என்று ஒரு புஸ்தகம் இருக்கிறது. நமது சோணாட்டில் சைவோத்ஸவ சம்பிரதாயம் தெரிந்த பெரியோர்கள் அதை அணுவும் பிறழாமல் கையாண்டு வருவதைக் காணலாம்.

போதேந்திராள் இயற்றிய ஹரிபஜனஸம்பிரதாய கீர்த்தனை என்ற புஸ்தகம் ஒன்று கிராமங்கள் தோறும் வழங்கிவரக் காணலாம். இவ்விரண்டு புஸ்தகத்திலும் ஸ்ரீவேங்கடேச நாமமுத்திரை அமைக்கப்பட்டுள்ளது. இதுவே அதற்குத் தக்க சான்றாகும். ஐயாவாள் செய்தது சிவ பஜனை என்றும், போதேந்திராள் செய்தது ஹரிபஜனை என்றும் வழங்கி வருகிற பேரினளவாகிய பேதம் ஒன்றேயாகும்.

போதேந்திர ஸ்வாமிகள் வரலாறு

போதேந்திராள் என்ற வேங்கடேசர் தாமும் பிறந்து வளர்ந்து, வித்தையிலும் நிறைந்து ஸம்ஸாரத்தில் உறைந்து பிறகு அதில் மனம் கரைந்து திருவருள் நிறைந்து, துறவி ஆனார். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கர பகவத்பாத ஆசார்ய ஸந்நிதியில் இவர் ஒருவராகக் கூறப்படுகிறார்.

இவர்கள் பீடாதிபத்தியத்தில் சில நாள் இருந்து, அதுவும் தனக்கு ஒரு பிரதிபந்தம் எனத் தெரிந்து, அதை நீக்கிக்கொண்டு உத்தர தேச யாத்திரை புறப்பட்டார்.

பிறகு பதரிநாராயணம், ஹரித்வாரம், நைமிசாரணியம் முதலிய ஸ்தானங்களில் தங்கி சில நாள் நிஷ்டையில் இருந்தார். தனக்கு அங்கு கிடைத்த ஸ்ரீராமநாம பிரபாவத்தால், ஸர்வதா நாமோச்சாரணம் செய்துகொண்டு ஸ்ரீவாரணாசி என்ற காசி க்ஷேத்ரம் அடைந்தார்.

ஒருஸமயம் ஒரு ஸாது போதேந்திரரை அடைந்து, ஸதா நாமஸ்மரணம் பண்ணிக் கொண்டு இருப்பதைக் கேட்டு, இதன் மஹிமை யாது என, போதேந்திரர் இதுதான் உபநிஷத் ஸாராம்சம் என்றும், பிரணவாத்மகமானது என்றும், இதை நித்தியம் நாமஸங்கீர்த்தனம் பண்ணுகிறவர்கட்கு ஆனந்தப்பிராப்தி உண்டாகும் என்றும், அதுதான் ஸ்ரீராம சப்தார்த்தம் என்றும், ரமந்தே யோகிநாநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி என்று உபதேசித்தார். அதுமுதல் அந்த யோகியார் தனது ஸன்யாஸ யோகத்தில் உள்ள கருமவிடுபாட்டுக்கு காரணம் இதுவே எனக் கொண்டார்.

தனது நித்யானுஸந்தான விசேஷத்தால் ஆனந்தத்தைக் கண்டார். அதை உலகத்தார்க்கு சொல்வதே கடமை எனத் தீர்மானித்தார். அன்றுமுதல் ஸ்ரீராமானந்தர் எனப் பெயர் பூண்டு, குருநியமனம் கொண்டு அங்குள்ளவர்கட்கு உபதேசித்து வந்தார்.

போதேந்திர ஸ்வாமிகள் பிறகு தக்ஷிண பூமிக்குத் திரும்பினர். ஸ்ரீகாளஹஸ்தி, காஞ்சீபுரம், அருணசலம், சிதம்பரம், மாயூரம், திருவிடை மருதூர் முதலிய பல ஸ்தலங்கட்கு சென்று பிறகு திருவிசநல்லூர் அடைந்தார். அங்கு ஐயாவாளும் இவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள்.

இவர்கள் வரும் வழியில் அநேக அற்புதங்களைச் செய்து வந்தார்கள். இவ்விருவர்களும் தக்க மேன்மையுடையவர்கள் ஆனாலும், நாம ஸங்கீர்த்தனம் ஆகிய விஷயம் ஒன்றில் மட்டும் மனம் வேறுபட்டு இருந்தது. அதாவது, இது ஸ்ரீராம நாமம்; அது சிவநாமம்; இதில் வகுப்புகள் இரண்டாய் இருப்பதால் அன்பர்கள் அநேகர்கட்கும் இதில் ஸந்தேஹம் எழுந்தது. அதைப்பற்றி அவரவர்கள் தத்தம் ஆசாரியர்களை வினவலானார்கள்.

சந்தேஹ நிவிருத்தி

இவ்விரண்டு பெரியார்களும் மிகத் தேர்ந்தவர்கள் என்று ஜனஸமுதாயத்தில் ஓர் அபிப்பிராயம் பொதுவாய் இருந்தது. ஆனால் நாம் சிவ நாமத்தை சொல்வதா? ஸ்ரீராம நாமத்தை சொல்வதா? என்ற ஸந்தேஹம் மனதில் தொடர்ந்தது. அன்பர்கள் கோஷ்டியில் ஒருவரை ஒருவர் ஸந்திக்கும்போது, தங்கள் தங்கள் கொள்கையே சிறந்தது என்றும், அதுவே தங்கள் ஆசாரியன் நியமனம் என்றும், பாராட்டித் தர்க்கித்து வந்தார்கள். அதில் தேர்ந்த சிலர்கள் இதை தங்கள் ஆசாரியன் முன்னிலையிலேயே பிரார்த்தித்துத் தெளிய வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

சில நாட்களுக்கு பின் போதேந்திராள் திருவிசநல்லூரில் இருந்தா அதற்கு கீழ்புறம் நான்கு மைல் தூரத்திலுள்ள காவேரியின் தென்கரையில் அமைந்த வீரசோழன் என்னும் ஆற்றிற்கும் தென்கரையில் கோவிந்தபுரம் என்ற கிராமத்தில் தங்கி, சிஷ்ய கோடிகளுடன் நாமஸங்கீர்த்தனம் செய்துக் கொண்டிருந்தார்கள்.

அநேக பக்த ஜனங்களும் போதேந்திராளைச் சரணம் அடைந்து ஸூத்திரமும் ஸ்ரீராம உபதேசமும் பெற்றுப் பெருகினார்கள். திருவிசநல்லூரிலுள்ள ஸ்ரீவெங்கடேச தீக்ஷிதர் என்ற ஐயாவாளை சிஷ்யர்கள் பிரார்த்தித்து "போதேந்திராள் என்ற மஹான் ஸ்ரீராம நாம தாரகம் உபதேசம் செய்து ஸூத்திரம் கொடுத்து அநேகர்களைக் கடாக்ஷிக்கிறார்களே. அதில் வரவர கோஷ்டி பெருகுகிறது. அதில் ஸ்ரீராமநாமதாரகமே பெரும் முழக்கமாய் இரவும் பகலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் எங்கட்கு சிறிது ஸந்தேஹம் உள்ளத்தைப் பிடித்துக்கொண்டது. அதைச் சந்நிதியில் தெரிவிக்க சிறிது அச்சம் உண்டானாலும் நமது இச்சையை பூர்த்தி பண்ணிக்கொள்ள வேணுமே என்றும் தோன்றுகிறது. இதன் உண்மையை யாவரும் அறிய திருவாய் மலர்ந்தருள வேண்டும்"

என்று பிரார்த்திக்க, ஐயாவாள் கோவிந்த புரத்துக்கு வந்து ஸ்ரீபோதேந்திரரைச் சேவிக்க, அவர்களும் இவர்களும் அளவளாவி இருவரும் ஒரே பீடத்தில் இருந்து சிவனும் விஷ்ணுவும் ஏக சரீரியாய் சங்கரன் நாராயணன் என்று அபேதமான ஒருவரும் போல் அந்த வித்யாபீடத்தில் இவ்விரண்டு மஹான்களும் இருந்து ஒருவருக்கொருவர் மாறி மாறி நாமப்பிரபாவங்களை எடுத்து, தக்க ஆதாரங்களுடன் பிரஸங்கித்து வந்தார்கள்.

அந்த சிவநாம ராமநாமப் பிரபாவத்தை, ஆயிரக் கணக்காய்க்கூடிய ஜனங்கள் தங்கள் செவிக்கு இனிய அமிர்தமாய் மடுத்து, தோன்றிய அஞ்ஞான விபரீதத்தை விடுத்தார்கள். அப்பெரியார்கள் இருவரும் அல்லும் பகலும் சிவராம நாமதாரகத்தைக் கூறி, இரண்டும் ஒன்று எனவும், அதனால் வரும் பயனும்ஒன்று எனவும் பல ஹேதுக்களையும் கூறி நிலைநாட்டினார்கள். அவ்வேதுக்கள் வருமாறு :

ஏகோ தேவ: கேசவோவா, சிவோவா என்றும், சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு:, விஷ்ணோஸ்து ஹ்ருதயம் சிவம் என்றும், ராமஸ்தத்புருஷம் ப்ரூதே பஹுவ்ரீஹி ஸதாசிவம், ஏவம் ஸந்தித்த மனஸா முனயோ கர்மதாரய: என்ற வியாகரணம் ஆகிய தத்புருஷ ஸமாஸம், பஹுவ்ரீஹி ஸமாஸம், கர்மதாரய ஸமாஸம் என்ற மூவகையாலும் விளக்கிக் காட்டினார்கள். இவ்விஷயமே தமிழிலும்,

"சிவனெனை யுடையனென்று செப்புவனிராமன்
அவனெனை யுடைத்தான் என்று
அறைகுவான் சிவனும்
உவமையில் இரண்டும் ஒன்றே
ஆமீது உண்மை என்ன
தவமுனி யோர்கள் ஐயம்
தம்முளே தெளியா திற்பர்"

என்ற பல நியாயங்களுடன் உபநிஷத் பிரமாணங்களையும் எடுத்துக்கூறி சிவராம நாமதாரக சித்தாந்தம் என்ற தீர்மானத்தை செய்து முடித்தார்கள். அதுகேட்ட யாவரும் அதுவே நமக்குறுதி எனக் கடைப்பிடித்தார்கள்.

அன்றுமுதல் சிவராம நாம ஸங்கீர்த்தனத்தை லோகத்திலுள்ள நம்மவர்களாகிய ஜனங்கள் வழங்கி வருவதையும் தங்கள் மக்கட்கு சிவராமன் என்று பெயர் வைப்பதையும் நாம் பிரத்யக்ஷமாய் அனுபவிக்கக் காண்கிறோம். பிரதிதினமும் சிவநாமம் 5000, ராமநாமம் 5000 இதற்கு குறையாமல் செய்ய வேண்டும். ஸ்திரீகட்கும் இவ்விஷயத்தில் உரிமை உண்டு. இதற்குமேல் தாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம். இதை நாடோறும் முறையாய்ச் செய்து கணக்கிட்டுப் பெருக்கி, சிவநாம கோடி ராமநாம கோடி என்று முடித்த ஸமாராதனங்களைச் செய்து, பிரும்மார்ப்பணம் செய்வதே "ஸ்ரீபகவத்கீதா பக்தியோக ஸாரம்" எனக் கூறிய ஆசார்ய விதிப்படி செய்து இஷ்டகாம்யார்த்தங்களை எய்துகின்றனர்.

போதேந்திரர் ஸ்துதி.

காதேந்து கண்கொளும் கற்றவர் மற்றவர்
நாமேந்து ராம நாமம் நவிற்றிடும்
மாதேந்து சங்கரன் உருவமாண்புரு
போதேந்த்ர சற்குரு பாதம் போற்றுவாம்.

ஐயாவாள் ஸ்துதி.

செய்யதாம் சிவநாம தாரகம்
உய்யவே உலகம் உரைக்க அமைத்தவர்
துய்ய திருவிசநல்லூரில் தோன்றிய
ஐயா வேங்கடேசாள் பாதம் அணிகுவாம்.

மாதக் குறிப்புக்கள்.

ஸாஹிதீ வல்லபர்.

சென்னை ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதியார் ஸ்ரீராம நவமியன்று சீர்காழி வக்கீல் ஸ்ரீ T. ஸுந்தராசாரியாரவர்களுடைய ஷஷ்டி அப்த பூர்த்தியை யொட்டி அவர்களுக்கு 'ஸாஹிதீ வல்லபர்' என்று பட்டம் அளித்தார்கள். ஸ்ரீ ஆசாரியார் பல வருஷங்களாக ஸம்ஸ்கிருத காவிய விஷயங்களைப்பற்றி ரஸ புஞ்ஜமான சொற்பொழிவுகள் செய்துள்ளார். மேற்படி ஸமிதியிலேயே வால்மீகித் திருநாள் காளிதாஸத் திருநாள் ஸ்ரீகீதைத் திருநாள் முதலிய விசேஷ தினங்களிலும் வேறு பல ஸந்தர்ப்பங்களிலும் உபந்யாஸங்கள் செய்துள்ளார். ஆசாரியாரின் நண்பர்களும் இப்பட்டமளிப்பு விழாவை அனுசரித்து ரூ. 1008 கொண்ட பணப்பையை உதவினார்கள். ஸ்ரீமான் ஸுந்தராசாரியார் அவர்கள் சில்ப ஸ்ரீக்கு ஆரம்பமுதல் அரிய கட்டுரைகள் எழுதி உதவியுள்ளார் என்பதை நேயர்கள் அறிவார்களாக.

பாஷா பாரத துரந்தரர் மறைவு.

சில நாட்களுக்குமுன் கும்பகோணத்திலே தமது கிருகத்தில் மஹாமஹோபாத்தியாயர் பாஷா பாரத துரந்தரர் மணலூர் வீரவல்லி இராமானுசாசாரியரவர்கள் வயோதிக தசையிலே புத்திர ஸந்நிதியில் தேகவியோகமானார்கள். ஆசாரியரவர்கள் தமிழிலே விசேஷ பாண்டித்தியம் உடையவர்கள். பல சங்கங்கள் கூடினாலும் கஷ்டஸாத்தியம் என்று கருதக்கூடியதான ஸ்ரீமஹாபாரத மொழிபெயர்ப்பு வேலையைத் தமது அபரவயதில் தொடங்கி மஹாயுத்தம், காகிதப் பஞ்சம், பணக்கஷ்டம், தேக அஸௌக்கியம் முதலிய பல இடையூறுகளையும் கடந்து பல வடமொழியாளரின் உதவிகொண்டு ஒரே ரீதியாக எளிய தெள்ளிய தமிழ் நடையிலே மஹாபாரதம் முழுவதையும் எழுதிப் பதிப்பித்துத் தமது புகழுடலை நிலைநாட்டினார்கள். அவர் பூதவுடல் மறைந்தாலும், அவரது ஆன்மாவைப் போல் அவர் அளித்த பாரத வசனமும் நித்தியமாய் விளங்குமன்றோ?

வே. நா.

வால்மீகியும் ஸ்ரீ ராமனும்.

18-4-40ல் லக்ஷ்மீபுரத்தில் சென்னை அட்வகேட்டும், தமிழ் லெக்ஸிகன் மாஜி உதவி ஆசிரியருமான ஸ்ரீமான் வே. நாராயண அய்யர் செய்த பிரசங்கத்தின் சாரம் பின் வருமாறு:—

வால்மீகி முனிவர் தமஸா நதீதீரத்திலே தமது சிஷ்யர்களுடன் வசித்து வந்தார். வேதோபநிஷதங்களிலே யுள்ள உண்மைகளை கவிதாரூபத்திலே அமைத்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதிலே குடிகொண்டிருந்தது. தருமகாமர்களின் நடத்தைகளை விசாரித்தால்மட்டுமே தருமத்தின் ஸ்வரூபத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அதற்கு தருமாத்மாக்களைக் கதாபாத்திரங்களாக அமைத்துப் பாடவேண்டும். பாட்டிலே ருசியுடையவர்களுக்கும் பாமரர்களுக்கும் தருமத்தின் ஸ்வரூபத்தை விளக்க வேண்டுமானால் தர்மிஷ்டனாய் தத்காலத்திலேயுள்ள 'ஒருவ'னையே கதாபுருஷனாகக் கொண்டு பாடவேண்டும்; வாய் கொண்டு மானிடம் பாடவும் அவருக்கு விருப்பமில்லை. அதனால், அவர் பரம புருஷனைக்குறித்து தவமிருந்தார்.

அக்காலத்திலே தான் தசரத சக்கரவர்த்தியும் தவமிருந்தார், வமிசகரமான மகப்பேறு பெற வேண்டுமென்று. தண்டகாரணியத்திலும் அநேக ரிஷிகள் தங்கள் ஞானக் கண்ணால் பரம புருஷனைக் காண்பது போதாதென்று ஊனக் கண்ணாலும் அவனைக் கண்டு களிக்கவேண்டி விரும்பித் தவமிருந்தார்கள்.

இவ்வாறு பலர் செய்த தவத்தை வியாஜமாகக் கொண்டு, பகவான் ஸ்ரீராமனாகவும் தம்பியாராகவும் அவதரித்தார்; அவதரித்தது பரந்தாமனே என்பதை வால்மீகி முனிவர் அறிந்து

கொண்டார்; இருந்தாலும், தாம் கண்ட உண்மையை வேறு பெரியோர்களிடம் கேட்டுத் தெரிவதுதான் நல்லோர் முறை. 'போதயந்த: பரஸ்பரம்' என்றல்லவா இவர்கள் செயல்களை வருணிப்பது. அதனாலே தபஸ்வியான வால்மீகி தபசும் சுவாத்தியாயமும் நிறைந்து சொல்வன்மை பெற்றோரிற் சிறந்தவராய் விளங்கிய நாரத முனிபுங்கவரைக் கேட்டார்: "உயர்வற வுயர்நல முடையவன் எவன்! மயர்வற மதிநலம் அருளுவோன் எவன்?" என்று. 'இத்தகைய மனிதனை கண்டறிந்து சொல்வதிலே நீர் ஸமர்த்தர்' என்றும் வற்புறுத்தினர். ஸ்ரீராமனைக் கேட்ட வால்மீகிக்கு ஸ்ரீராமாயணத்தைச்சொன்னார் நாரதர். "ஸ்ரீராமன் வேறு, ஸ்ரீமத்ராமாயணம் வேறா? ராமபிரான் என்றாலும் இராமாயணம் என்றாலும் ஒன்றுதானே" என்னலாம்படி ஆயிற்று, வால்மீகி முனிவர் ஸ்ரீராமாயணம் செய்த பின். அது கொண்டே ஸ்ரீசடகோப முனிவரும் இராமாயணத்தை யென்னாது 'இராமபிரானை யல்லாமல் மற்றும் கற்பரோ' என்றார். இராமாயணமே கற்கத் தகுந்தது; அதையும் வால்மீகி பகவான் சொன்னபடியே கசடறக் கற்கவேண்டும். கற்ற பின், அந்நூலைக் கற்றதனாலே கண்டுகொண்ட தருமமார்க்கத்தின்படி நடத்தல் வேண்டும்.

கற்கக் கசடறக் கற்பவை
கற்றபின் நிற்க அதற்குத் தக

என்றார் திருவள்ளுவர்.

ஸ்ரீமத் ராமாயணத்தைக் கற்றதனால் ஆய பயன் வாலறிவனான இராமபிரானுடைய நற்றாள் தொழுதலேயாம்; சரணாகதியை உபதேசிக்கப் பிறந்தது ஸ்ரீராமாயணம். அவனுடைய சுடரடிகளிலே தொழுதெழுவோருக்கு பயம் என்பது இல்லை. அனன்னியனாய் அவனை அடைந்தவர்கள் ஸுதுராசாராகள் ஆயினார், ஸாதுக்கள் என்றே அவர்களைக் கொள்ளுதல் தகும். குரங்கினையும் அரக்கனையும் சாதுசனத்தோடு சேர்த்து, அவர்களை நலிவோரை விநாசம் செய்யும் பெற்றியன சரணாகதிசாஸ்திரமென்னும் ஸ்ரீராமாயணமும் அதற்குப் பலப்பிரதமான பகவதவதாரமும்.

ஸ்ரீ ராமாயணத்தின் ஸாத்வீக சில்பம்.

ஸ்ரீராம நவமியன்று கொண்டாடப்பட்ட வால்மீகி விழாவில் சென்னை ஸம்ஸ்க்ருத ஸேவா ஸமிதியார் முன் ஸ்ரீ ஸுந்தராசார்யார் ராமாயணமும் ஸாத்விக சில்பமும் என்ற விஷயத்தைப்பற்றி உபந்யாஸம் செய்தார். காவியம் என்பது கலைகளிலும் சில்பங்களிலும் ஒன்றுதான்; ஆனால் உண்மையான இந்திரியநிக்ரஹத்தால் வந்த வீரத்தோடுகூடிய ரிஷிகள் முகத்திலிருந்து வந்த காவியங்கள் யோகமாகிறது. தவஞ்செய்து தான் முக்தியடையவேண்டும் என்று வால்மீகி கருதாமல், உலகத்திலுள்ள அனைவரும் கடைத்தேற வேண்டுமென்று கடவுளையே நாயகனாய் வைத்து எல்லோருடைய மனதையும் அவன்பால் இழுத்து, உலகத்திற்குப் பெருந்தொண்டு செய்து தன் தவத்தை ஸபலமாய்ச் செய்துகொண்டார். இப்படிச் செய்யப்பட்ட ஸ்ரீராமாயணம் மஹாபாரதத்திலிருந்து ஒருவிஷயத்தில் வித்தியாஸப்பட்டது. மஹாபாரதத்திலுள்ள அரிய விஷயங்களுக்கு கணக்கில்லை; வெறும் காவியமாய் அது நமக்கு அளிக்கும் ஆனந்தம் ராமாயணத்தில் இல்லை. ராஜஸம் மிக ஜ்வலிக்கும் காவியம் அது. ராமாயணமோ ஸாத்விகம் தலைதூக்கிநிற்கும் உத்தம சில்பம். இதில் குழப்பமும் கொதிப்பும் பீமனிடமோ, திரௌபதியிடமோ காணப்படுவதுபோன்று காணப்படவில்லை. எங்குமே அடக்கத்தையே அடிப்படையாய் வைத்துக் கொண்டிருக்கிறது. ராமனுடைய குணங்கள் எப்படியோ அப்படியே ராமாயணமும்; இருவருடைய வழிபாட்டாலும் நமக்கும் இருக்கும் பகைகள் ஒழிகின்றன; அமைதி பெருகுகிறது; உடம்பிலும் உள்ளத்திலும் திமிர்த்து நிற்கும் தடித்தனம் தளர்ந்து விடுகிறது.

இதனால் ராமாயணத்தில் ராஜஸம் நிரம்பிய பாத்திரங்கள் இல்லையென்றாவது, மஹாபாரதத்தில் ஸத்வத்தைச் சிறப்பிக்கும் இடங்கள் இல்லையென்றாவது சொல்லவில்லை. மொத்தமாய்ப் பார்க்கும்போது ராமாயணத்தில் எப்படி ஸாத்விக குணம் நிரம்பி நிற்கிறதோ, அவ்வளவு இதர காவியங்களிலில்லை என்பதுதான் கருத்து.

அஹல்யா

ஸ்ரீ ராம நவமியை யொட்டி மாம்பலம், ஸரோஜினித் தெருவில் நடந்த ராமாயண உபந்நியாசங்களில் ஸ்ரீ ஸுந்தராசாரியார் "அஹல்யா சாபவிமோசன"த்தைப் பற்றி உபந்யாஸித்தார்.

தன்னைக் காட்டிக்கொடுப்பதற்காக லக்ஷ்மணனை அழைத்துக்கொண்டு தன் சிறிய தகப்பன் விபீஷணன் வந்திருக்கிறான் என்று தெரிந்துகொண்ட இந்திரஜித்து விபீஷணனைத் தூற்ற, விபீஷணன் தான் ராவணன் பக்கத்தை விட்டதற்குக் காரணஞ் சொல்லுகிறான்: "ஹிம்ஸை, பிறனுடைய பொருளை அபஹரித்தல், பிறனுடைய மனைவியை அபஹரித்தல் இம்மூன்றும் கொடிய பாவங்கள்; இவை ஒருவனிடமிருப்பின், அவனை தீப்பற்றிய வீட்டை விட்டுவிடுவதுபோல் விட்டுவிடவேண்டும்" என்று. இம்மூன்று பாவங்களில் ஹிம்ஸை இரண்டுக்கும் பொதுவானது; "பிறனுடைய பொருளை யபஹரித்தல்" என்றது மஹாபாரதம் என்ற இதிஹாஸத்தின் விஷயம்; "பிறனுடைய மனைவியை அபஹரித்தல்" என்பது ராமாயணம் என்ற இதிகாஸத்தின் விஷயம். "பிடித்த ராஜ்யத்தை விடாமல் கெட்டான் துர்யோதனன்; பிடித்த பெண்ணை விடாமல் ஒழிந்தான் ராவணன்" என்றார் கௌடில்யர்.

இந்திரன் முதலிய தேவர்கள் ராவணனிடமும் இந்திரஜித்தினிடமும் தோல்வியுற்று, சக்தியற்றவராகித் தம்மை ராவணனிடமிருந்து விடுவிக்கவேண்டுமென்று விஷ்ணுவை வேண்ட விஷ்ணு ராமனாக அவதரித்தார். இந்திரன் என்ற பதத்திற்கு 'பரமேசுவரன்' என்று பெயர்; இப் பரமேசுவரன் ஏன் தன் ஐசுவர்யம் குன்றினவனாய் ஆனான்? இவன் செய்தது கொடும் பாவமே; அப் பாவமும் ராமாயணத்தின்மூல விஷயமாய் சொன்ன 'பரதாராபஹரணம்' என்னும் பிறனுடைய மனைவியைத் தீண்டியதே. இந்திரன் கௌதம மஹரிஷியின் பத்னி அகல்யையின் கற்பை யழித்துக் கெட்டான். இதைவிடப் பெரிய 'பரதாராபஹரண'த்தை ராவணஞ் செய்ய, ராவணனும் அழிந்தான். ஆகையால் அஹல்யையின் கதை ராமாயணத்தில் தற்செயலால் வந்த வீண்போக்குக் கதையல்ல; அது ஸீதையின் கல்யாணத்திற்கு சற்றுமுன் வருவதும் ஒரு பெரிய பொருள் கொண்டதே.

இந்த அஹல்யையின் கதை சொல்ல ஆரம்பிக்குமுன் வால்மீகத்தில் "கதம் பத்ப்யாம் இஹ ப்ராப்தௌ கிமர்த்தம் கஸ்ய வாமுனே" "இந்த ராம லக்ஷ்மணர் யாருக்கு என்ன கார்யம் ஆகவேண்டி, கால்நடையாய் இங்கு வந்திருக்கின்றனர்"—என்றொரு கேள்வி இருக்கிறது. "கால்நடையாய் பகவான் வந்தது கால் தூளியின் மஹிமையை அஹல்யா சாபவிமோசனத்தின்மூலம் காட்டவே" என்பது தெளிவாய் தெரிகிறது.

பகவத்கீதையில் இந்திரிய நிக்ரஹத்தைப் பற்றிச் சொல்லும்போது, "புலன்களை ஆஹாரமின்றி வைததிருந்தால், அவை அவியும்; வெளிப்புலன்கள் அவிந்தும் இன்பங்களின் ருசிமட்டும் உள்ளே தொக்கி நிற்கும்; அதுவும் ருசிகளுக்கெல்லாம் பெரிய ருசியான பரம் பொருளைக் கண்டதும் விட்டுவிடும்" என்று சொல்லி யிருக்கிறது. இவ்வுண்மைக்கும் அஹல்யையின் விருத்தாந்தம் ஒரு உதாஹரணமாகிறது. இந்திரன், தேவராஜன் என்ற குதூஹலத்தாலும், சாபலத்தாலும் கெட்ட தன் மனைவிக்கு கௌதமர் சாபம் கொடுத்தார். சாபம் என்னவென்றால், "நீ இங்கேயே உணவின்றி கடுந்தவம் கிட; ஒருவர் கண்ணிலும் படாமலிரு; இவ்வனத்தில் என்று ராமன் காலடி வைக்கிறானோ அன்று நீ பரிசுத்தை யாவாய்" என்று. உணவின்றி அஹலையைத் தன் புலங்களையவிக்க, பரமனும் அவ்விடம் வந்தான்; அவனைக் கண்டதும் "ரஸோபி அஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே" என்ற உண்மையைக் காட்ட, அஹல்யை அடியோடு பரிசுத்தையானாள். "அவள் பரிசுத்தையானாள், இனி அனைவரும் அவளை வணங்கவேண்டும்" என்று, ராமன் தானே முதலில் அவளுக்கு வணங்கிக் காண்பித்தான்.

இந்திரன் செய்யவெண்ணிய அகார்யத்தைக் குறிக்கவே வால்மீகி முதன்முதல் இந்திரனைச் சொல்லும்போதே 'ஸஹஸ்ராக்ஷன்' என்று குறித்தார். தனக்கு நீதியைச் சொல்

லுவதற்காக ஆயிரம் ரிஷிகளை தனக்குக் கண் போல மந்திராலோசனைக்கு வைத்துக்கொண்டிருப்பதால் இந்திரனுக்கு 'ஸஹஸ்ராக்ஷன்' என்று பெயர். அவர் அனைவரும் தடுத்தும் அஹல்யையிடம் சென்றான் என்று ஏற்படுகிறது. இந்த அஹல்யாதூஷணக் கதையை விரிவாய் எழுதியிருக்கும் மற்றொரு புராணத்திலிருந்து ரஸமாயிருக்கும் ஸம்பவம் ஒன்றை உபந்யாஸகர் இங்குச் சொன்னார். மஹரிஷிகளின் உபதேசத்தைத் தட்டி விட்டு, அஹல்யையைக் குறித்து இந்திரன் வந்துகொண்டிருந்தான். வழியில் ஒரு சண்டாள ஸ்த்ரீ, ஒரு மண்டையோட்டில் நாய் மாம்ஸத்தை கள்ளில் ஊற வைத்து, மயானத்தீயைக் கொண்டு காய்ச்சிக் கொண்டிருந்தாள். இந்திரன் இந்த ஸம்பவத்தைக் கண்டு வியந்து நிற்கையில், அச்சண்டாள ஸ்த்ரீ தோலின் கிழிசல் ஒன்றினால் அந்த மாம்ஸத்தை மூடிக்கொண்டாள். "ஏன் மூடுகிறாய்?" என்று இந்திரன் வினவ, சண்டாளி "பரஸ்த்ரீயை கெடுக்க ஒருவன் இவ்வழியாய் செல்லப்போகிறான். அவன் கண் பட்டால் இவ்வுணவு அசுத்தமாய்விடும்; ஆகையால் மூடிக்கொண்டேன்" என்றாள். இதிலும் தனக்கு அளிக்கப்பட்ட குறிப்பை எடுத்துக் கொள்ளாமல் இந்திரன் சிரித்துவிட்டு, தன் அகார்யத்திற்காகப் போய்விட்டான்.

வே. ரா.



ஸாஹிதீ வல்லபர்
ஸ்ரீமான் T. ஸுந்தராசாரியார்
அவர்கள், B.A., B.L.,